# குமரியும் குன்றமும்

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

பாரதி பதிப்பகம்

தியாகராயநகரம் :: சென்னை - 17

முதற் பதிப்பு: டிசம்பர், 1956
உரிமை பதிவு

48243
5184
031:6y8
J6

விலை ரூ. 2-0-0

சாந்தி பிரஸ், சென்னை-1

# பதிப்புரை

பேராசிரியர் கல்கி அவர்கள் தமிழ்நாட்டின் ஒப்பற்ற கலைச்செல்வர். அவருடையே எழுத்துக்களை பாமரர் - படித்தவர், ஏழை - செல்வந்தர், பாலர் - முதியோர், ஆண் - பெண் அனைவரும் படித்து மகிழ்ந்தார்கள். இந்தியாவில் வேறு யாருக்கும் ஏற்படாத பெருமை கல்கி அவர்களுக்கு ஏற்பட்டது. தமிழில் எல்லா விஷயங்களையும் பற்றி எழுதினார். அரசியல், கலை, இலக்கியம், இசை, நாவல், சிறுகதை, பொருளாதாரம், ஆகிய எல்லாத்துறைகளிலும் ஆதார பூர்வமாகவும், ஆராய்ச்சியோடும், தீர்க்கதரிசனத்தோடும் நகைச்சுவை ததும்பும் எளிய நடையில் எழுதும் ஆற்றல் அவரிடம் அபரிமிதமாக இருந்தது. அத்தகைய பேராசிரியர் இன்று அமரத்துவம் பெற்றுவிட்டார். அவருடைய எழுத்தோவியங்கள் நமக்கு உறுதுணையாக இருந்து புத்துயிர் அளிக்கின்றன. அவர் எழுதியவை அநேகம். அவையெல்லாம் காலத்தால் மறைந்து விடக்கூடாது என எண்ணி, பகுதி பகுதியாகப் பிரித்து வெளியிடக் கருதி, முதல் தொகுதியாக இந்தக் 'குமரியும் குன்றமும்' என்ற நூலை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறோம்.

இத்தொகுதியிலுள்ள கட்டுரைகள் யாவும் 1945 முதல் 1954 ஜனவரி வரை 'கல்கி' இதழில் வெளி வந்தவை. அவ்வப்போது நாட்டிலுள்ள நிலைமைக்கேற்ப எழுதப்பட்டவை. எனவே, காலம் வித்தியாசப்படலாம். எனினும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவை.

இதிலுள்ள கட்டுரைகளைத் தொடர்ச்சியாகப் படிக்கும் போது நம்முடைய நாடு அந்நியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததையும், நமது மாபெரும் தலைவர்களின் சீரிய தலைமையில் எழுந்த மக்களின் தேசீயப் போராட்டங்களும், நாட்டில் அந்த சமயத்தில் குறுக்கிட்ட உள்நாட்டுப் பிரச்னைகளும், பாகிஸ்தான் பிரிவினை, தேசீய பாஷை, மொழிவாரி ராஜ்ய அமைப்பு போன்ற பொது விஷயங்களும், சுதந்திரம் பெற்ற மகிழ்ச்சி, அதைக் கண்ணிலும் இனிதாகப் போற்

றிக் காக்கவேண்டிய கடமை ஆகியவற்றைத் தெளிவாகக் காணலாம். சுருக்கமாகக் கூறினல் இதைப் படிப்பதன் மூலம் இந்திய தேசீய இயக்க வரலாறு முழுவதையும் எளி தில் தெரிந்து கொள்ளலாம்.

அடுத்தபடியாக, 'ஆரியர் - திராவிடர் என்னும் அறி வீனம்!', 'யாரை யார் விரட்டுவது?', 'சாதிவேற்றுமை ஒழிய அன்பு வழியே வழி' என்னும் கட்டுரைகள் தமிழ் நாட்டில் குழப்பத்தை விளைவிக்க முயலும் சுயநலக் கும்பல் களுக்குச் சரியான சவுக்கடி கொடுப்பதைப் போன்றவை. ஆழ்ந்த ஆராய்ச்சியோடும் நிறைந்த புலமையோடும் எழுதப் பட்டவை.

'புதிய தமிழ் நாட்டினுய் வா! வா! வா!' என்னும் கட்டுரை இத்தொகுதிக்கே ஒரு முத்தாய்ப்பு. ராஜ்ய சீரமைப்புக்குப்பின் இன்றைய நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.

குறிப்பாக இத்தொகுதியை இன்னும் எவ்வளவு வேண்டுமானுலும் புகழ்ந்துகொண்டே இருக்கலாம். அவ் வளவு தகுதி வாய்ந்தது.

இதை வெளியிட அன்போடு இசைந்த கல்கி அவர் களின் செல்வக்குமாரன் திரு. ராஜேந்திரனுக்கு இதயம் நிறைந்த நன்றி.

சென்னை - 17
20—12—56

பழ. சிதம்பரன்
உரிமையாளர்: பாரதி பதிப்பகம்

M.A. Lit

MADURAI UNIVERSITY LIBRARY MADURAI-625021

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தேசீய வாரம் | 1 |
| 2. | ஆகஸ்டு தியாகிகள் | 9 |
| 3. | சொர்க்கத்தில் நெருக்கடி | 17 |
| 4. | கடையைக் கட்டுங்கள் | 25 |
| 5. | ரொம்ப ரொம்ப அச்சா ஹை ! | 29 |
| 6. | பிறந்த பயன் பெற்ரேம் ! | 32 |
| 7. | கப்பலோ கப்பல் ! | 44 |
| 8. | பூனைகளின் வேலை நிறுத்தம் ! | 53 |
| 9. | ஞாபகம் வந்தது | 63 |
| 10. | சாது மிரண்டால்....! | 71 |
| 11. | குமரியும் குன்றமும் | 78 |
| 12. | சுவர்க்கப் பிறவிகள் | 82 |
| 13. | இறுதிப் படலம் | 89 |
| 14. | அந்தகாரம் ஒழிந்தது | 95 |
| 15. | வாழ்க சுதந்திரம் ! வாழ்க நிரந்தரம் ! | 103 |
| 16. | கண்ணிலும் இனியது | 106 |
| 17. | ஆரியர்-திராவிடர் என்னும் அறிவீனம் ! | 113 |
| 18. | யாரை யார் விரட்டுவது ? | 120 |
| 19. | சாதிவேற்றுமை ஒழிய அன்புவழியே வழி | 125 |
| 20. | புதிய தமிழ் நாட்டினுய் ! வா ! வா ! வா ! | 134 |

# கல்கியின் நூல்கள்

★

| | | |
|---|---|---|
| அலை ஓசை பரிசு பெற்ற நூல் : | 12 | 8 |
| பார்த்திபன் கனவு | 7 | 8 |
| அபலையின் கண்ணீர் | 1 | 4 |
| பொய்மான் கரடு | 3 | 0 |
| ஏட்டிக்குப் போட்டி | 3 | 0 |
| சாரதையின் தந்திரம் | 3 | 4 |
| மாடத்தேவன் சுனை | 2 | 8 |
| மோகினித் தீவு | 1 | 12 |
| ஒற்றை ரோஜா | 1 | 12 |
| தேவகியின் கணவன் | 1 | 8 |
| நாட்டுக்கொரு புதல்வர் | 1 | 12 |
| நம் தந்தையர் செய்த விந்தைகள் | 1 | 8 |
| பாரதி பிறந்தார் | 3 | 0 |
| ஜமீன்தார் மகன் | 1 | 8 |
| தாகூர் தரிசனம் | 1 | 8 |
| இலங்கையில் ஒருவாரம் | 1 | 8 |
| மூன்று மாதக் கடுங்காவல் | 2 | 0 |
| புன்னைவனத்துப் புலி | 1 | 0 |
| பாங்கர் விநாயகராவ் | 1 | 4 |
| இலங்கைப் பிரயாணம் | 1 | 12 |
| காரிருளில் ஒரு மின்னல் | 1 | 12 |
| திருவழுந்தூர் சிவக்கொழுந்து | 1 | 12 |
| தெய்வ தரிசனம் | 1 | 0 |
| தரம் குறையுமா ? | 4 | 0 |
| திருமகளும் கலைமகளும் | 2 | 8 |
| மகாத்மாவும் மகாகவியும் | 1 | 8 |
| குமரியும் குன்றமும் | 2 | 0 |
| கண்கொள்ளாக் காட்சி | 2 | 0 |
| யார் இந்த மனிதர்கள் ? | 2 | 12 |
| தமிழ் வளர்த்த கல்கி | 2 | 8 |
| பேராசிரியர் கல்கி | 2 | 12 |
| வர்ணனைகள் | 1 | 8 |
| நகைச்சுவை | 1 | 8 |
| இசை விருந்து | 2 | 0 |
| கலைச் செல்வம் | 2 | 0 |
| அமரதாரா | 18 | 12 |
| அமர வாழ்வு | 2 | 4 |
| மகுடபதி | 3 | 8 |
| வீணை பவானி | 2 | 12 |

# தேசீய வாரம்

பாரத நாடு பழம்பெரும் நாடு. இந்தப் பரந்த உலகத்தில் முதன் முதலில் மனித குலத்தின் நாகரிகம் பிறந்தது இந்த நாட்டிலேதான்.

கடவுள் ஞானம் என்பது முதன் முதலில் இந்தப் புண்ணிய பூமியிலேதான் உதயமாயிற்று.

மற்ற நாடுகளில் மக்கள் வனவிலங்குகளைப்போல் வசித்துவந்த காலத்தில் இந் நாட்டில் மக்கள் அறிவிலும் கலை ஞானத்திலும் கடவுள் ஞானத்திலும் சிறந்து விளங்கினார்கள்.

ஐயாயிரம் வருஷத்துக்கு,மேலாக ஒரு சாதி, ஒரு இனம், ஒரு நாகரீகம் என்பது வாழையடி வாழையாகவும் இடையில் அறுபட்டோ அறுந்தோ போகாமலும் தொடர்ந்து வளர்ந்து வந்திருப்பது இந்த ஒரு தேசத்திலேதான்,

பதினாயிரம் வருஷங்களுக்கு முந்தி வேத முனிவர்கள் பாடிய வேத மந்திரங்களை இன்றும் இந் நாட்டில் அதே ஸ்வரத்தில் அதே ஸ்தாயியில், அதே உச்சரிப்புடன் ஓதி வருகிறார்கள்.

ஐயாயிரம் வருஷத்துக்கு முன்னால் ஜனங்களின் நாவில் நடமாடிய பாஷையை - சொற்களை - சொற்றொடர்களை - இன்றளவும் அதேமாதிரி பேசும் ஜனங்கள் இந் நாட்டில் இருக்கிறார்கள்.

நாற்பது கோடி மக்கள் - பாரதத்தாயின் புதல்வர் - புதல்விகள் - இந்நாட்டில் வாழ்கிறோம்.

இவ்வளவு ஜனத்தொகை கொண்ட தேசம் - ஒரு வேளை சீன நாட்டைத் தவிர - இவ்வுலகில் வேறெதுவும் கிடையாது.

இத்தகைய பழம்பெரும் நாடு, புராதன நாகரிகத்தில் சிறந்த நாடு, அறிவாளிகளேயும் ஞானிகளேயும் தர்மாத்மாக் களேயும் வீராதி வீரர்களேயும் தோற்றுவித்த நாடு, இன்றைய தினம் அன்னிய ஆட்சியின்கீழ் அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

நாலரைக் கோடி ஜனத்தொகையே கொண்ட சின்னஞ் சிறு தீவில் தோன்றி உலகத்தையெல்லாம் கட்டி ஆளுகிற ஆங்கிலோ-ஸாக்ஸன் ஜாதியார் இந்தியாவில் நூற்றறுபது வருஷமாக ஆதிக்கம் செலுத்தி ஆட்சி புரிகிருர்கள்.

இந்த அவமானத்தை உள்ளபடி நினைத்துப்பார்த்தால், உணர்ச்சியுள்ள இந்தியன் எவனும் "நெஞ்சு பொறுக்கு திலேயே!" என்று கதருமல் இருக்க முடியாது. கோபத்தி ஞல் கொதிக்காமல் இருக்க முடியாது. ஆத்திரத்திஞல் அலருமல் இருக்கமுடியாது.

* * *

அறுபது வருஷத்துக்கு முன்ஞலேயே இந் நாட்டில் வாழ்ந்த பெரியோர்கள் சிலர், மேற்படி அவமானத்தை உணர்ந்தார்கள். உணர்ந்து அதைத் துடைப்பதற்கு வழி என்ன என்று தேடிஞர்கள். வருங்காலத்தில் இந்தியா சுதந்திரம் அடையப்போகும் திருநாளேக் குறித்துக் கனவு கண்டார்கள். அந்தக் கனவை உண்மையாக்கும் முயற்சி யில் ஈடுபட்டு அதற்காக எத்தனேயோ தியாகங்களேச் செய்தார்கள். எத்தனேயோ கஷ்டங்களே அனுபவித்தார் கள்.

தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, கோபால கிருஷ்ண கோகலே, லாலா லஜபதிராய், பால கங்காதர திலகர், ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலான அந்த மகா புருஷர்களே நாம் என்றென்றைக்கும் மறக்க முடி யாது. மறக்கக் கூடாது.

பிறகு, இன்றைக்கு இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்ஞல், தேச சுதந்திரப் போராட்டத்தில் ஒரு புதிய

அத்தியாயம் ஆரம்பமாயிற்று. அஹிம்சை சத்தியம் என்னும் இரு பெரும் ஆயுதங்களுடனே மகாத்மா காந்தி தேச சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமைவகிக்க முன்வந்தார்.

மகாத்மாவின் வரவினால் தேசத்தில் ஒரு பெரிய ஜீவ சக்தி தோன்றியது. நாட்டு மக்கள் லட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் சுதந்திரப் போரில் ஈடுபடுவதென்று ஏற்பட்டது. சுதந்திரத்துக்காகப் பொதுஜன இயக்கமென்பது அப்போதுதான் முதன்முதலில் ஆரம்பமாயிற்று.

தேச மக்களின் சுதந்திரதாக உணர்ச்சியை அடக்கி ஒடுக்குவதற்காக அதிகார வர்க்கத்தார் ரௌலட் சட்டம் என்று பெயர் பெற்ற அடக்கு முறைச் சட்டத்தை ஏற்படுத்தினார்கள். அந்தச் சட்டத்தை எதிர்க்கும் முறையில் பொதுஜன சுதந்திர இயக்கத்துக்கு மகாத்மா அங்குரார்ப்பணம் செய்தார்.

*1919*-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ம் தேதியன்று தான் முதன் முதலாக இந்திய சுதந்திர இயக்கம் தேசீயப் பொது ஜன இயக்கமாகப் பரிணமித்தது.

அன்றைய தினம் இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையில் நாடு நகரங்களிலெல்லாம் ஹர்த்தால் நடைபெற்றது. வியாபாரிகள் கடைகளை மூடினார்கள். தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். தேசத்தில் சகல ஜனங்களும் அவரவர்களுடைய வேலையை நிறுத்தினார்கள். லட்சக்கணக்கானவர்கள் உபவாசம் இருந்தார்கள். அன்று மாலை தேசமெங்கும் கணக்கற்ற பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன.

இவ்விதம் நாட்டில் முதன் முதலில் புதிதாக எழுந்த ஜனசக்தியானது, தேசமெங்கும் ஒரே கிளர்ச்சியையும் கோலாகலத்தையும் உண்டாக்கியது. அடுத்த ஏழு தினங்கள் தேசமே அல்லோலகல்லோலப் பட்டது.

ஏப்ரல் 13-ம் தேதியன்று இந்தியா தேசம் என்றும் மறக்க முடியாத சம்பவம், வடக்கே அமிர்தசரஸ் நகரில்

ஜாலியன் வாலாபாக் தோட்டத்தில் நடந்தது. அங்கே பதினாயிரக்கணக்காக ஜனங்கள் கூடியிருந்த பொதுக் கூட்டத்தைத் தளபதி டயர் என்னும் மனித உருக்கொண்ட அரக்கன் படையுடன் வந்து வளைத்துக்கொண்டு ஜனங்கள் தப்பவும் வழியில்லாதபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். (பின்னால் நடந்த விசாரணையில் அந்தப் பாதகன் "சுட்டேன்! சுட்டேன்! துப்பாக்கியில் தோட்டா தீரும் வரையில் சுட்டேன்" என்று மார்தட்டிக்கொண்டு கூறினான்).

அன்று அந்தப் புனித ஸ்தலத்தில் இந்தியத் தாயின் புதல்வர்கள் அறுநூறுபேர் இந்தியாவின் சுதந்திரத்துக்காகத் தங்கள் உயிரைப் பலி கொடுத்தார்கள்.

தேசத்தில் நவசக்தி உதயமான அந்த 1919-ம் ஆண்டிலிருந்து பிரதி வருஷம் ஏப்ரல் 6-ம் தேதியிலிருந்து 13-ம் தேதி வரை தேசீய வாரம் என்று கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த வருஷமும் கொண்டாடப்படுகிறது.

சென்ற இருபத்தைந்து ஆண்டு காலத்தில் தேசத்தில் எத்தனையோ காரியங்கள் நடந்துவிட்டன. சுதந்திரப் போராட்டத்தில் சில சமயம் வெற்றிச் சிகரத்துக்கு மிகவும் அருகாமையில் தேசம் வந்ததுண்டு. வேறு சில சமயம் தோல்வியின் அதல பாதாளத்துக்குப் போனதும் உண்டு. ஜனங்கள் அபரிமிதமான குதூகலத்துடன் இருந்த நாட்களையும் கண்டிருக்கிறோம். அடியோடு உற்சாகம் இழந்து சோர்விலே மூழ்கியிருந்த தினங்களையும் பார்த்திருக்கிறோம். நமது தேசத் தலைவர்கள் கிட்டத்தட்டப் பூரண அதிகாரத்துடன் ஆட்சி நடத்திய காலத்தையும் பார்த்திருக்கிறோம். கலப்பற்ற அதிகார வர்க்கத்தின் ஆட்சி எதேச்சையாய் தாண்டவமாடும் காலத்தையும் கண்டு வருகிறோம்.

# ஆகஸ்டு தியாகிகள்

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம்?
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்
கருகத் திருவுளமோ!"

என்று நமது மகாகவி பாடினார்.

ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது இலேசில் கிடைத்து விடக் கூடிய பொருள் அல்ல.

சுதந்திரப் பயிரைக் கண்ணீர்விட்டு வளர்க்க வேண்டும்; சில சமயம் உதிரத்தைவிட்டும் வளர்க்க வேண்டும்.

சுதந்திரத்துக்காக வீடு வாசல்களையும் உடைமைகளையும் தத்தம் செய்யத் தயாரா யிருக்கவேண்டும்.

உயிரைக் கொடுக்கவும் சித்தமாயிருக்க வேண்டும்.

இத்தகைய வீரத் தியாகிகளை எந்த தேசம் பெற்றிருக்கிறதோ, அத்தேசம் பாக்கியம் பெற்ற தேசம்.

அப்படிப்பட்ட நாடு வெகுகாலம் அடிமை நாடாயிருக்க முடியாது.

தேசத்துக்காக உயிரை விடக்கூடிய தியாகிகள் நிறைந்த நாட்டில், அறிவாளிகளும் தீர்க்க திருஷ்டியுள்ளவர்களுமான தலைவர்களும் ஏற்படும்போது, அந்நாடு கட்டாயம் சுதந்திரம்பெறும்; உலகத்தின் முன்னிலையில் மேன்மையுற்று விளங்கும்.

ஆனால் இதற்கெல்லாம் அடிப்படை தியாகந்தான். மக்களின் தியாக உணர்ச்சியின் பேரிலும் தியாகச் செயல்களின்பேரிலுமே ஒரு நாட்டின் சுதந்திர மாளிகை கட்டப்பட வேண்டும்.

நமது பாரத நாடு பாக்கியம் செய்த நாடு.

பல்வேறு காரணங்களினால் இந்தப் பழம்பெரும் நாடு இன்றைக்குத் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டிருந்த போதிலும், இது பாக்கியம் செய்த நாடுதான்.

ஏனெனில், இந் நாட்டில் தியாகிகள் இருக்கிறார்கள்.

தேசத்துக்காக உடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்யக்கூடியவர்கள் இருக்கிறார்கள்.

எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

1921-ம் வருஷத்து ஒத்துழையாமை இயக்கத்தின் போது இது வெளியாயிற்று.

மறுபடியும் 1930-ம் ஆண்டில் நடந்த மகத்தான சத்தியாக்கிரஹ இயக்கத்தின்போது வெளியாயிற்று.

கடைசியாக, சென்ற 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்து எழுச்சியின் போது ஐயந்திரிபற வெளியாயிற்று.

1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் காங்கிரஸ் தலைவர்கள் இந்தியாவின் சுதந்திரத்துக்காக ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பிக்க உத்தேசித்திருந்தார்கள். அதை நடத்தும் அதிகாரத்தை மகாத்மா காந்தியிடம் ஒப்படைத்தார்கள். [ஆனால் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால் வைஸ்ராயோடு ராஜிப் பேச்சு நடத்தவும் மகாத்மாவுக்கு அதிகாரம் தந்தார்கள்]

மகாத்மா காந்தி போராட்டத் திட்டம் எதுவும் வகுப்பதற்கு முன்னால், காரியக் கமிட்டி அதை விவாதித்து முடிவு செய்வதற்கு முன்னால், வைஸ்ராயோடு ராஜிப் பேச்சு நடத்துவதற்கு முன்னால், சர்க்காரே போராட்டத்தைத் துவக்கி விட்டார்கள்.

காந்தி மகானையும் மற்ற காங்கிரஸ் தலைவர்களையும் அவர்கள் திடீரென்று கைது செய்து சிறைப்படுத்திவிட்டார்கள்.

இதனால் தேசமெங்கும் ஒரு பெரும் எழுச்சி உண்டாயிற்று.

தங்களுடைய ஒப்பற்ற தலைவர்கள் இவ்விதம் கைது செய்யப்பட்டதினால் தேச மக்களின் உள்ளம் கொதித்தது. அந்த உள்ளக் கொதிப்பு பலவித ரூபங்களில் வெளியாயிற்று.

மக்களின் உள்ளக் கொதிப்பை வெளிக்கிளம்பாமல் அடக்குவதற்கு பிரிட்டிஷ் சர்க்கார் தரப்பில் மிகப் பயங்கரமான முறைகள் கையாளப்பட்டன.

இந்தப் பயங்கர முறைகளுக்குச் சர்க்கார் யுத்தத்தைக் காரணமாகச் சொன்னார்கள். அதோடு அசந்தர்ப்பமாகவும் அரை குறையாகவும் ஆதாரமில்லாமலும் வெளியிடப்பட்ட ஆத்திரச் சுற்றறிக்கை போன்றவைகளும் காரணமாகச் சொல்லப்பட்டன.

கொடுமையான அடக்கு முறைகளினால் ஜனங்களின் மனக் கொதிப்பு இன்னும் அதிகமாக வளர்ந்தது.

அந்தக் கொதிப்பு சில இடங்களில் விபரீத ரூபத்தைக் கொண்டது. செய்யக் கூடாத காரியங்களும் சில இடங்களில் உள்ளத்தின் உத்வேகத்தினால் செய்யப் பட்டன.

இவற்றின் பயனாக ஜனங்கள் அடைந்த இன்னல்களை அப்பப்பா! சொல்ல முடியாது.

பொருளை இழந்தார்கள்; உடைமைகளை இழந்தார்கள்; வீடு வாசல்களை இழந்தார்கள்; அடிபட்டார்கள்; சிறைப் பட்டார்கள்; சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள். எத்தனையோ பேர், முடிவான தியாகமாகிய உயிர்த்தியாகமும் செய்தார்கள்.

சில சமயம் தவறான காரியங்களையும் நாம் ஒப்புக் கொள்ள முடியாத செயல்களையும் அவர்கள் புரிந்தார்கள்.

ஆனால், தப்பு அவர்களுடையதன்று; அவர்களைத் தப்பு வழியில் செலுத்தியவர்களுடையதே யாகும்.

தவறுகளுக்கு அவர்கள் பொறுப்பாளிகள் அல்ல; தியாகத்துக்கே அவர்கள் பொறுப்பாளிகள்.

மொத்தத்தில் 1942-ம் வருஷத்து ஆகஸ்டு எழுச்சியில், இந்திய மக்களின் உடம்பில் சுதந்திர இரத்தம் ஓடுகிறது என்பது வெளியாயிற்று. அவர்களுடைய இருதயத் துடிப்பில் விடுதலை ஆர்வம் தொனிப்பது வெளியாயிற்று.

அப்பேர்ப்பட்ட வீரத்தியாகிகளை நாம் மனமார வாழ்த்துகிறோம்.

அவர்களுடைய சிந்தையின் வீரத்தைப் போற்றிப் பாராட்டுகிறோம்.

அவர்களுடைய தியாகத்தை வாழ்த்தி வணங்குகிறோம்.

# சொர்க்கத்தில் நெருக்கடி

வீர சொர்க்கத்தில் ஓரே அல்லோலகல்லோலமா யிருந்தது. அவசர அவசரமாகப் பலர் பிரயாணம் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லோரும் பூலோகத்துக்குத்தான் கிளம்பினார்கள். அன்று வீர சொர்க்கத்திலிருந்து பூவுலகத்துக்குக் கிளம்பிய புஷ்பக விமானங்களில் இட நெருக்கடியைச் சொல்லி முடியாது. டிக்கட்டுகள் கறுப்பு மார்க்கெட்டில் ஒன்றுக்குப் பத்து மடங்கு விலைக்கு விற்று வந்தன.

அர்ச்சுனன் என்ன, அபிமன்யு என்ன, இந்திரஜித்து என்ன, கர்ணன் என்ன, விக்கிரமாதித்யன் என்ன, சந்திரகுப்தன் என்ன, அலெக்ஸாண்டர் என்ன, நெப்போலியன் என்ன—இப்படிப்பட்ட வீரர்கள் எல்லாரும் அதிக வேகமாய்ச் செல்லும் வான ரதங்களில் ஏறி பூலோகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஒவ்வொருவரும் புஷ்பம் நிறைந்த பூக்கூடைகளைக் கொண்டு வந்தார்கள். எல்லாரும் டில்லிமா நகரிலுள்ள சிவப்புக் கோட்டைக்கு மேலே வந்து கூடினார்கள். ஒருவரையொருவர் இடித்து நெருக்கித் தள்ளிக் கொண்டு ஆவலோடு கீழே நோக்கினார்கள்.

இவ்வளவும் எதற்காக என்று சொல்லவா வேண்டும்? டில்லி சிவப்புக் கோட்டையில் அன்று ஆரம்பமான இந்திய சுதந்திரப் படையைச் சேர்ந்த வீரர்கள் மூன்று பேரின் விசாரணையை முன்னிட்டுத்தான்!

வீர சொர்க்கத்தில் சாதி வேற்றுமை, இன வேற்றுமை, நிற வேற்றுமை, வயது வேற்றுமை, அரசியல் கட்சி வேற்றுமை ஒன்றுமே கிடையாது. எல்லாரும் ஓரே சாதி, ஓரே இனம், ஓரே வயது, ஓரே கட்சிதான். பூலோகத்திலே பகைவர்களா யிருந்தவர்களும் வீர சொர்க்கத்திலே சிநேகிதர்களே. இந்திரஜித்தும் லக்ஷ்மணனும் அங்கே கை குலுக்கு

வார்கள். அபிமன்யுவும் கர்ணனும் ஆலிங்கனம் செய்து கொள்வார்கள்.

வீர சொர்க்கத்திலே வாழ்கிறவர்களுக்கு வேறு வேலையும் கிடையாது. பூலோகத்திலே வீரச்செயல் புரிந்தவர்களைப் பார்க்கப் போவதும், அவர்கள் தலையில் பூமாரி பொழிவதும், அவர்களை வரவேற்று அழைத்துப் போவதுந்தான் வீர சொர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் முக்கிய வேலை.

* * *

டில்லிமா நகரின் பெயர்பெற்ற சிவப்புக் கோட்டையில் இதோ கோர்ட் கூடுகிறது, இராணுவ ஜட்ஜுகள் ஆஜராகிறார்கள். சர்க்கார் வக்கீல் ஸர். என். பி. என்ஜினியர் இதோ தோன்றுகிறார். எதிரிகளுக்காக ஸ்ரீ புலாபாய் தேஸாய் முதலிய பிரபல வக்கீல்கள் அமர்ந்திருக்கிறார்கள். வக்கீல்களுக்கு மத்தியில் பண்டித ஜவாஹர்லால் நேரு பாரிஸ்டர் உடையில் வீற்றிருக்கிறார். பத்திரிகை நிருபர்கள் கையில் காகிதம் பென்ஸலுடன் தயாராய்க் காத்திருக்கிறார்கள். காமிராக்காரர்கள் படம் பிடிக்கக் குறிபார்க்கிறார்கள்.

அதோ அங்கு வருவது யார்? யாரை உத்தேசித்து இவ்வளவு ஆவலும் பரபரப்பும் ஏற்பட்டிருந்தனவோ அவர்கள்தான்! இராணுவ உடைதரித்த அந்த மூன்று இளைஞர்களும் முன்னும் பின்னும் இராணுவப்போலீஸாரின் பாதுகாப்புடன் வருகிறார்கள்.

அவர்கள் கோர்ட்டுக்குள் வந்தார்களோ இல்லையோ, வானத்தில் அத்தனை நேரமும் நெருக்கியடித்து நின்று கொண்டிருந்த தேவர்கள் தங்கள் தங்களிடமிருந்த புஷ்பக் கூடைகளை அப்படி அப்படியே கவிழ்க்கிறார்கள். மந்தார மலர், பாரிஜாத மலர் முதலிய சொர்க்க லோகத்து புஷ்பங்கள் அவர்கள்மீது மாரியாகப் பொழிகின்றன. கோர்ட்டில் கூடியிருந்த நர மனிதர்களாகிய பத்திரிகை நிருபர்களுக்கு

மேற்படி மலர்மாரி கண்ணில் படாததால் ஆச்சரியம் ஒன்று மில்லை.

சர்க்கார் வக்கீல் ஸர். என். பி. என்ஜினியர் வழக்கை ஆரம்பிக்கிறார். இந்திய சுதந்திரப் படை அமைக்கப்பட்ட வரலாற்றை விவரிக்கிறார். அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் இன்னின்னவென்று சொல்லுகிறார். குற்றம் சாட்டப்பட்டவர்களின் சார்பாக ஸ்ரீ புலாபாய் தேஸாய் மூன்று வாரம் வழக்கை ஒத்திப்போடும்படி கேட்கிறார். கோர்ட்டார் யோசித்து இரண்டு வாரம் ஒத்திப்போட உத்திரவிடுகிறார்கள். கோர்ட்டில் கூடியிருந்த கூட்டம் கலைகிறது. வானத்திலும் தேவர்களின் கூட்டம் கலைந்து செல்கிறது. போகிற தேவர்கள் "ஜே ஹிந்த்" என்று கோஷித்துக் கொண்டு போகிறார்கள். வீர சொர்க்கத்திலும் "ஜே ஹிந்த்" கோஷம் எழுகின்றது.

* * *

இரண்டு வாரம் கழித்து ஒரு தினம் டணார் என்று மணி பத்து அடித்ததும் மறுபடியும் இராணுவக் கோர்ட் கூடும். சாட்சி விசாரணை, குறுக்கு விசாரணை முதலியவை சாங்கோபாங்கமாக நடைபெறும். இராணுவச் சட்டத்தையும் முறைப்படி இராணுவ நீதியையும் அனுசரித்து இராணுவக் கோர்ட்டார் தீர்ப்பு அளிப்பார்கள்.

இந்த விஷயங்களையெல்லாம் பற்றி நாம் இப்போது அபிப்பிராயம் எதுவும் சொல்வதற்கில்லை.

ஆனால் மேற்படி விசாரணை சம்பந்தமாகச் சந்தேக விபரீதங்களுக்கு இடமின்றிச் சுயமாகச் சொல்லக் கூடிய விஷயம் ஒன்றிருக்கத்தான் செய்கிறது.

அது என்னவெனில், மேற்படி இராணுவக் கோர்ட் விசாரணையில் இந்திய மக்களின் அநுதாபமெல்லாம் எதிரிகள் மூன்று பேரிடமுந்தான் இருக்கிறது என்பதே.

மேற்படி மூன்று பேரிடம் மட்டும் அல்ல; இந்திய சுதந்திர சைன்யத்தைச் சேர்ந்தவர்களில் இன்னும் விசா

ரணையை எதிர்பார்த்துச் சிறையிலுள்ளவர்கள் எல்லாரிடமும் தேச மக்களின் அநுதாபம் இருக்கத்தான் செய்கிறது. கோர்ட்டில் என்ன தீர்ப்பு ஆனாலும் இது விஷயத்தில் மக்களின் மனோபாவத்தை மாற்ற முடியாது. அவர்கள் கடுந்தண்டனை பெற்றால், மக்களின் அநுதாபமும் மரியாதையும் அதிமாகத்தான் செய்யும்.

இந்தியப் பொதுமக்களின் மேற்படி மனோபாவத்திற்குக் காரணம் என்ன?

தீரச் செயல்கள் புரிந்த வீரர்களைப் பாராட்டுவது இந்த உலகந்தோன்றிய நாளிலிருந்து மனித சமூகத்தின் வழக்கமாயிருந்து வருகிறது. எதிர்க்கட்சியிலிருந்து போர் செய்தவர்களாயிருந்தாலும் வீரர்களைப் பாராட்டுவது மனித இயற்கை. இந்திரஜித்தையும் கர்ணனையும் வீரர்கள் என்று பாராட்டவில்லையா? இப்போது நடந்த யுத்தத்திலே தளபதி ரோமலின் அஸகாயசூரத்தைப் பாராட்டாதவர்கள் யார்?

எனவே, இந்திய சுதந்திரப் படையைச் சேர்ந்தவர்களையும் வீரர்கள் என்று இந்திய மக்கள் பாராட்டுகிறார்கள். அதுமட்டுமல்ல. இந்தியாவின் சுதந்திரத்துக்காக வீரச் செயல்கள் புரிந்தவர்கள் என்பதாகவும் அவர்களைப் பாராட்டுகிறார்கள். எந்த விசாரணை எப்படி நடந்தாலும், எந்தத் தீர்ப்பு எப்படி ஆனாலும், இந்திய மக்களின் மனோபாவத்தை இது விஷயத்தில் ஒருநாளும் மாற்ற முடியாது.

*     *     *

மேற்படி விசாரணை ஆரம்பித்தாலும் ஆரம்பித்தது, இந்திய சுதந்திரப் படையைப் பற்றிய வரலாற்றை நாம் ஒருவாறு தெரிந்து கொள்ளுதல் சாத்தியமாயிற்று.

சுருக்கமாக, அந்த வரலாறு என்ன?

சென்ற யுத்தத்தின் ஆரம்பகாலத்தில் பிரிட்டிஷார் தோல்விக்குமேல் தோல்வி அடைந்து வந்தார்கள்.

சிங்கப்பூர் ஜப்பானியர் வசப்பட்டபோது, பிரிட்டிஷ் மதிப்பு ரொம்பவும் வீழ்ந்து போயிருந்தது.

1942-ம் வருஷத்தின் முன்பகுதியில் “இந்தத் தடவை யுத்தத்தில் பிரிட்டிஷார் தோற்கத்தான் போகிருர்கள்” என்று இந்தியாவிலும் இந்தியாவுக்கு வெளியிலும் உறுதியாக நம்பினவர்கள் எத்தனையோ பேர்.

தேச பக்தியில் தலைசிறந்த அறிவாளிகள் பலரும் அவ்விதம் நம்பினுர்கள்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தை இந்தியாவின் சுதந்திரத்துக்காக எப்படிப் பயன்படுத்திக்கொள்வது என்ற பிரச்னை எழுந்தது.

தீர்க்க திருஷ்டியுள்ள ஒரு சிலர் எல்லா நிலைமைகளையும் சீர் தூக்கிப் பார்த்து, “இப்போது பிரிட்டிஷார் தோல்வி மேல் தோல்வி அடைந்து வந்தாலும் சீக்கிரத்தில் அவர்களுடைய வெற்றிப்படலம் ஆரம்பமாகும். ருஷியா - அமெரிக்கா தேசங்களின் ராட்சத பலம் பிரிட்டனுக்குக் கை கொடுக்கும். ஆகையால், பிரிட்டிஷ் வெற்றிப் படலம் ஆரம்பிக்கு முன்பே அவர்களிடமிருந்து சாதுர்யமாக அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும். இதற்காக யுத்தத்தில் அவர்களுடன் ஒத்துழைப்பதாகச் சொல்லலாம்; ஒத்துழைக்கவும் செய்யலாம்” என்ருர்கள்.

ஆனல் துரதிர்ஷ்டவசமாக இப்படிச் சொன்னவர்களின் பேச்சு யார் காதிலும் ஏறவில்லை. இவர்களை மிதவாதிகள், பிரிட்டிஷாரின் நண்பர்கள், போராட்டத்துக்குப் பயந்தவர்கள் என்றெல்லாம் பலரும் அவதூறு கூறியது தான் மிச்சமாயிற்று.

அடுத்தபடியாக இன்னொரு சாராரின் அபிப்பிராயம், “யுத்தங் காரணமாக ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் தேசத்திலே பெருங்கிளர்ச்சி நடத்தி பிரிட்டிஷ் சர்க்காரைக் கலங்க அடித்து அரசாங்க இயந்திரத்தைஸ்தம்பிக்கச்செய்து இந்தியாவின்சுதந்திரத்தை ஸ்தாபிக்க வேண்டும்” என்பது.

இந்த அபிப்பிராயத்தின் காரணமாக ஆகஸ்டு இயக்கம் அல்லது கிளர்ச்சி அல்லது எழுச்சி ஏற்பட்டது. அதன் பலாபலன் அனைவரும் அறிந்தவை.

மேற்கூறிய இருவகை அபிப்பிராயங்களையும் தவிர மூன்றாவது அபிப்பிராயமும் ஒன்று இருந்தது. "யுத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஆயுத மெடுத்துப் போர் புரிந்து இந்தியாவின் சுதந்திரத்தைக் கைப்பற்ற வேண்டும்" என்பது மேற்படி மூன்றாவது அபிப்பிராயம். இந்தக் காரியத்துக்கு ஜப்பானியரின் உதவியைப் பெறுவதும் தவறாகாது என்று கருதப்பட்டது. இத்தகைய அபிப்பிராயங் கொண்டவர்களின் தலைவர்தான் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் இப்போது உயிரோடு இருந்தாலும் சரி, அல்லது இறந்து போயிருந்தாலும் சரி, எண்ணற்ற இந்திய மக்களின் உள்ளத்தில் அவர் நெடுங்காலம் சிரஞ்சீவியாய் வாழ்ந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

துணிச்சலான காரியத்தை ஆரம்பித்து அதில் தோல்வியுற்றாலும் வீரனுடைய வீரச் செயலுக்கு எப்போதும் மரியாதை உண்டல்லவா?

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் தமது மனதில் எண்ணியதைக் காரியத்தில் நிறைவேற்றத் துணிந்தார். நாட்டை விட்டு வெளியேறினார். பகைவர் நாடுகளில் பிரயாணம் செய்தார். கடைசியில் மலேயாவுக்கும் பர்மாவுக்கும் வந்தார். சுதந்திர இந்திய அரசாங்கத்தை ஸ்தாபித்தார். சுதந்திர இந்தியப் படை திரட்டினார். அந்தப் படையில் சுமார் 40,000 வீரர்கள் சேர்ந்தார்கள். எல்லாரும் இந்தியர்கள்தான்.

இந்திய சுதந்திரப் படையின் செலவுகளுக்காக ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் 'வரி' விதித்துப் பணம் திரட்டினார். மலாயிலும், பர்மாவிலும் உள்ள இந்தியர்கள் மனமுவந்து கொடுத்தார்கள். கோடிக் கணக்கில் பணம் திரண்டது.

டாங்கி இன்றி, ஆகாச விமானம் இன்றி, தற்கால சாதனங்கள் இன்றி, இந்திய சுதந்திரப் படை வீரர்கள் அஸ்ஸாம் எல்லை வரையில் வந்து போரிட்டார்கள்.

ஜான்ஸி ராணிப்படை' என்பதாக இந்தியப் பெண் மணிகள் அடங்கிய படை ஒன்றும் திரட்டப்பட்டது. இந்தியாவின் சுதந்திரத்துக்காக உயிரைவிடத் துணிந்த பெண்மணிகள் பலர் மேற்படி படையில் சேர்ந்தார்கள்.

இதையெல்லாம் அறியும்போது இந்தியப் பொது ஜனங்களுக்கு எல்லையற்ற வியப்பு உண்டாகிறது. "இப்படியும் நடந்திருக்குமா?" என்று ஆச்சரியம் அடைகிறார்கள். பெருமிதமும் கொள்கிறார்கள்.

யுத்தத்தில் வெற்றி தோல்விகளை நிச்சயமாகக் கணித்துச் சொல்ல முடியாது. ஒரு வேளை பிரிட்டிஷ் கட்சி தோற்றிருந்தால், ஸ்ரீ சுபாஷ் போஸின் சுதந்திர அரசாங்கம் டில்லியில் ஸ்தாபனமாகி யிருக்கலாமல்லவா என்று இந்திய மக்கள் எண்ணுகிறார்கள்.

இராணுவக் கோர்ட்டுகளின் விசாரணையும் தீர்ப்பும் எப்படியிருந்தாலும், பொது மக்களின் மேற்படி மனோபாவத்தை மாற்ற முடியாது.

* * *

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸை ஜப்பானியருடைய கை ஆள் அல்லது பொம்மை என்று சொல்வது பெரும் பிசகு. வெறும் கையாளாகவோ பொம்மையாகவோ இருப்பதென்றால் அவர் இத்தனை கஷ்டப்பட்டிருக்க வேண்டியதில்லை. இந்திய சுதந்திரப்படை திரட்டியிருக்க வேண்டியதில்லை.

இந்தியாவிலே பிரிட்டிஷாருக்குப் பதில் ஜப்பானியர் வந்து உட்கார்ந்து கொள்ளப்போகிறார்களே என்ற கவலையுடனேயே அவர் சொந்தப் பொறுப்பில் இந்திய சுதந்திரப் படை திரட்டியிருக்கிறார் என்பது மிகத் தெளிவான விஷயம்

ஸ்ரீ சுபாஷ் பாபுவையும் இந்திய சுதந்திரப்படையினரையும் தேசத்துரோகிகள் என்றோ, ஜப்பானிடம் தேசத்தைக் காட்டிக் கொடுக்கப் பார்த்தவர்கள் என்றோ ஒரு நாளும் இந்திய மக்கள் கருதமாட்டார்கள்.

இந்தியாவின் சுதந்திரத்துக்காகத் தீரத்துடன் போராடத் துணிந்த வீரர்கள் என்றே போற்றுவார்கள்.

இராணுவக் கோர்ட்டு விசாரணைகளில் அவர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு தண்டனை அதிகமாகிறதோ, அவ்வளவுக்கு அவர்கள் மீதுள்ள மரியாதை பொது மக்களுக்கு அதிகமாகும், அது பக்தியாகவும் மாறும்.

டில்லி செங்கோட்டையில் ஆரம்பமான விசாரணையை இரண்டு வாரத்துக்குத் தள்ளிப் போட்டிருப்பது பலவிதங்களில் அநுகூலமான விஷயம்.

பொதுமக்களின் உணர்ச்சியை இந்திய சர்க்கார் அறிந்துகொண்டு அதற்கேற்ப இதுவிஷயத்தில் தங்கள் கொள்கையை வகுத்துக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

ஒன்று, எல்லா வழக்குகளையும் வாபஸ் வாங்கிக் கொண்டு இந்திய சுதந்திரப் படையினர் எல்லாரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.

அல்லது நாட்டின் சிறந்த தலைவர்கள் சிலர் யோசனை சொல்லியிருப்பதுபோல் வரப்போகும் தேசீய சர்க்காருக்கு இந்த விஷயத்தை விட்டுவிட வேண்டும். விசாரணைகளைத் தவணை யின்றி ஒத்திவைக்க வேண்டும்.

இந்த இரண்டில் ஒரு காரியத்தை பிரிட்டிஷ் சர்க்கார் தைரியமாய்ச் செய்யாவிட்டால், தேச மக்களின் மனக்கசப்பும் கொதிப்பும் நாளுக்கு நாள் வளர்ந்து, இந்திய அரசியல் பிரச்னை நல்ல முறையில் தீர்வதையே அசாத்தியமாகச் செய்துவிடலாம் என்று அஞ்சுகிறோம். பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் நிரந்தரமான சிநேக உடன்படிக்கை ஏற்படுவதும் அசாத்தியமாய்ப் போய்விடக்கூடும்.

# கடையைக் கட்டுங்கள்

இந்திய மக்கள் தீர்ப்புக் கூறிவிட்டார்கள்.

தங்களுடைய விருப்பம் இது என்பதையும் தெரியப் படுத்திவிட்டார்கள்.

ரொம்ப ரொம்ப தயவாகவும் தர்ம நியாயமாகவும் சட்ட ரீதியாகவும் இங்கிலீஷ்காரர்களைப் பார்த்து "கனதனவான்களே! உங்களுடைய கடையைக் கட்டுங்கள்!" என்று சொல்லிவிட்டார்கள்.

"கடையைக் கட்டுங்கள்; உடனே நடையைக் கட்டுங்கள்!" என்றும் ஸ்பஷ்டமாகக் கூறிவிட்டார்கள்.

இந்திய மக்களின் விருப்பம் இது, வேண்டுகோள் இது, கட்டளை இது, தீர்ப்பும் இதுவே என்பதும் சமீபத்தில் நாடெங்கும் நடந்து முடிந்த இந்திய சட்ட சபைத் தேர்தல் மூலம் ஐயமற வெளியாகியிருக்கிறது.

* * *

இங்கிலீஷ்காரர்கள் இருநூறு வருஷத்துக்கு முன்னால் வியாபார நிமித்தம் இந்தியாவுக்குத் தோளில் துணி மூட்டையைச் சுமந்து கொண்டு வந்தார்கள். மூட்டையை விரித்துக் கடையை வைத்தார்கள்; வியாபாரம் செய்தார்கள்.

வியாபாரம் செய்து நாலு துட்டு சம்பாதித்துக்கொண்டு போகவந்த இடத்தில் அவர்களைத் தேடிக்கொண்டு அதிர்ஷ்டம் வந்து சேர்ந்தது. அவர்களுடைய அதிர்ஷ்டத்தினாலோ, அல்லது இந்தியாவினுடைய துரதிருஷ்டத்தினாலோ, அவர்கள் வந்த வேளையில், இந்தியா தேசம் பற்பல இராஜ்யங்களாகச் சிதறிப் பலஹீனமுற்றுக் கிடந்தது. இந்த நிலைமையைத் தங்கள் வியாபாரத்துக்கு அனுகூலமாக உபயோ

கப்படுத்திக்கொள்ள இங்கிலீஷ்காரர்கள் முயன்றார்கள். அந்த முயற்சி முடிவில் அவர்களுக்கு இந்திய சாம்ராஜ்யத்தையே அளித்து விட்டது. வியாபாரம் செய்ய வந்தவர்கள் இராஜ்ய பாரத்தையே வகிக்கும்படி ஆயிற்று.

இங்கிலீஷ்காரர்களின் ஆளுகையினால் இந்தியா சில நன்மைகளை அடைந்தது. ஆனால் அந்த நன்மைகள் அத்தனையும் சேர்ந்தாலும், இந்தியா சுதந்திரத்தை இழந்து அரசியல் அடிமைத்தனத்துக்கு ஆளான தீமைக்குப் பரிகாரம் ஆகாது என்பதை இந்நாட்டின் அறிவாளிகள் அறுபது வருஷத்துக்கு முன்னால் கண்டார்கள்.

இந்தியாவின் சுதந்திரக் கிளர்ச்சி நாளுக்கு நாள் வலுப்பெற்று வந்து கடைசியாக 1929-ம் வருஷத்தில் லாகூர் காங்கிரஸ் பூரண சுதந்திரத் தீர்மானமாக உருவெடுத்தது.

அதாவது, பச்சைத் தமிழில் "இங்கிலீஷ்காரர்களே! இருநூறு வருஷம் நீங்கள் இந்தியாவில் வியாபாரமும் இராஜ்ய பாரமும் செய்தது போதும். கடையைக் கட்டுங்கள்!" என்று இந்திய மக்கள் கேட்டுக்கொண்டார்கள்.

ஆனால் இந்த 1929-ம் வருஷத்துக் கோரிக்கையானது, இங்கிலீஷ்காரர்களைக் கடையைக் கட்டச் சொன்னபோது "கடையைக் கட்டிவிட்டு உடனே நடையையும் கட்டுங்கள்" என்று சொல்லிற்று, இல்லையா என்பதைப்பற்றிக் கொஞ்சம் சந்தேகிக்க இடமிருந்தது.

கடைசியாக, சென்ற 1942-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில், ஐயந்திரிபுக்கு இடமில்லாமல், இங்கிலீஷ்காரனை இந்தியாவைக் காலிசெய்து விட்டு வெளியேறச் சொல்லி, திட்டமான 'குவிட் இந்தியா!' தீர்மானம் நிறைவேறியது.

அவ்வளவுதான்! இங்கிலீஷ்காரர்களுக்கு ரோஷம் பொத்துக்கொண்டது; ஆங்காரம் பொங்கியது. "அப்படியெல்லாம் இந்தியாவைக் கைவிட்டு விடமாட்டோம். பாரத

நாட்டைப் பாதுகாத்தே தீர்வோம்'' என்றார்கள். அதற்காக என்னவெல்லாமோ எப்படி எப்படி எல்லாமோ செய்தார்கள்.

கடைசியாக யுத்தம் ஒரு வழியாக முடிவடைந்தது.

மறுபடியும் இந்திய மக்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

அதாவது இந்திய சட்டசபைத் தேர்தல் வந்தது.

இங்கிலீஷ்காரர்களே ஏற்படுத்திய தேர்தல்தான். அதிலே இந்திய மக்கள் கூறிய தீர்ப்பு என்ன?

இந்தியாவை விட்டு இங்கிலீஷ்காரர்களைப் போகச் சொன்ன காங்கிரஸ் தீர்மானந்தான் சரி என்று தீர்ப்பு அளித்து, "போங்கள் வெளியே! தொலைந்து போங்கள்!" என்று கேட்டுக்கொண் டிருக்கிறார்கள்.

நாடெங்கும் உள்ள பொதுத் தேர்தல் தொகுதிகளில் பாதி ஸ்தானங்களுக்கு மேல் காங்கிரஸ் அபேட்சகர்களுடன் போட்டியிடவே யாரும் முன்வரவில்லை. போட்டி நேர்ந்த இடங்களில் எல்லாம் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு அமோகமான வெற்றி; அபரிமிதமான வோட்டுகளினால் வெற்றி.

இதுவரை பொதுத் தேர்தல் தொகுதிகளில் ஒரு ஸ்தானத்தைக் கூடக் காங்கிரஸ் இழந்து விடவில்லை.

அநேக இடங்களில் எதிரி அபேட்சகர்கள் டெபாஸிட்டுகளையே இழந்து விட்டார்கள்.

* * *

பொதுத் தேர்தல் தொகுதிகளில் சரிதான்; ஆனால் முஸ்லிம் தொகுதிகளின் விஷயம் என்ன?

முஸ்லிம் தொகுதிகளில் முஸ்லிம் லீக் வெற்றி பெற்றிருக்கிறது.

பொதுத் தொகுதிகளில் காங்கிரஸின் எதிரிகள் டெபாஸிட்டுகளை இழந்ததுபோல் ஜனாப் ஜின்னாவை எதிர்த்தவர்களும் டெபாஸிட்டை இழந்திருக்கிறார்கள்.

சரி; இந்தக் காரணத்தினுல் இங்கிலீஷ்காரர்கள் கடையைக் கட்டாமல் இங்கேயே தங்கியிருப்பதற்கு இடம் உண்டா?

கிடையவே கிடையாது.

பத்து கோடி முஸ்லிம்கள் ஜனுப் ஜின்னுவை ஆதரிப்ப தாக வைத்துக் கொண்டாலும் பத்துகோடி பேருக்காக மற்ற முப்பது கோடி மக்களின் விருப்பத்தைப் புறக்கணிக் கலாமா?

ஜனநாயகம் என்பதின் சாராம்சம் பெரும்பான்மை மக் களின் தீர்ப்புக் கிணங்கக் காரியம் செய்வதுதான்.

அப்படித்தான் சிறு பான்மையோர் என்ன சொல்லி யிருக்கிருர்கள்?

ஜனுப் ஜின்னு கட்சிக்கு வோட்டுக் கொடுத்தவர்கள் இங்கிலீஷ்காரர்கள் இந்தியாவிலேயே இருப்பதற்கு வோட் டுக் கொடுத்திருக்கிருர்களா?

ஒரு நாளும் இல்லை.

சுதந்திர இந்தியாவில் தங்களுக்கு ஒரு சுதந்திரமான பகுதி வேண்டும் என்றுதான் கேட்டிருக்கிருர்கள்.

நல்லது; உண்மையில் இது ஒன்றுதான் இங்கிலீஷ் காரர்கள் கிளம்புவதற்குத் தடை என்று இருக்கும் பட்சத் தில் முஸ்லிம்கள் பெரும்பாலாக உள்ள பிரதேசத்தைத் தனியே பிரிக்கட்டும். தனித் தனியாக இரண்டு பகுதிகளுக் கும் சுதந்திரம் கொடுத்துவிட்டு நடையைக் கட்டட்டும்.

இத்தனை நாள்—இருநூறு வருஷகாலம்—இந்தியா வைக் கட்டிக் காத்தது போதுமே? இன்னும் எதற்காகப் பிராணனை விடவேண்டும்?

# ரொம்ப ரொம்ப அச்சா ஹை!

ஹிந்துஸ்தானி ஹமாரா ராஷ்டிர பாஷா ஹை; மகாத்மா காந்திஜினே ஹிந்துஸ்தானி பிரசார் கேலியே மதராஸ்கோ ஆகயே ஹை(ம்). இஸீலியே, நாம் ஹிந்துஸ் தானி கற்றுக்கொள்வது மிகவும் அவசிய ஹை! காந்தி மகான் 'கொஞ்சம் கொஞ்சம்' தமிழ் கற்றுக்கொண்டிருப் பதுபோல் நாமும் 'தோடா தோடா' ஹிந்துஸ்தானி கற் றுக் கொண்டிருப்பது அச்சா ஹை! பஹுத் அச்சா ஹை! ரொம்ப ரொம்ப அச்சா ஹை!!

என்னதான் ராஷ்டிர பாஷையில் சொன்னாலும், நம் முடைய சொந்தத் தாய் மொழியிலே 'ரொம்ப ரொம்ப' என்று போட்டால்தான் மனஸுக்குத் திருப்தி ஏற்படு கிறது அல்லவா?

*　　　*　　　*

சென்னை வாசிகள் ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டசாலிகள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இந்தத் தடவை காந்தி மகாத்மாவின் சென்னை விஜயம் அவ்வளவு ரொம்ப ரொம்ப அச்சாவாக அமைந்துவிட்டது. முன்னேயும் சில தடவை மகாத்மா சென்னைக்கு வந்திருக்கிறார். அப்போ தெல்லாம் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரே ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடைபெறும். கணக்கில்லாத ஜனங்கள் மகாத்மாவைப் பார்ப்பதற்காகக் கூடுவார்கள். பெரும்பாலோர் எங்கேயோ வெகுதூரத்தில் நிழல் படத் தைப் போல் தோன்றும் காந்திஜியின் உருவத்தைப் பார்ப் பார்கள். ஏற்கெனவே படங்களிலே பார்த்திருப்பதை நினைத்துக்கொண்டு 'அவர்தான் காந்தி மகானாயிருக்க வண்டும்' என்று ஒருவாறு முடிவு கட்டிக்கொள்வார்கள்.

காந்தி மகான் பேசுவதாகத் தோன்றும் பிரம்மாண்டமான கூட்டத்தின் இரைச்சலில் அது தெளிவாய்க் காதில் விழாது. காதில் விழுந்தாலும் இன்ன விஷயம் என்று தெரியாது. இதற்குள்ளாகக் கூட்டம் முடிந்து விடும். "ஏதோ காந்தி மகானைத் தரிசித்தோம்" என்ற திருப்தியுடன் சிலரும், "காந்தி மாகானைத் தரிசித்தவர்களைத் தரிசித்தோம்" என்ற திருப்தியுடன் பாக்கிப் பேரும் வீடு திரும்புவார்கள்.

கடைசியாக ஒன்பது வருஷத்துக்கு முன்பு மகாத்மா சென்னைக்கு வந்திருந்தபோது அவ்வளவு அதிர்ஷ்டம் கூடச் சென்னை வாசிகளுக்குக் கிட்டவில்லை.

காந்தி மகான் பொதுக்கூட்டத்தின் மேடைக்கு வந்தவுடனே, கூட்டத்தில் ஒரு பகுதியினர் மேடைக்கு அருகில் காலியாயிருந்த ஒரு சிறு இடத்தை நோக்கி முன்வரத் தொடங்கினார்கள். அவ்வளவுதான்! கூட்டம் முழுவதும் ஒரேயடியாகத் திரண்டு, மேடையை நோக்கி முன்னேறி வரத் தொடங்கியது. அதன் பயனாக ஐந்தே நிமிஷத்தில் கூட்டம் முடிவுற்றது. கூட்டத்துக்கு எவ்வளவோ ஆவலுடன் வந்திருந்த லட்சக் கணக்கான ஜனங்கள் காந்திஜியைச் சரியாகத் தரிசிக்கக்கூட முடியாமல் போய்விட்டது.

மேற் சொன்ன பழைய அனுபவங்களுக்கெல்லாம் மாறாக, இந்தத் தடவை காந்தி மகாத்மா பத்து நாளைக்கு மேல் சென்னை நகரில் தங்கியிருந்தார். சென்னை நகர் வாசிகளும் வெளியூர்களிலிருந்து வந்தவர்களும் ஆயிரம் பதினாயிரம் லட்சம் என்ற கணக்கில் திரள் திரளாகத் திரண்டு வந்து மகாத்மாவைத் தரிசித்தார்கள்.

ஒவ்வொரு நாளும் காந்தி மகாத்மாவை ஜனங்கள் கண் குளிர மனங் குளிரக் கண்டு ஆனந்திப்பதற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தன. அந்தந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு பலர் வந்து காந்திஜியைக் கண்டு களித்தார்கள். பகல் வேளையில் 'பாஸ்' வாங்

இக் கொண்டு ஹிந்துஸ்தானி நகருக்கு வந்து மகாத்மாவைத் தரிசித்தார்கள். சாயங்கால நேரத்தில் சுதந்திரமாக வந்து பிரார்த்தனையின்போது அவரைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

* * *

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்னும் தமிழ் முது மொழியை லட்சக்கணக்கானவர்கள் கடைப்பிடித்து, உலகத்திற்குள்ளே உத்தம புருஷராக விளங்கும் பெரு மானைக் காண்பதால் அடையும் நன்மையை அடைந் தார்கள்.

அடுத்தபடியாக "நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே' என்ற முதுமொழி தொடர்ந்து வருகிறதல்லவா? இந்த மூதுரையின்படி காந்தி மகாத்மாவின் பொன் மொழிகளைக் கேட்பதால் அடையக்கூடிய நன்மையையும் அநேகர் அடைந்தார்கள். நேர்முகமாக அவர் சொல்வதைக் கேட்டு அறிந்துகொள்ள முடியாதவர்கள். மறுநாள் தினசரிப் பத் திரிகைகளிலே படித்து அறிந்தார்கள். அல்லது பிறரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள்.

எனினும், அந்த உலகம் போற்றும் அவதார மூர்த்தி யின் உபதேசங்களை நேரிலேயே கேட்டு உணர்ந்து பயன் அடையும் பாக்கியத்தைச் சென்னை மக்கள் பூரணமாக அடையவில்லையென்றே சொல்ல வேண்டும்.

இதற்குக் காரணமாயிருந்தவர் ஒரே ஒரு தனிப்பட்ட மனுஷர் என்பது வியப்பளிக்கும் விஷயந்தான். ஆனாலும் அது உண்மை. மகாத்மா விஜயத்தின் மூன்றாவது நாள் மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஒரு ஆந்திர சகோதரர் குறுக்கிட்டு எழுந்து நின்று, "மகாத்மா ஹிந்துஸ்தானியில் பேசுவதைத் தமிழிலே மொழி பெயர்த்துச் சொல்வது போல் தெலுங்கிலும் மொழிபெயர்த்துச் சொல்ல வேண் டும்" என்று கேட்டார். மகாத்மாவே, அவரை உட்காரும் படி சொல்லியும் அவர் உட்காரவில்லை. திருப்பித்திருப்பி "சென்னை இரண்டு பாஷைக்குரிய நகரம்; ஆகையால்

தெலுங்கிலும் மொழி பெயர்த்தே ஆகவேண்டும்" என்று சொல்லிக்கொண்டிருந்தார். இந்தக் கோரிக்கையை அவர் மகாத்மாவுக்கு எழுதி அனுப்பியிருக்கலாம். அல்லது தனிப் பட வந்து சொல்லியிருக்கலாம். லட்சம் பேர் உள்ள கூட்டத்தில் நடுவில் எழுந்து நின்று எவ்வளவு சொல்லியும் கேட்காமல் தொல்லை கொடுத்ததால் மகாத்மாவின் மனம் பெரும் வேதனைக்குள்ளாயிற்று. "இனிமேல் மொழி பெயர்ப்பே வேண்டியதில்லை. ஹிந்துஸ்தானியில் நான் பேசுவதைத் தெரிந்து கொள்பவர்கள் தெரிந்துகொள்ளட்டும். மற்றவர்கள் பத்திரிகையில் பார்த்துக்கொள்ளட்டும்" என்று சொல்லி விட்டார்.

மேற்படி ஆந்திர சகோதரர் "எனக்கு இரண்டு கண்ணும் போனாலும் போகட்டும்; அடுத்த வீட்டுக்காரனுக்கு ஒரு கண் போனால் சரி" என்ற தோரணையில் நடந்து கொண்டார். மகாத்மாவின் உள்ளம் புண்படுவதைக் கூட அவர் பொருட்படுத்தவில்லை. எப்படியாவது சென்னை நகரில் ஆந்திரர்களின் பாத்தியதையை நிலை நாட்டிவிட வேண்டுமென்று அவர் பிடிவாதங்கொண்டிருந்ததாகக் காணப்பட்டது. இப்படிப்பட்ட காரியத்தை ஆந்திரத் தலைவர்கள் யாரும் கண்டித்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லையென்பதையும் கவனிக்க வேண்டும்.

மேற்படி சம்பவத்தினால் மாலைப் பிரார்த்தனைக்குக் கூடிய லட்சக்கணக்கான ஜனங்கள் மகாத்மாவின் அமுத மொழிகளை உடனுக்குடனே தெரிந்து பயன்பெற முடியாமற் போயிற்று. என்றாலும் "எல்லாம் ஒரு நன்மைக்கே!" என்பதற் கிணங்க, அந்த ஆந்திர மகானுபாவுடுவின் காரியத்தினாலும் ஒரு நன்மை ஏற்பட்டது. அதாவது, மகாத்மா இந்தத் தடவை சென்னைக்கு எந்த முக்கியமான காரியத்துக்காக விஜயம் செய்தாரோ, அதை எல்லாருடைய மனதிலும் நன்றாகப் பதியும்படி செய்வது சாத்தியமாயிற்று.

இந்தத்தடவை மகாத்மா காந்தியின் சென்னை விஜயம் முக்கியமாய் தேசீய பாஷையாகிய ஹிந்துஸ்தானி பிரசார சம்பந்தமாக ஏற்பட்டதாகும்.

இந்தியா தேசம் முழுவதற்கும் பொதுவாக ஒரு தேசீய பாஷை அவசியம் என்பதும், அப்படித் தேசீயப் பொது பாஷையாகக் கூடியது ஹிந்துஸ்தானியைத் தவிர வேறில்லையென்பதும் புதிய விஷயங்கள் அல்ல. பலதடவை பலரும் கூறி எல்லாரும் ஒப்புக் கொண்ட உண்மைகள். அகில இந்திய ஒற்றுமையை முன்னிட்டு ஹிந்துஸ்தானிப் பிரசாரத்தில் மகாத்மாவுக்குள்ள சிரத்தையும் நாம் அனைவரும் அறிந்ததே. அவருடைய விருப்பத்தினாலே தான் சென்னையில் ஹிந்தி பிரசார இயக்கம் ஆரம்பமாயிற்று. அவருடைய இடைவிடாத சிரத்தையினாலும் ஆசியினாலும் தான் தென்னாட்டில் ஹிந்துஸ்தானி இவ்வளவு தூரம் பரவியிருக்கிறது.

இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் தமிழ்நாட்டில் ஹிந்துஸ்தானி தெரிந்த தமிழர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். இப்போது ஹிந்துஸ்தானி தெரிந்த தமிழர்கள் ஆயிரக்கணக்கிலும், பதினாயிரக்கணக்கிலும் இருக்கிறார்கள். பலர் பரீட்சையில் தேறிப் பட்டமும் பெற்றிருக்கிறார்கள்.

ஆனால் இந்த அபிவிருத்தி போதுமா? இதனால் மகாத்மா காந்தி திருப்தி அடைந்து விட்டாரா?

தென்னாட்டினர் போதிய அளவு ஹிந்துஸ்தானி கற்றுக் கொள்ளவில்லை என்பது பற்றி மகாத்மா பல முறை தமது மனக்குறையைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்.

முதன் முதலில் யாருடைய கிரஹத்தில் சத்யாக்கிரஹ இயக்கம் ஆரம்பமாயிற்றோ, அப்பேர்ப்பட்ட ராஜாஜியே இன்னும் ஹிந்துஸ்தானி பாஷையில் பிரசங்கம் செய்யக் கற்றுக்கொள்ளவில்லையே என்று மகாத்மா குறைப் பட்டார்.

காங்கிரஸ் பிரமுகர்களும் ஊழியர்களும் சுமார் 500 பேர் கூடியிருந்த கூட்டத்தில் " ஹிந்துஸ்தானி தெரிந்தவர் எத்தனை பேர்?" என்று கேட்டபோது 15 பேர்தான் கை தூக்கினார்கள்! இது மகாத்மா காந்தியைத் தூக்கிவாரிப் போட்டிருக்க வேண்டும்.

ஆனால் சென்னை நகர வாசிகளும் சரி, சென்னை காங்கிரஸ் வாதிகளும் சரி, ஹிந்துஸ்தானி விஷயத்திலாவது மகாத்மாவின் மனமார்ந்த விருப்பத்தை நிறைவேற்றுவதிலாவது அசிரத்தை கொண்டவர்கள் என்று சொல்ல முடியாது. பின்னர், தேசீய பாஷை அபிவிருத்தி தென்னாட்டில் இவ்வளவு நிதானமான வேகத்தில் நடந்து வருவதின் காரணம் என்ன?

மனுஷர்கள் ஒரு பிராயத்தைக் கடந்து விட்டால் புதிய பாஷை ஒன்றைக் கற்றுக் கொள்வது அவ்வளவு எளிய காரியமல்ல வென்பதுதான் காரணம். எவ்வளவுதான் விருப்ப மிருந்தாலும் சிரத்தையிருந்தாலும் இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் புதிய பாஷை பயிலுதல் சாதாரணமாகச் சுலப சாத்தியமாயிருப்பதில்லை. கஷ்டசாத்தியமாகக் கூட இருப்பதில்லை.

வடநாட்டார் எத்தனைபேர் தமிழ் பாஷை கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தோமானால் மேற்படி கஷ்டம் நன்கு புலனாகும். ஏன்? தமிழ் மொழியில் எவ்வளவோ ஆர்வமுள்ள மகாத்மாவினாலேயே எவ்வளவு தூரம் தமிழ் கற்க முடிந்திருக்கிறது?

"இளமையிற் கல்" என்னும் முதுமொழியானது முக்கியமாக இன்னொரு பாஷையைக் கற்கும் விஷயத்தில் நன்கு பொருந்தும். இதையறிந்துதான் ராஜாஜி இந்த மாகாணத்தில் பிரதம மந்திரியாயிருந்த போது பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக ஹிந்தி கற்பிக்க ஏற்பாடு செய்தார். அப்போது ஏற்பட்ட பல நல்ல திட்டங்களைப்போல் அதுவும் அற்பாயுள் திட்டமாகப் போயிற்று.

இப்படியெல்லாமிருந்த போதிலும்—அதாவது, பிராயம் வந்தவர்கள் பிற பாஷை கற்பதில் எவ்வளவோ கஷ்டம் இருந்தபோதிலும்—மகாத்மா காந்தியின் விருப்பத்தை முன்னிட்டும் அகில இந்தியாவின் ஒற்றுமையை முன்னிட்டும், தென்னிந்தியர், முக்கியமாகத் தமிழ்மக்கள், ஹிந்துஸ்தானி கற்றுக் கொள்வதற்கு ஒரு பெரும் பிரயத்தனம் செய்தேயாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

ஊக்கத்துடன் மனம்வைத்துப் பிரயத்தனம் செய்தால் முடியாத காரியமல்ல என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் நாம் சொல்ல முடியும். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசி ஸ்ரீ என். அண்ணாமலைப்பிள்ளை அவர்கள் சமீபத்தில் ஹிந்துஸ்தானி பரீட்சையில் தேறி அத்தாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறார்! ஸ்ரீ அண்ணாமலைப்பிள்ளை அவர்கள் சாதித்த காரியம் மற்றவர்களுக்கு ஏன் கைகூடாமல் போக வேண்டும்? உண்மையான ஊக்கமும் விடாமுயற்சியுந்தான் தேவை.

ஹிந்துஸ்தானி பிரசாரத்தினாலோ ஹிந்துஸ்தானி கற்பதினாலோ நமது தாய்மொழிக்கு எத்தகைய பாதகமும் நேரிடாது என்பது பலமுறை வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

காந்தி மகாத்மாவும் சமயம் நேரும்போதெல்லாம் தாய்மொழியின் முக்கியத்தை வற்புறுத்தி வருவதைப் பார்க்கிறோம். "தாய்மொழிக்குத்தான் முதன்மை ஸ்தானம், தேசீய பாஷைக்கு அடுத்த முக்கிய ஸ்தானந்தான்" என்று மகாத்மா அடிக்கடி சொல்லி வருகிறார். தேசீய பாஷையானது தாய் மொழியின் இடத்தை ஆக்கிரமிப்பதையோ அதனால் தாய்மொழி எந்த விதத்திலும் பாதகம் அடைவதையோ மகாத்மா ஒரு நாளும் விரும்பமாட்டார்.

எனவே, தமிழ் மக்கள் ஹிந்துஸ்தானி பாஷை கற்பதில் முன்னைக் காட்டிலும் அதிக சிரத்தைகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

# பிறந்த பயன் பெற்றோம் !

மகான் என்று சொன்னார்கள்; சத்தியம் தவறாத உத்தமர் என்று சொன்னார்கள்; பாரத தேசத்தை வாழ்விக்க வந்த பரம புருஷர் என்று பாராட்டினார்கள்; தியாகமே உருவெடுத்தவர் என்று பரவசப்பட்டார்கள்; உலகம் உய்ய வந்த அவதார மூர்த்தி என்று சொல்லி ஆனந்தப் பட்டார்கள்.

அப்பேர்ப்பட்டவரைத் தமிழர்களாகிய நாம் இதயம் நிறைந்த அன்போடு வரவேற்றோம். கங்குகரையில்லாத உற்சாகத்துடன் நல்வரவு கூறினோம். நமது முன்னோர் செய்த புண்ணியத்தினால் வந்த அதிதி என்று எண்ணி உபசரித்தோம். அவருடைய பிரார்த்தனைக் கூட்டங்களுக்குச் சென்று அவருடைய விருப்பத்தின்படி ராமநாம பஜனை செய்தோம். ஹிந்துஸ்தானி பிரசாரம், ஹரிஜன சேவை முதலிய திருப்பணிகளுக்காகக் காலணா முதல் ஆயிரக்கணக்கான ரூபாய் வரையில் பணமும் கொடுத்தோம்.

அதிதி, எல்லா உபசாரங்களையும் வரவேற்புகளையும் பெற்றுக்கொண்டார்; காலணாக்களையும் ரூபாய்களையும் கணக்குப் பார்த்து எடுத்துக்கொண்டார்.

தமிழ் நாட்டில் பதினைந்து நாள் இருந்து விட்டுத் திரும்பிச் சென்றார்.

ஆனால் போகும் போது வெறுமனே சென்றாரா ?— இல்லை !

ஒரு பெரிய கொள்ளையுடனே திரும்பிச் சென்றார் !

தமிழ் மக்களின் இருதயங்களை அவர்கள் அறியாமலே கொள்ளை கொண்டு போய்விட்டார் !

பெரிய கொள்ளைக்காரர் அவர் !

சென்ற 3உ ஞாயிற்றுக்கிழமை காலே பத்து மணி சுமாருக்கு, மதுரைமா நகரின் பிரசித்தி பெற்ற ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுந்தரேசப் பெருமானின் நெஞ்சம் திக் திக் என்று அடித்துக் கொண்டது. அவருடைய கை-நாடி நிமிஷத்துக்கு 300 தடவை வேகத்தில் பட் பட் பட்-பட் என்று அடித்துக்கொண்டது.

காரணம், ஸ்ரீ மோகன்தாஸ் கரம் சந்திர காந்தி ஒரு வேளை தம்முடைய சந்நிதிக்கு வராமலே போய்விடுவாரோ, அவருடைய திருநாமத்தினால் நமக்கு ஒரு அர்ச்சனை—தீபாராதனை கிடைக்காமல் போய்விடுமோ என்ற பயம்தான்!

மகாத்மா காந்தி ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் தரிசனத்துக்குப் பிறகு, "கூட்டமும் நெருக்கடியும் அதிகமாயிருக்கிறதே! மீனாக்ஷி அம்மன் தரிசனத்தோடு திருப்தியடைந்து வெளியேறி விடலாமோ?" என்று பக்கத்திலிருந்தவர்களிடம் சொன்னது, சர்வாந்தரியாமியான ஸ்ரீ சுந்தரேசுவரர் காதில் விழாமல் இருந்திருக்குமா?

நல்லவேளையாக, ஆலய நிர்வாகிகளும் அருகிலிருந்தவர்களும் வற்புறுத்தியதின் பேரில் மகாத்மாவின் மனம் மாறியது. ஸ்ரீ சுந்தரேசுவரர் சந்நிதிக்கும் வரத்தான் செய்தார். ஸ்ரீ மீனாக்ஷி அம்மனை தர்மபத்தினியாகப் பெறும் பாக்கியம் செய்த பெருமானுக்கு மகாத்மா காந்தியைத் தமது சந்நிதியிலே பார்க்கும் பாக்கியமும் கிடைத்தது!

* * *

மேற்கண்டவாறு நாம் எழுதியதில் ஸ்ரீ சுந்தரேசுவரப் பெருமானைப்பற்றிக் குறைத்துச் சொல்லிவிட்டதாகவோ, தெய்வ நிந்தனை செய்துவிட்டதாகவோ தயவு செய்து யாரும் எண்ணிக் கொள்ள வேண்டாம்.

பக்தர்கள் பகவானைத் தேடிச் செல்வதற்குப்பதிலாக, பகவான் பக்தர்களைத் தேடிச் சென்றதாக நமது இதிகாசங்களிலும் புராணங்களிலும் நாம் எத்தனையோ சம்பவங்களைப் படித்திருக்கிறோம்.

அவ்விதம் உண்மைப் பக்தர்களைத்தேடிக் கொண்டு செல்வதும், வலிந்து சென்று தடுத்தாட் கொள்வதும் இறைவனுடைய சிறப்பான இலட்சணம் என்று நமது சமய நூல்கள் கூறுகின்றன.

இதை வைத்துக்கொண்டு பார்க்கும்போது, மகாத்மா காந்தியைப்போன்ற பக்தரைப் பார்ப்பதற்கு, தமது சந்நிதிக்கு அவரை வரவழைப்பதற்கு, ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி விருப்பம் கொள்வதில் வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?

ஆம்; ஸ்ரீ மீனாட்சியம்மன், ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி, ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆகிய தமிழ் நாட்டின் பழம் பெரும் தெய்வங்கள் மூவரும் காந்தி மகான் தங்கள் ஆலயத்துக்கு வந்து தங்களை தரிசித்ததில் எல்லையில்லா மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தெய்வங்களின் மகிழ்ச்சி ஒருபுறமிருக்க, அத்தெய்வங்களின் காரணமாகத் தமிழ் நாட்டு மக்கள் பெறற்கரிய பேற்றை அடைந்தார்கள். உலகத்தில் சிறந்த உத்தம புருஷரைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றார்கள்.

இத்தகைய பாக்கியத்தைத் தங்களுக்கு அளித்ததின் பொருட்டுத் தமிழ் மக்கள் மேற்கூறிய மூன்று தமிழ் நாட்டு சுவாமிகளுக்கும் மிக்க நன்றிக்கடன் பட்டிருப்பதோடுகூட, நமது ஹரிஜன சங்கக் காரியதரிசி ஸ்ரீ எல். என். கோபால சுவாமிக்கும் ஓரளவு கடமைப் பட்டிருக்கிறார்கள்.

ஹிந்துஸ்தானி பிரசார சபையின் வெள்ளி விழாவை முன்னிட்டு மகாத்மாவின் சென்னை விஜயம் நிச்சயமானவுடனே ஸ்ரீ எல். என். கோபால சுவாமி மகாத்மாவிடம் போய்ச் சேர்ந்தார். ராஜாஜியினால் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்ட தென்னாட்டின் பிரசித்த ஆலயங்களாகிற மதுரைக் கோயிலுக்கும் பழனிக் கோயிலுக்கும்

மகாத்மா விஜயம் செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் போட்டார். ஹரிஜன விடுதலையும் மகாத்மாவின் மனதுக்கு உகந்த முக்கிய காரியமானபடியால் ஸ்ரீ கோபால சுவாமியின் விண்ணப்பத்தைத் தட்டமுடியாமல் மகாத்மா ஒப்புக்கொண்டார்.

அதன் பயனாகவே தமிழ் நாட்டு மக்கள் சுமார் முப்பது லட்சம் பேர் மகாத்மாவைக் கண்ணாரக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்து "பிறந்ததினால் பெற்ற பெரும் பயனை இன்று அடைந்தோம்" என்று மகிழ்தல் சாத்தியமாயிற்று.

* * *

காந்தி மகாத்மா இறைவனை வழிபடுவதற்கு ஆலயம் இன்றியமையாதது என்று கருதுவதில்லை. நீல வானத்தை மேல் மண்டபமாகவும், வான முகடுகளையே மதிற் சுவர்களாகவும் கொண்ட திறந்த வெளியே கடவுளை வழி படுவதற்குச் சிறந்த இடம் என்று கருதுபவர். அதோடு, எங்கும் நிறைந்த பெருமானைத் தமது உள்ளத்திலேயே தரிசித்துப் பூஜை செய்வதையே சிறந்த பூஜை முறையாகக் கருதுகிறவர். ஆகையால் காந்திஜியின் யாத்திரைகளில் சாதாரணமாக அவர் ஆலயங்களுக்குப் போவதில்லை. ஆனாலும் அவர் இவ்வளவு தேக சிரமத்தையும் பொருட்படுத்தாது மதுரை—பழனி யாத்திரையை மேற்கொண்டார்.

போகும் வழியில் பேச நேர்ந்தபோதெல்லாம் "மதுரை—பழனி ஆலயங்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்ட காரணத்தினால்தான் அந்த ஸ்தலங்களுக்கு நான் யாத்திரை போகிறேன்" என்று மகாத்மா சொல்லிக்கொண்டே போனார். அது மட்டுமல்லாமல், ஸ்ரீரங்கத்தில் தாம் இறங்கி அந்த ஊரின் பிரசித்தி பெற்ற ஆலயத்துக்குப் போகாததற்குக் காரணம் அந்த ஆலயம் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்படாததுதான் என்றும் ஸ்பஷ்டமாகத் தெரிவித்தார்.

இதிலிருந்தெல்லாம் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தை மகாத்மா எவ்வளவு முக்கியமாகக் கருதுகிறார் என்று தெரிகிறது.

* * *

" ஏன் மகாத்மா காந்தி அப்படிக் கருதுகிறார்?

ஆலயங்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடுவது அவ்வளவு என்ன முக்கியம்? திறந்து விடா விட்டால் என்ன முழுகிப் போய்விடும்?

இந்தியாவின் சுதந்திரம் அல்லவா முக்கியமான விஷயம்?

வெள்ளைக்காரர்களை விரட்டுவதல்லவா அவசரமான காரியம்?...."

குறுகிய திருஷ்டி படைத்தவர்களும், சுய நலத்தினாலோ அதிகார மோகத்தினாலோ கண்மூடிப்போனவர்களும் மேற்கண்டவாறெல்லாம் கேட்பார்கள்.

ஆனால் தீர்க்கதரிசியும், ஞானக்கண் பெற்றவருமான மகாத்மாவோ, இந்தியாவின் அரசியல் விடுதலை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது ஹரிஜனங்களின் சமூக விடுதலை என்று கருதுகிறார். இந்தியாவின் சுதந்திரமும் ஹரிஜன முன்னேற்றமும் ஒன்றோடொன்று பிணைந்து பின்னிக்கிடக்கும் விஷயங்கள் என்று நம்புகிறார். "ஹரிஜன விடுதலையின்றி இந்தியாவின் விடுதலை கிட்டாது. அப்படிக் கிடைத்தாலும் அதை நீடித்து நிலைநாட்ட முடியாது!" என்று எண்ணுகிறார்.

* * *

பாரத நாடு பழம் பெரு நாடு என்பதில் சந்தேகமில்லை. இந்த நாட்டில் பதினாயிரம் வருஷங்களுக்கு முன்பு மகரிஷிகள் உருவமற்ற பரம்பொருளை உள்ளத்தின் ஒளியால் கண்டு வேதசாஸ்திரங்களையும் உபநிஷத மகா மந்திரங்களையும் அருளினார்கள்.

இந்தப் புண்ணிய பூமியில் எத்தனையோ வீராதி வீரர்கள் தோன்றினார்கள், அவதார புருஷர்கள் உற்பவித்தார்கள். பத்தினித் தெய்வங்கள் வாழ்ந்தார்கள்.

கல்விக்கும் கலைக்கும் இந்தப் புண்ணிய பூமி நிலைக்களமாயிருந்தது. செல்வமும் சிறப்பும் இந்நாட்டில் குடிகொண்டு விளங்கின.

அப்பேர்ப்பட்ட தேசம் ஏன் அவ்வளவு சுலபமாக அன்னியர்களுக்கு அடிமைப்பட்டது? வீராதி வீரர்களுக்குப் பிறப்பளித்த இந்த நாடு ஏன் சில ஆயிரம் அன்னியர்களுடைய படையெடுப்புக்குப் பணிந்து அரசியல் சுதந்திரத்தை இழந்தது?

எவ்வளவோ உயர் நலங்கள் பொருந்திய இந்தியாவிலும் ஹிந்து சமூகத்திலும் ஏதோ ஒரு குறைபாடு இருக்கத்தான் வேண்டும். நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல் ஏதோ ஒரு பொல்லாங்கு புரையோடியிருக்கத்தான் வேண்டும்.

இதைக் குறித்து முன்னாளிலும் இந்நாளிலும் இந்தியாவில் தோன்றிய பெரியோர்கள் பலர் எச்சரித்திருக்கிறார்கள். ஸ்ரீ ராமானுஜர் முதல் சுவாமி விவேகானந்தர் வரையில் மகான்கள் பலர் சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் தகர்த்தெறிந்து ஹிந்து சமூகத்தைக் காப்பாற்ற முயற்சித்தார்கள்.

அவர்கள் எல்லாரும் கண்ட உண்மையைத்தான் காந்தி மகானும் தமது தீர்க்க திருஷ்டியால் கண்டார்.

சமூகத்தில் இப்பேர்ப்பட்ட ஒரு பெரிய குறையை, கொடிய வியாதியை வைத்துக்கொண்டு, அரசியல் சுதந்திரத்துக்கு என்னதான் பாடுபட்டாலும் முழு வெற்றி ஏற்படாது என்பதை உணர்ந்தார். அப்படியே அரசியல் சுதந்திரம் வந்தாலும் இத்தகைய குறைபாடு இருக்கும் வரையில் கிடைத்த சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியாது என்பதை உணர்ந்தார்.

எனவே, ஒரு பக்கம் அரசியல் சுதந்திர இயக்கத்தை நடத்திக்கொண்டே மற்றொரு பக்கம் இந்தச் சமூகக் குறைபாட்டை ஒழிக்கவும் பெரும் பிரயத்தனம் தொடங்கினார். அந்தப் பிரயத்தனத்தில் மகாத்மா காந்தி முன்னே யாரும் அடையாத வெற்றியை அடைந்திருக்கிறார் என்பதைப் பிரத்யட்சமாகப் பார்க்கிறோம்.

"கனவிலும் நடவாது" என்று கருதப்பட்ட காரியங்கள் நம் கண் முன்னே நடந்து வருவதைக் காண்கிறோம்.

மகாத்மாவின் தீர்க்கதிருஷ்டி வாய்ந்த இந்தப் பெரும் பிரயத்தனத்தில் அவருக்குப் பெரிதும் பலம் அளித்துத் துணைபுரிந்த பெருமை நமது செந்தமிழ் நாட்டுக்கு உரியது. இதைக் குறித்துத் தமிழ் மக்கள் பெருமித குதூகலம் அடைவது நியாயமே யாகும்.

* * *

தமிழ் நாட்டுக்கும் காந்தி மகாத்மாவுக்கும் எப்போதும் அந்நியோந்நியமான சிறந்த உறவு உண்டு. அந்த உறவு இந்தத்தடவை அவருடைய விஜயத்தினால் இன்னும் பலமடைந்து உறுதிப்பட்டிருக்கிறது.

ஆகையினால்தான் மகாத்மா இன்னொரு தடவையும் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யத் தமது விருப்பத்தைத் தெரிவிக்கிறார். அப்படி வரும்போது, தமிழ்ப் பாஷையை நன்றாகக் கற்றுக் கொண்டு வருவதாகவும் சொல்லியிருக்கிறார்.

இந்த வாக்குறுதியை மகாத்மாவுக்கு அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பது நமது கடமையாகும்.

* * *

ஒவ்வொரு பாஷைக்கும் பிரத்யேகமாக உரிய சில நயங்கள் இருக்கின்றன.

தமிழ் மொழியில் நாம் அதிதிகளுக்கு விடைகொடுத்து அனுப்பும் முறை விசேஷ நயம் பொருந்தியது.

அதிதிகளுக்கு விடை கொடுக்கும்போது நாம் "போங்கள் !" என்று சொல்வதில்லை.

"போய் வாருங்கள்" என்றுதான் சொல்லுவோம்.

நாளது 1946-ம் வருஷ ஆரம்பத்தில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த ஒப்பற்ற மாபெரும் அதிதிக்கும் "போய் வாருங்கள்" என்றுதான் தமிழர்கள் விடைகொடுத் தனுப்பினார்கள்.

இதைத் தமிழ் மரபின்படி உபசாரமாக மட்டும் சொல்லாமல், உண்மையாகவே, "மகாத்மா தமிழ் நாட்டுக்கு மீண்டும் வரவேண்டும் !" என்று தெரியப்படுத்தினார்கள்.

# கப்பலோ கப்பல்!

சென்ற யுத்தத்தின்போது, இந்தியாவை ஆளும் பிரிட்டிஷ் சர்க்கார், தரைப்படை, கடற்படை, ஆகாசப்படை ஆகிய மூன்றுவகைப் படைகளுக்கும் ஆள் சேர்த்தார்கள்.

"நல்ல சம்பளம்; நல்ல சாப்பாடு; ஜோரான உடுப்பு; செத்துப்போனவர்களுக்குப் பென்ஷன்; சாகாமல் திரும்பி வருகிறவர்களுக்கு நல்ல நல்ல உத்தியோகம்!" என்றெல்லாம் ஆசை காட்டி ஆள் சேர்த்தார்கள்.

இந்தியர்கள் பலர் மேற்படி மூன்றுவகைப் படைகளிலும் சேர்ந்தார்கள். தரைப்படையிலே மட்டும் சுமார் இருபது லட்சம் இந்தியர்கள் சேர்ந்தார்கள் என்பது பிரசித்தம்.

இப்படிச் சைன்யத்தில் சேர்ந்தவர்களை நமது வாய்ச் சொல் வீரர்கள் சிலர் 'சோற்றுப் பட்டாளம்' என்று குறிப்பிட்டார்கள். 'தேச பக்தியற்றவர்கள்' 'கூலிக்கு மாரடிப்பவர்கள்' என்றெல்லாம் ஏசினார்கள்.

இதை நாம் ஆதிமுதலே எதிர்த்துக் கண்டித்து வந்தோம்.

சைன்யத்தில் சேருகிறவர்கள் சந்தர்ப்பம் நேரும்போது தங்கள் தேச பக்தியைக் காட்டுவார்கள் என்றும் அவர்கள் சைன்யத்தில் சேர்ந்து பெறுகிற பயிற்சியெல்லாம் நமது தேசத்துக்கு ஒரு நாள் பயன்படும் என்றும் கூறினோம்.

* * *

"சோற்றுப் பட்டாளம்" என்று தூற்றப்பட்ட வீரர்களிலே ஒரு பகுதியினர்தான் பர்மாவிலே நேதாஜி சுபாஷின் தலைமையில் இந்திய தேசீயப்படை ஆனார்கள். அவர்களில் சில முக்கியஸ்தர்கள் மீது டில்லி செங்கோட்டை

யில் இராணுவக்கோர்ட் விசாரணை ஆரம்பமான காலத்தில் தேசமே அல்லோலகல்லோலப் பட்டதை இரண்டு மாதங்களுக்கு முன்பு பார்த்தோம். அது காரணமாக ஏற்பட்ட பொது ஜனக் கிளர்ச்சி இன்னும் அடங்கியபாடில்லை.

இப்படிப்பட்ட நிலைமையில் இந்தியக் கப்பற்படையைச் சேர்ந்த வீரர்கள் தங்களுடைய தேச பக்தியையும், சுதந்திரப் பற்றையும் பிரமாதமான முறையில் சென்ற வாரத்தில் வெளிப்படுத்தித் தேசம் முழுவதையும் வெறி கொள்ளும்படி செய்து விட்டார்கள்.

இந்தியக் கப்பற்படையைச் சேர்ந்த மாலுமி வீரர்கள் இருபதினாயிரம் பேர் உண்ணாவிரதமும் வேலை நிறுத்தமும் மேற்கொண்டார்கள் என்ற செய்தி தேசமெங்கும் காட்டுத் தீயைப்போல் பரவிற்று. மேற்படி வேலை நிறுத்தத்துக்கு பிரிட்டிஷ் சர்க்காரின் அதிகாரிகள் 'கலகம்' என்று நாமகரணம் செய்ய அவ்விதமே அது 'கலக'மாகப் பரிணமித்து ஏறக்குறைய 'புரட்சி' என்ற நிலைமையை அடைந்து விட்டது.

பம்பாய், கல்கத்தா, கராச்சி முதலிய நகரங்களில் பொது ஜனக் கொந்தளிப்பு ஏற்பட்டு, வேலை நிறுத்தம், கடையடைப்பு ஊர்வலம், கல்லெறி, தடியடி, தீ வைத்தல், பகிரங்கக் கொள்ளை, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகம், உயிர்ச்சேதம் என்று முறையே வளர்ச்சி அடைந்தது.

நிதானத்துக்குப் பேர்போன சென்னைமா நகரிலும் சென்ற திங்கட்கிழமை வேலை நிறுத்தம், கடையடைப்பு, கல்லெறி, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் சகலமும் நடந்தன.

இப்படி யெல்லாம் விபரீதமாக வளர்ந்த சம்பவங்களுக்கு ஆதியான காரணம் என்ன வென்பதைச் சற்று விவரமாகப் பார்ப்போம்.

* * *

இந்தியாவுக்கென்று சில காலத்துக்கு முன்புவரை கப்பற்படையே இல்லாமலிருந்தது. ஏழு சமுத்திரங்கள் மீதும் ஆட்சி செலுத்திய பிரிட்டிஷ் கப்பற்படையே இந்தியாவையும் 'பாதுகாத்து' வந்தது. இது சரியல்ல, இந்தியாவுக்கென்று தனியே கப்பற்படை வேண்டும் என்று வெகுகாலமாக இந்தியாவில் கிளர்ச்சி செய்து வந்தோம். அதை முன்னிட்டு, இந்த யுத்தத்துக்குச் சற்று முன்னுல், "மன்னர் பெருமானின் இந்தியக் கப்பற்படை" ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் மேற்படி "மன்னர் பெருமானின் இந்தியக் கப்பற்படை"யில் மூன்றே மூன்று மீன்பிடிக்கும் படகுகள் இருந்தன. அவற்றில் சில பீரங்கி துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டிருந்தன.

யுத்தத்தின்போது மேற்படி இந்தியக் கப்பற்படையானது வளர்ந்து வளர்ந்து பெரிதாகிப் பிரம்மாண்டமாகிச் சுமார் முப்பது யுத்தக் கப்பல்கள் உள்ளதாகிவிட்டது! யுத்தக் கப்பல் என்றுல், ஏதோ குரூஸன் என்றும், ட்ரெட்நாட் என்றும், முப்பதினுயிரம் டன் கப்பல் என்றும் ஐம்பதினுயிரம் டன் கப்பல் என்றும் கேள்விப்பட்டிருக்கிருேமே, அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை! ஏதோ குருவிக்கேற்ற இராமேசுவரம் என்பதுபோல் ஏழை இந்தியாவுக்கேற்ற சின்னஞ்சிறு கப்பல்கள்; படகுகள் என்று சொன்னுலும் தோஷமில்லை.

கடுகு சிறுத்தாலும் காரம் குறையுமா என்பதுபோல, இந்தியக் கப்பற்படை அளவில் சிறியதாயிருந்தாலும் சென்ற யுத்தத்தின்போது அது பிரமாதமான சேவை புரிந்ததாகச் சேனுதிபதி, வைஸ்ராய் முதலியவர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றிருக்கிறது.

* * *

யுத்தம் நடந்துகொண்டிருந்தவரையில், இந்திய மாலுமி வீரர்கள் யுத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

யுத்தம் முடிந்த பிறகு கொஞ்சம் சிந்தனைசெய்யத் தொடங்கினார்கள். தங்களுடைய வசதிக் குறைவுகள், சாப்பாட்டுக் கஷ்டங்கள், பிரிட்டிஷ் மாலுமிகளுக்கும் தங்களுக்கும் சம்பளத்திலும், அந்தஸ்திலும் உள்ள தாரதம்மியங்கள் ஆகியவற்றைக் குறித்து யோசனை செய்யலானார்கள். மேலதிகாரிகள் தங்களை அடிக்கடி அவமரியாதையாக நடத்துவது அவர்களுடைய மனதை மிகவும் புண்படுத்தியது. இதெல்லாம் இந்தியா அன்னிய ஆட்சியில் இருப்பதனால்தானே என்ற உண்மையும் உதயமாயிற்று.

தீ மலையானது உள்ளுக்குள் குமுறிக்கொண்டு எங்கே வெடித்து நெருப்பைக் கக்கலாம் என்று அங்கு மிங்கும் முட்டி மோதிக்கொண் டிருந்தது.

படார் என்று அது வெடிப்பதற்கு ஓர் இடம்—ஒரு சந்தர்ப்பம்—**தல்வார்** என்னும் கப்பலின் அதிகாரி கமாண்டர் கிங் என்பவரால் அளிக்கப்பட்டது.

**தல்வார்** என்னும் கப்பல், இந்திய மாலுமிகளுக்குத் தந்தி மூலமும், ரேடியோ மூலமும், சமிக்ஞைகள் மூலமும் செய்தி அனுப்பும் பயிற்சி அளிப்பதற்காக ஏற்பட்டதாகும். எனவே அதில் இருந்த இளம் மாலுமிகள் எல்லாரும் கல்வி அறிவு படைத்தவர்கள் அவர்களில் ஒருவரான ஆர். கே. சிங். என்பவர் சென்ற 1945 டிசம்பரில் மேலதிகாரிகள் மாலுமிகளை அவமரியாதையாக நடத்துவது பற்றிப் புகார் செய்தார். அதன் பயனாக இரண்டு மாதம் சிறைத்தண்டனை அடைந்தார். நாளது பிப்ரவரிமாத ஆரம்பத்தில் பி. சி. தத் என்பவர் கப்பல் தளத்தில் "ஜே ஹிந்த்!" கோஷத்தை எழுதினார். இதற்காக அவர் உத்தியோகத்திலிருந்து தள்ளப்பட்டார்.

இதனாலெல்லாம் மனம் வெதும்பிக்கொண்டிருந்த இளம் மாலுமிகள் இருக்கும் இடத்துக்கு கமாண்டர் கிங் ஒரு நாள் வந்து அவர்களை வெகு மரியாதையாக "நாய்

களின் புத்திரர்களே!" என்றும் "கூலிகளே! காட்டாள் களே!" என்றும் அழைத்ததாகச் சொல்லப்படுகிறது.

இவ்வித மரியாதைகளுக்கு ஆளான மாலுமிகள் மேலதிகாரிகளுக்குப் புகார் எழுதினர்கள். மறுபடியும் சமாண்டர் கிங் வந்து மிரட்டினர். இதன்பேரில் அந்த மானமுள்ள இளைஞர்கள் பிப்ரவரி மீ 17௳ உண்ணுவிரதமும், 18௳ வேலை நிறுத்தமும் ஆரம்பித்தார்கள்.

இவ்விதம் தல்வார் கப்பலில் ஆரம்பமான கிளர்ச்சி பம்பாய், கராச்சி, கல்கத்தா முதலிய எல்லா இடங்களுக்கும் பரவி இந்தியக் கப்பற்படையைச் சேர்ந்த எல்லா மாலுமி வீரர்களும் ஒரு முகமாக வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களிடம் அநுதாபங்காட்டி இந்திய ஆகாசப் படையைச் சேர்ந்தவர்களும் பல இடங்களில் வேலை நிறுத்தம் செய்தார்கள்.

* * *

மேற்படி வேலை நிறுத்தச் செய்தி தேசமெங்கும் பரவி தேச மக்கள் சகல மானவர்களையும் ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. தேசமே அல்லோல கல்லோலப்பட்டது.

இந்திய சட்டசபையில் மாலுமிகளின் கோரிக்கையை ஆதரித்து அவசரத் தீர்மானம் நிறைவேறியது.

இந்தியக் கப்பற்படைத் தலைவரான அட்மிரல் காட்பிரி, "கலகம் நீடித்தால் இந்தியக் கப்பற்படையே நிர்மூலமாகிவிடும்" என்று எச்சரித்தார்.

பெரிய பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் பம்பாயை நோக்கி வரலாயின!

ஸ்ரீமதி அருணா ஆஸப்அலி பம்பாய்க்குச் சென்று தம்மாலான வாக்கு சகாயத்தைச் செய்தார்.

மகாத்மா காந்தி அஹிம்சா தர்மத்தை வற்புறுத்தி ஞாபகப்படுத்தினர்.

ஜனுப் ஜின்னுவும் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்து வைத்தார்.

கடைசியாக, தீரர் வல்லபாய் படேல் முழு பொறுப்பையும் தமது தலையிலே எடுத்துப் போட்டுக்கொண்டு, "வேலை நிறுத்தத்தை முடிவு செய்யுங்கள்; பலாபலன்களுக்கு நான் ஜவாப்தாரி" என்று சொல்ல, அதன்பேரில் மாலுமிகள் வேலை நிறுத்தத்தையும் எதிர்ப்பையும் கைவிட்டு நிபந்தனையின்றிப் பணிந்தார்கள்.

*　　*　　*

மேற்படி இந்தியக் கப்பற்படை வேலை நிறுத்தம் அல்லது கலகத்தினுல் தேசத்தில் மற்றப்படி நேர்ந்த விபரீதங்களைச் சிறிது கவனிப்போம். பம்பாயில் மூன்று தினங்கள் நடந்த அமளி துமளியினுல் 250பேர் மாண்டனர். 1300 பேருக்குமேல் காயமடைந்தார்கள். பல கடைகள் சூறையாடப்பட்டன. ரயில்வே ஸ்டேஷன், தபாலாபீஸ் முதலிய பொதுக் கட்டிடங்கள் அக்கினி பகவானுக்கு இரையாயின.

தேசம் பஞ்சத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் 200 லட்சம் ராத்தல் தானியங்களும், ஒன்றரை லட்சம் ராத்தல் சர்க்கரையும் நாசமாயிற்று.

பம்பாய் நகர சபைக்கு மட்டும் 7 லட்சம் ரூபாய் சொத்து நஷ்டம். மொத்தத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் சொத்து நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும் அதிசயப்படுவதற்கில்லை.

நாசமடைந்த சொத்தெல்லாம் நம்முடையவை; நாளை இந்தியாவை விட்டு ஓடப்போகும் இங்கிலீஷ்காரர்களுடைய சொத்துக்கள் அல்ல.

எனவே, இந்த மாதிரி வெறி பிடித்த வேலைகளைக் குறித்து எல்லா தேசத் தலைவர்களும் மனம் வருந்திக் கண்டித்திருக்கிருர்கள். மகாத்மா காந்தி, மௌலான ஆஸாத், ஜவாஹர்லால், வல்லபாய், ஜனுப் ஜின்னு, நமது வரதராஜுலு நாயுடுகாரு உள்பட எல்லாருமே கண்டித்திருக்கிருர்கள்.

*　　*　　*

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது. அதாவது "பம்பாயில் வேலை நிறுத்தமும் கடை யடைப்பும் வேண்டாம்!" என்று ஸ்ரீ வல்லபாய் எச்சரித்தார். ஜனங்கள் அதைக் கேட்கவில்லை.

சென்னையில்கூட "திங்கட்கிழமை நடந்த வேலைநிறுத்தம் காங்கிரஸ் கமிட்டியார் செய்யச் சொல்லவில்லை" என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அறிக்கை விட்டிருக்கிறார்.

பின்னே யாருடைய தூண்டுதலால் கடை யடைப்பும், வேலை நிறுத்தமும் ஆரம்பமாயின.

பம்பாயிலும் சரி, சென்னையிலும் சரி, கம்யூனிஸ்ட் தலைவர்கள் மேற்படி வேலை நிறுத்தங்களை ஏற்பாடு செய்ததாகத் தெரிய வருகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியாருக்குத் திடீரென்று இவ்வளவு பொதுஜனச் செல்வாக்கு எப்படி ஏற்பட்டது,

இதே பம்பாயில், இதே ஜனங்கள் ஏழு மாதத்துக்கு முன்னால் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலத்தைத் தாக்கிக் கொளுத்தி நாசம் செய்தார்களே!

அதற்குள் என்ன இந்த மாறுதல்?

விஷயம் இதுதான். தற்சமயம் இந்தியப் பொது மக்களின் கொந்தளிப்பான மனோ நிலையில் இம்மாதிரி அமளி துமளியான காரியங்களில் அவர்களை ஈடுபடுத்துவது மிகவும் சுலபமாகும்.

குறிப்பிட்ட தலைவர்தான் சொல்ல வேண்டும், குறிப்பிட்ட ஸ்தாபனந்தான் கட்டளையிட வேண்டும் என்பது கிடையாது. ஏதாவது ஒரு சந்தர்ப்பம் அல்லது சாக்குக் கிடைக்க வேண்டியதுதான். உடனே எங்கே பார்த்தாலும் முக்கியமாகப் பெரிய நகரங்களில், அமளிதுமளியைக் காணலாம். அப்படிப் பொது மக்களின் உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

திடீரென்று இத்தகைய கொந்தளிப்பு ஏற்படுவானேன்? இத்தனை நாளும், எட்டு மாதத்துக்கு முன்னால்

கூட நாம் கண்டறியாத தீவிர தேச பக்தியும், சுதந்திர ஆவேசமும் இந்தியப் பொது மக்களுக்கு எப்படி வந்தது? எங்கிருந்து வந்தது?

இதற்கெல்லாம் ஒரே ஒரு பதில் உணடு; ஒரே ஒரு காரணந்தான் சொல்ல முடியும்.

"இந்தியா கூடிய சீக்கிரத்தில் சுதந்திரம் அடையப் போகிறது" என்று உறுதியான நம்பிக்கை இப்போது இந்தியாவில் எல்லா ஜனங்களுடைய மனதிலும் ஏற்பட்டிருப்பதுதான்.

காரிய சித்தியாகப் போகும் கடைசி நேரத்தில் அவசரமும், பரபரப்பும் அடைவது மனித சுபாவம். இதற்கு ஓர் உதாரணம் பார்ப்போம்.

* * *

கடலிலே பல நாட்கள் கப்பல் பிரயாணம் செய்து வருகிறோம். தண்ணீர், தண்ணீர், தண்ணீர்—எங்கும் தண்ணீர் மயமா யிருக்கிறது. கரையைக் காணமாட்டோமா என்று மனம் ஏங்குகிறது. "ஏதோ கப்பல் வழிதப்பி விட்டது; கரையையே நாம் காணப் போவதில்லை!" என்று நிராசை யடைந்திருக்கும் சமயத்தில் ஒரு நாள் காலை திடீரென்று பச்சை மரங்கள் தென்படுகின்றன. "அதோ கரை!" என்று மனம் எக்களிக்கிறது. உடனே ஒரே தாண்டாகத் தாண்டிக் கரையில் குதிக்கமாட்டோமா என்று பரபரப்பு உண்டாகிறது, மூன்று மாத காலம் கப்பலில் பிரயாணம் செய்தது பெரிதாகத் தோன்றவில்லை. கரை சேர இன்னும் மூன்று மணி நேரம் பாக்கி இருக்கிறதே என்று ஆத்திரம் பொங்குகிறது.

இத்தகைய மனோ நிலையில்தான் இந்தியப் பொது மக்கள் இப்போது இருக்கிறார்கள். இதைச் சர்க்கார் அதிகாரிகள் உணர வேண்டும். உணர்ந்து சர்வஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும்.

சர்க்கார் அதிகாரிகள் அவ்விதம் உணர்ந்து நடந்தால் மட்டும் போதாது. நமது தேசத் தலைவர்களும் உணர வேண்டும்.

இன்னும், அறிவும் சிந்தனை சக்தியும் உள்ளவர்கள் அனைவரும் மேற்படி விஷயத்தை யோசித்துப் பொது மக்களுக்கும் உணர்த்த முயல வேண்டும்.

நமது தேசத் தலைவர்கள் சுதந்திரக் கப்பலை எவ்வளவோ பாடுபட்டுக் கரையருகில் கொண்டுவந்து விட்டார்கள்.

இந்தக் கடைசி நேரத்தில் ஜனங்கள் அவசரமும் பரபரப்பும் காட்டுவதினால் பெரும் அபாயம் நேரிடலாம்.

படகு வந்து அதில் ஏறிக்கொண்டு போவதற்கு வேண்டிய பொறுமையில்லாமல் கப்பலிலிருந்து கடலிலே குதித்தால் அலைகளால் மோதுண்டு சாக நேரலாம். அல்லது சுறா மீன்களுக்கு இரையாக நேரிடலாம்!

# பூனைகளின் வேலை நிறுத்தம்!

அன்பார்ந்த உலகப் பூனை மகா ஜனங்களே! எழுங்கள்! விழியுங்கள்! பாட்டாளி மார்ஜாலங்களே! உடனே உங்களுடைய உரிமைகளையும் நன்மைகளையும் பாதுகாத்துக்கொள்ளப் புறப்படுங்கள்!

"உங்களுடைய குறைகள் தீரும்வரையில் எலி பிடிப்பதில்லை யென்று உறுதி கொள்ளுங்கள்! உங்களுக்குள்ளே கறுப்புக் காலிகள் அல்லது கருங்காலிகள் அல்லது கோடரிக் காம்புகள் யாராவது இருந்தால், அவர்களைத் தொலைத்துத் தலை முழுகி விடுங்கள்! கடைசியாக, உண்ணுவிரதத்தைக் கடைப்பிடிக்கவும் தயாராயிருங்கள்......"

* *

மேற்கண்ட விதமான அதிதீவிரப் பிரசாரம் மார்ஜால மகா சமுத்திரத்தினிடையே சில காலமாக நடந்து வந்தது. "வேலை நிறுத்தம் செய்வதா; வேண்டாமா?" என்கிற பெரும் பிரச்னை கராபுரா பாஷையில் வெகு கடுமையாக விவாதிக்கப்பட்டு வந்தது. "வேலை நிறுத்தம் கூடாது; அதனால் நமக்குத்தான் கெடுதல்" என்று கூறிய சில மிதவாதப் பூனைகளின்பாடு வெகு ஆபத்தாகி விட்டது. அவை மற்றப் பூனைகளினால் துரத்தப்பட்டு, எலி வளைகளுக்குள்ளே போய் ஒளிந்துகொள்ளும்படி ஆயிற்று!

கடைசியில், "வேலை நிறுத்தம் வேண்டுமா, வேண்டாமா?" என்னும் பிரச்னையின் மீது வோட்டு எடுக்கப்பட்டபோது, பாட்டாளிப் பூனைகளின் மிகப் பெரும்பாலான வோட்டுக்கள் வேலை நிறுத்தம் வேண்டும் என்பதற்குச் சாதகமாகவே விழுந்தன. வேலை நிறுத்தம் வேண்டாம்

என்று வோட்டுப் போட்ட ஒரு சில பூனைகள் இரவுக்கிரவே காணமல் போயின.

எனவே, சரித்திரப் புகழ்பெற்ற பூனைகளின் மகா வேலை நிறுத்தம் ஆரம்பமானபோது பூனை சமூகத்தில் 'கருங்காலி' என்ற நாமதேயமே இல்லாமல் போய்விட்டது. அவ்வளவு ஒற்றுமையாக வெள்ளைப் பூனைகள், கறுப்புப் பூனைகள், மஞ்சள் பூனைகள், ருத்ராட்சப் பூனைகள் உள்படச் சகல பூனைகளும் ஒரு மிக்க வேலை நிறுத்தம் செய்துவிட்டன.

அவ்வளவுதான்! எலிகள் மகா சமூகத்தில் பெருங் குழப்பமும் கவலையும் ஏற்பட்டன. "பூனைகள் வேலை நிறுத்தம் செய்துவிட்டால், நமக்குக் கதிமோட்சம் ஏது?" என்ற கவலை எலிகளைப் பிடுங்கித் தின்றது.

பூனைகள் எலிகளை உட்கொண்டு அவற்றை மோட்சத்துக்கு அனுப்பாவிட்டால், நாளுக்கு நாள் எலிகளின் ஜனத்தொகை பெருகிக்கொண்டே போகும்; அளவில்லாமல் பெருகிவிடும். அப்படிப் பெருகும் எலிகள் எல்லாவற்றுக்கும் உணவுக்கு எங்கே போவது? அவ்வளவு எலிகளும் வசிக்க வளைகள் எங்கே அமைப்பது? இதெல்லாம் சங்கடமான பிரச்னைகள் அல்லவா? எலி சமூகத்தில் பிரம்மசரியம், ஜிதேந்திரியம் முதலிய ஒழுக்க முறைகள் பழக்கத்தில் இல்லை. அதோடு, பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் கருத்தடை முறைகளையும் எலிகள் அறியமாட்டா!

ஆகவே, பூனைகளின் வேலை நிறுத்தத்தினால் ஏற்பட்ட நெருக்கடியான நிலைமையைப் பற்றி ஆலோசிப்பதற்காக எலிகளின் மகாசபை கூடிற்று. நாட்டு எலிகள், நகரத்து எலிகள், பாட்டாளி எலிகள், முதலாளி எலிகள் ஆகிய சகல வகுப்புக்களையும் சேர்ந்த எலிகளும் எள்ளுப்போட இடமில்லாமல் கூடியிருந்தன.

எலித் தலைவர்கள் மேடைமீது ஏறி வீராவேசமான பிரசங்கங்கள் செய்தார்கள். அந்தப் பிரசங்கங்களை

கேட்ட எலிகளுக்கு இரத்தம் கொதிக்கவும், மண்டை வெடிக்கவும் ஆரம்பித்தது. சில எலிகளுக்குத் தலை எது, வால் எது என்று தெரியாமல் போய்விட்டது. சில எலிகள் தலை கீழாகவும், சில எலிகள் வால் மேலாகவும் நின்றன. மொத்த முடிவில், தண்டோபாயத்தைக் கைக்கொண்டு பூனைகளின் வேலை நிறுத்தத்தை முடிவு செய்வது என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அவ்வளவுதான். உலகம் அது வரையில் கண்டிராத சில அதிசயமான காட்சிகள் காணப்படலாயின. எலிகள் தலைக்கு ஒரு தடியைத் தூக்கிக் கொண்டு கும்பல் கும்பலாகச் சென்று வேலை நிறுத்தம் செய்திருந்த பூனைகளைத் தனித்தனியே சூழ்ந்துகொண்டு "வேலைக்குப் போகிறாயா? மண்டையில் அடிக்கட்டுமா?" என்று கேட்கத் தொடங்கின. சில எலிகள் அவ்விதம் காரியத்திலும் செய்து காட்டின.

ஆனால் பூனைகளின் கட்டுப்பாட்டையும் உறுதியையும் கலைக்க முடியவில்லை. "எங்களைக் கொன்றாலும் சரிதான்; எங்கள் குறைகள் தீர்ந்தாலொழிய வேலைக்குத் திரும்போம்!" என்று பூனைகள் சொல்லி விட்டன.

எலிகளின் மகா சபை இரண்டாவது தடவை கூடியது. இப்போது எலிகளின் வீராவேசமும் உற்சாகமும் ரொம்பவும் குறைந்து போயிருந்தன. மிதவாத சமாதானப் பிரிய எலிகளின் பேச்சுக்கு மதிப்பு ஏற்பட்டது. கடைசியில் வேலை நிறுத்தம் செய்திருந்த பூனைகளுடன் சமரசப் பேச்சு தொடங்குவதென்று ) தீர்மானிக்கப்பட்டது. இதற்காக, மிஸ்டர் சப்ரு எலியும், ஸ்ரீமான் ஜயக்கர் எலியும் சமாதானத் தூதர்களாக அனுப்பிவைக்கப்பட்டனர்.

சமரசப் பேச்சு ஒரு தடவை முறிந்து பிறகு மறுபடியும் தொடங்கி நடந்து, கடைசியாக வெற்றி யடைந்தது. சமரச நிபந்தனைகள் பெரும்பாலும் பூனைகளுக்கு அநுகூலமாகவே இருந்தன. அவை பின்வருமாறு :—

1. பூனைகள் எலிகளைப் பிடிக்க வரும்போது எலிகள் மணிக்கு மூன்றரைமைல் வேகத்துக்குமேல் ஓடக்கூடாது.

2. எலிகள் வசிக்கும் வளைகள் ஒன்றரை அடி ஆழத்துக்கும் முக்கால் அடி அகலத்துக்கும் அதிகப்படக்கூடாது.

3. வயதான பூனைகள் மோட்சத்தை நாடி ருத்ராட்சம் அணிந்து ஜபம் செய்து கொண்டிருந்தால் அதைப் பார்த்து குட்டி எலிகள் ஏளனம் செய்யக் கூடாது.

4. அஸ்தமித்ததும் வளைகளுக்குள் புகுந்துகொள்ளும் கெட்ட வழக்கத்தை எலிகள் விட்டொழிக்க வேண்டும்.

5. இப்போதெல்லாம் பட்டணங்களில் மனித ஜந்துக்கள் சாப்பிடும் 'ரேஷன்' அரிசியை எலிகள் தின்றுவிட்டு, பிற்பாடு பூனைகளின் வயிற்றுக்குள் போனதும் ரொம்பவும் சங்கடம் கொடுப்பது அதிகமாகி வருகிறது. ஆகையால், எலிகள் ரேஷன் அரிசியை சாப்பிடுவதை அறவே நிறுத்தி விடவேண்டும். ஏ. பி. ஸி, டி விடமின்கள் உள்ள உணவுகளையும், பால், தயிர், ஓவல்டின், ஹார்லிக்ஸ், சார்லீஸ் பிஸ்கட் முதலிய சத்துள்ள பதார்த்தங்களையுமே எலிகள் சாப்பிட வேண்டும்.

இருதரப்பிலும் மேற்படி சமரச நிபந்தனைகள் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு பூனைகளின் வேலை நிறுத்தம் ஒருவாறு முடிவடைந்தது.

* * *

அழகுதான்! பூனைகளாவது, வேலை நிறுத்தமாவது, எலிகள் தடியைத் தூக்கிக் கொண்டுபோய்ப் பூனைகளை அடிப்பதாவது எல்லாம் வெறும் வேடிக்கைப் பேச்சு என்பதாக நேயர்களில் சிலர் சந்தேகிக்கக்கூடும். ஆனால் அவர்கள் ஏன் அப்படிச் சந்தேகிக்க வேண்டும் என்று நாம் கேட்கிறோம். பூனைகளின் வேலை நிறுத்தத்தைக் காட்டிலும் அதிசய சம்பவங்களும், வேடிக்கையான காரியங்களும் நம் கண் முன்னால் இந்தக் காலத்தில் நடக்கவில்லையா என்று யோசித்துப் பார்க்கக் கோருகிறோம்.

உதாரணமாக, போலீஸ்காரர்களின் வேலை நிறுத்தத்தைப்பற்றிச் சிறிது யோசித்துப் பாருங்கள். இந்தமாதிரி அதிசயத்தை இதற்கு முன்னால் எப்போதாவது கேட்டிருக்கிறோமா? இம்மாதிரி நடக்கக்கூடும் என்று எப்போதாவது கனவிலேனும் எண்ணியிருக்கிறோமா?

தொழிலாளிகள், பாட்டாளிகள், ஏழைக் குமாஸ்தாக்கள், சிறைச்சாலைக் கைதிகள் முதலியோர் வேலை நிறுத்தம் செய்தால், அவர்களை அடக்கி ஒடுக்கவும் தடியால் அடித்து அவர்களைத் திரும்ப வேலைக்குப் போகச்சொல்லவும், வேலை நிறுத்தம் செய்தவர்கள் கல்லை விட்டெறிந்தால் அவர்கள் மேல் குண்டை விட்டெறியவும் போலீஸ்காரர்கள் இத்தனை நாளும் உபயோகப்பட்டு வந்தார்கள். அப்படிப்பட்ட போலீஸ்காரர்களே வேலை நிறுத்தம் செய்வார்களானால் அதை எப்படிச் சமாளிப்பது? யார் அவர்களைத் திரும்ப வேலைக்குப் போகச் செய்வது? அதிலும், போலீஸ்காரர்கள் உண்ணாவிரதம் வேறு ஆரம்பித்து விட்டார்களானால், போகும் வழிதான் என்ன?

சென்ற மாதத்தில் இந்திய சாம்ராஜ்யத்தின் தலைநகரான டில்லியில் போலீஸ் ஜவான்கள் வேலை நிறுத்தம் செய்து உண்ணாவிரதத்தைக் கைகொண்டதாகக் கேள்விப்பட்டோம்!

புதுடில்லி காட்டிய வழியைப் பின்பற்றி மற்றும்பல இடங்களிலும் போலீஸ்காரர்களின் மின்னல் வேலை நிறுத்தம் நடந்து முடிந்திருக்கிறது.

நிதானத்துக்குப் பேர்போன சென்னையிலேகூட போலீஸார் வேலையை ஒழுங்காகப் பார்த்துக்கொண்டு "சம்பளம் மட்டும் வாங்க மாட்டோம்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

சென்னை சர்க்காரோ அதிசயமான சுறுசுறுப்புக் காட்டிப் போலீஸாரின் சம்பள விகிதங்களைச் சட்டுப்புட்டென்று உயர்த்தி யிருக்கிறார்கள்.

இவ்வளவோடு போகுமா? மேற்படி வேலை நிறுத்த வியாதி போலீஸாரிடையே மேலும் பரவுமா?

போலீஸாரின் வேலை நிறுத்தம் என்பது மற்ற சாதாரண வேலை நிறுத்தங்களைப் போலன்று. ரொம்பவும் கவலைப்பட வேண்டிய காரியம்.

அதைப்பற்றி முதன்மையாகக் கவலைக்கொள்ள வேண்டியவர்கள் திருடர் மகா சமூகத்தினர் ஆவர்.

முக்கியமாக, இரவில் கன்னம் வைக்கும் திருடர்களுக்குப் போலீஸ்காரர்களின் வேலை நிறுத்தத்தினால் ரொம்பக் கஷ்டம் உண்டாகும்.

ஏனென்று கேட்டால் இப்போதெல்லாம் ஜனங்கள் "போலீஸ் இருக்கிறது!" என்ற தைரியத்தினால் அஜாக்கிரதையா யிருக்கிறார்கள். வீட்டுப் பாதுகாப்பு, சொத்துப் பாதுகாப்பு விஷயத்தில் அலட்சியமா யிருக்கிறார்கள்.

"போலீஸ் இல்லை" என்று ஏற்பட்டுவிட்டால் அவரவர்களும் ஜாக்கிரதையாகி விடுவார்கள்; தற்காப்புக்குத் தயாராயிருப்பார்கள்.

அப்புறம் பட்டப்பகல் கொள்ளைக்காரர்களுக்குத்தான் காலமே யொழிய இரவில் கன்னம் வைக்கும் சாதுத் திருடர்களுக்கு ஆபத்தாய்ப் போய்விடும்!

எனவே, போலீஸ் வேலை நிறுத்தம் செய்தால் அதை முடிவு செய்வதில் கன்னம் வைக்கும் திருடர்களுக்குச் சிரத்தை ஏற்படுவது இயற்கை.

அடுத்தபடியாக, அது விஷயத்தில் சிரத்தை கொள்ள வேண்டியவர்கள் பொது ஜனங்கள்.

அன்னிய ஆட்சியின்கீழ் அடிமைகளாக இருக்கும் நிலைமையில் எல்லாம் தலைகீழாக நமக்குத் தோன்றுகிறது. சுதந்திரக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்குப் போலீஸ்காரர்கள் உபயோகிக்கப்பட்டு வந்த காரணத்தினால், பொது ஜனங்கள் போலீஸாரைச் சத்துருக்களாக கருதுவது வழக்கமாகி விட்டது. ஆனால் சுதந்திர இந்தியாவிலோ, பொதுஜனங்

களுக்கு மிகவும் முக்கியமான சேவை செய்யும் உற்ற நண்பர்களாகப் போலீஸார் கருதப்படுவார்கள்.

அப்படியிருக்க, இந்தியாவுக்குச் சுதந்திரம் நெருங்கி வந்துகொண் டிருப்பதாகத் தோன்றும் இந்த இரண்டுங் கெட்ட நிலைமையில் போலீஸ்காரர்கள் வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பிக்கிறார்கள்! இது என்ன கூத்து!

போலீஸார் வேலை நிறுத்தம் செய்தால் ரொம்ப நல்லதாய்ப் போயிற்று என்று பொதுஜனங்கள் சந்தோஷப்பட்டு சும்மா இருந்துவிடுவதா? அல்லது வருங்காலத்தை நினைத்துப் பார்த்து வேலை நிறுத்தம் செய்யும் போலீஸாரிடம் அனுதாபம் காட்டி அவர்களுடைய குறைகள் தீர்க்கப்படுவதற்கு ஒத்தாசை செய்வதா? பெரிய தர்ம சங்கடமாகவல்லவா இருக்கிறது?

*    *    *

வேலை நிறுத்த வேடிக்கைகளில் போலீஸ் வேலை நிறுத்தத்தையும் மிஞ்சியது ஒன்று உண்டு என்றால் அது பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் வேலை நிறுத்தந்தான்!

இதுகாறும் நாம் சாதாரணமாய் மாணாக்கர்களின் வேலை நிறுத்தம் பற்றித்தான் கேள்விப்பட்டு வந்திருக்கிறோம். திடீரென்று தேசபக்தி மிதமிஞ்சிப் போய்ச் சுதந்திர ஆவேசம் வந்து மாணாக்கர்கள் வகுப்பை விட்டுக் கிளம்பி ஊர்வலம் போகத் தயார் ஆவார்கள். தேசபக்தியும் சுதந்திர தாகமும் இல்லாத உபாத்தியாயர்கள் குறுக்கே நின்று மறித்து நல்ல வார்த்தை சொல்லி மாணாக்கர்களை வகுப்புக்குத் திரும்பச் சொல்வார்கள்.

இதையெல்லாம் நாம் பார்த்திருக்கிறோம்; கேட்டிருக்கிறோம்.

ஆனால், உபாத்தியாயர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்றும், தெருவீதிகளில் ஊர்வலம் போனார்கள் என்றும் சென்ற மாதத்திலேதான் முதன் முதலாகக் கேள்விப்பட்டோம்.

48243
031:648
MADURAI UNIVERSITY LIBRARY

பம்பாயில் அந்த விநோதம் நடந்தது...சென்னை மாகாணத்திலும் சில இடங்களில் அந்த வேடிக்கை நடக்கும் என்று பேச்சு உலாவுகிறது.

உபாத்தியாயர்களும் ஆசிரியர்களும் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு வேலை நிறுத்தம் செய்வது பற்றித் தீவிரமாக யோசித்து வருவதாகத் தெரிகிறது.

போலீஸ்காரர்களையும், பள்ளிக்கூட உபாத்தியாயர்களையுமே வேலை நிறுத்த வேகம் பீடித்திருக்கிறது என்றால், மற்றவர்களைப் பீடிப்பதற்குக் கேட்பானேன்?

தபாலாபீஸ் சிப்பந்திகள் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்; டிராம்வே தொழிலாளிகள் நோட்டீஸ் கொடுத்துப் பூர்வாங்க வெற்றி பெற்றுவிட்டார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டு உண்ணாவிரதமும் இருக்கப் போகிறார்கள்.

மற்றப்படி ஆலைத் தொழிலாளிகள், ஓட்டல் தொழிலாளிகள், அச்சுத் தொழிலாளிகள் முதலியோர் வேலை நிறுத்தம் தொடங்குவதற்குக் காரணங்கள் கண்டுபிடித்து வருகிறார்கள்.

ரயில்வேத் தொழிலாளிகள் தங்களுடைய அபாரமான சக்தியைச் சென்ற சில வருஷங்களில் ரொம்பவும் உணர்ந்திருக்கிறார்கள்.

நாலு இடத்தில் தண்டவாளத்தைப் பிடுங்கி ரயிலை நிறுத்துவதால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே ஸ்தம்பிக்கச் செய்ய முடியுமென்றால் ரயில்வேத் தொழிலாளிகள் தங்களுடைய சொந்தக் குறைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாதா?

சென்ற ஒரு வருஷத்தில் பொன் மலையில் சில சின்னப் பிரச்னைகளில் மின்னல் வேலை நிறுத்தங்கள் நடத்தி வெற்றியடைந்திருக்கிறார்கள்.

ரயில்வேத் தொழிலாளர்களுடைய குறைகள் பூர்ணமாகத் தீர்ந்துவிடவில்லை.

வேலை நிறுத்த வேகமும் குறைந்துவிட்டதாகத் தெரிய வில்லை.

*  *  *

இப்படித் தேசமெங்கும் வேலை நிறுத்த வேகமானது இந்தச் சந்தர்ப்பத்தில் பரவி வருவானேன் என்ற கேள்வி இயற்கையாக எழுகின்றது.

இந்தியா கூடிய சீக்கிரத்தில் சுதந்திரம் அடையப் போகிறது என்ற நம்பிக்கை தேசத்தில் எல்லா வகுப்பா ரிடையேயும் பரவிப் பதிந்திருப்பதுதான் காரணம். அந்த நம்பிக்கை காரணமாக, ஒவ்வொருவரும் தங்களுடைய நிலைமையை இந்தச் சந்தர்ப்பத்தில் உயர்த்திக்கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிருர்கள் ; அதற்கு எல்லாரும் அவசரப்படுகிருர்கள். ஒருவேளை இப்போது சும்மா இருந் தால் 'தூங்கின கன்று கடாக்கன்று' என்னும் பழ மொழிக்கு உதாரணமாகி விடுவோமே என்று அஞ்சுகிருர் கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எல்லாரும் தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ள விரும்புவது நியாயமானதுதான். அதற்காக அவசரப்படுவதும் இயற்கைதான். ஆனுல் ரொம்ப அவசரப்படுவதினுலும் காரியம் கெட்டுப்போய் விடலாமென்பதைத் தொழிலாளி பாட்டாளி வர்க்கத்தார் எழுத்தாளி கணக்காளி வர்க்கத்தார் எல்லாருக்கும் நினை ஷட்ட விரும்புகிறும்.

சுதந்திர இந்தியாவில் அவர்களுடைய நன்மைகள் புறக்கணிக்கப்படுமோ என்ற பயம் வேண்டியதில்லை.

காங்கிரஸ் மகாசபையும் அதன் தலைவர்களும் இந்தியா வின் சுதந்திரத்துக்காகப் போராடுவதெல்லாம் எதற்காக? இந்தியாவின் ஏழைத் தொழிலாளி மக்கள்—பாட்டாளி மக்களின் நன்மையை முன்னிட்டேயல்லவா?

அரசாங்க உத்தியோகங்களில் கீழ்ப்படியிலுள்ள போலீஸ் சேவகர்கள், வில்லைச் சேவகர்கள், குமாஸ்தாக்கள்,

கிராமாதிகாரிகள் முதலியவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதும், சொற்ப சம்பளத்தில் அரைப்பட்டினியோடு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களின் நிலைமையை உயர்த்துவதும் காங்கிரஸ் மந்திரிகள் முதன்மையாகச் செய்யவேண்டிய காரியங்கள் அல்லவா?

ஆனால், இதையெல்லாம் காங்கிரஸ் மந்திரிகள் செய்வதற்குச் சிறிது அவகாசம் கொடுக்க வேண்டும்.

வேலை நிறுத்தம் என்கிற தீவிரமான கடைசி ஆயுதத்தைத் தொழிலாளிகள் ஆரம்பத்திலேயே கையாளுவது முறையன்று. அதனால் அவர்களுக்கும் நன்மையில்லை. தேசத்துக்கும் நன்மையில்லை. அவசரப்பட்டு வேலை நிறுத்தம் செய்வதினால் காங்கிரஸ் மந்திரிகளுக்குச் சங்கடம் கொடுப்பதுடன், தங்களுக்கும் கஷ்டத்தைத் தேடிக் கொள்வதாகும்.

இதையெல்லாம் தொழிலாளிகளும் அவர்களை நடத்தும் தலைவர்களும் இலாக்காக்களில் கீழ்ப்படிகளில் உள்ள சிப்பந்திகளும் நன்கு கவனித்துக் கொஞ்ச நாளைக்குப் பொறுமையைக் கடைப்பிடிக்கக் கோருகிறோம்.

வேலை நிறுத்தம் என்கிற ஆயுதத்தை அவசரப்பட்டுப் பிரயோகித்துத் தங்கள் சக்தியை வீணாக விரயமாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

# ஞாபகம் வந்தது

பொன் அகப்பட்டாலும் புதன் அகப்படாது என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட சென்ற புதன்கிழமை யன்று அதிகாலையில் ம-ா-ா-ஸ்ரீ. கனம் பொருந்திய இந்தியப் பொதுஜனம் அவர்கள் தூக்கத்திலிருந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்ததும் அவருடைய திருநயனங்களில் பளீரென்று சூரிய கிரணங்கள் பட்டன. "ஓகோ! பொழுது விடிந்து விட்டது போலிருக்கிறது!" என்று எண்ணிக் கொண்டு வெளியில் புறப்பட்டதும், தமக்கு எதிரே ஒரு புதிய மனிதர் வருவதைக் கண்டு திகப்படைந்து நின்றார். "யாரோ? இவர் யாரோ? எந்த ஊரோ? எதற்கு வருகிறாரோ?" என்று யோசித்துக் கொண்டிருக்கையில், அந்த மனிதர், "நமஸ்காரம்! சௌக்கியந்தானே?" என்று கேட்டார். "ஏதோ இந்த மட்டும் சுமாராக சௌக்கியந் தான்!" என்றார் ஸ்ரீமான் பொதுஜனம்.

"என்னைத் தெரிவில்லையா?" என்றார் வந்தவர்.

"பார்த்த ஞாபகமா இருக்கிறது; ஆனால்,..." என்றார் பொதுஜனம்.

"என்னைப் பார்த்திருக்கமுடியாது. நான் புது ஆசாமி!" என்று சொல்லிப் புது மனிதர் புன்னகை புரிந்தார்.

ஸ்ரீமான் பொதுஜனம் கொஞ்சம் நாணம் அடைந்து, "அப்படியா? தங்கள் நாமதேயம் என்னவோ?" என்றார்.

"என் பெயர் கொஞ்சம் நீளம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழு என்று சொல்வார்கள்!"

அப்போதுதான் ஸ்ரீமான் பொதுஜனத்துக்கு ஞாபகம் வந்தது—பழைய வருஷம் போய்ப் புது வருஷம் வந்து விட்டது என்று!

அடாடா! பழைய 1946-ம் வருஷத்துக்கு விடை கொடுத்துக்கூட அனுப்பவில்லையே? நாம் தூங்கிக்கொண்டிருக்கும்போதே அல்லவா ஆசாமி பிரயாணம் ஆகிவிட்டார்? இது என்ன அநித்திய உலகம்? இது என்ன மாய வாழ்வு? இந்த உலகில் நேற்றைக்கு இருப்பாரை இன்றைக்கு இருப்பார் என்று எண்ண முடியவில்லையே?

இப்படி நினைத்தபோது ஸ்ரீமான் பொதுஜனத்தின் கண்களில் இரு கண்ணீர்த் துளிகள் துளித்தன.

"இது என்ன? உம்முடைய கண்களில் கண்ணீர் ஏன் வருகிறது? என்னைப் பார்த்ததில்...?" என்றார் புது மனிதர்.

"இல்லை, இல்லை; பழைய 1946-ம் வருஷத்தை நினைத்துக் கொண்டேன். கொஞ்சம் வருத்தமாயிருந்தது."

"அந்த முடுக்கில் நான் வந்தபோது அவர் போனதைப் பார்த்தேன். பாவம்! அவரிடம் தங்களுக்கு ரொம்பப் பிரியம் போலிருக்கிறது. அவ்வளவு நல்ல மனிதராக்கும்!"

"நல்ல மனிதரோ, பொல்லாத மனிதரோ? முந்நூற்றறுபத்தைந்து நாள் நெருங்கிப் பழகி விட்டோமல்லவா? பிரிந்தவுடன் துயரமாயிருக்கிறது!"

"நல்லவரா, பொல்லாதவரா என்பதைப் பற்றிச் சந்தேகமா யிருக்கிறதா, என்ன? நிச்சயமாகச் சொல்ல முடியாதோ?" என்று கேட்டார் புது மனிதர்.

"அது எப்படிச் சொல்ல முடியும்? மனிதர்கள் என்றால் நல்லதும் பொல்லாததும் கலந்துதான் இருக்கும். யாரா யிருந்தாலும் சரிதான் நல்லது பொல்லாததைப் பற்றி அபிப்பிராய பேதங்கூட இருக்கத்தான் இருக்கும். மகாத்மா காந்தியைப் பொல்லாதவர் என்று சொல்லுகிறவர்கள்கூட இல்லையா?" என்றார் பொதுஜனம்.

"அதற்கென்ன குறைச்சல்? கடவுளையே பொல்லாதவர் என்று சொல்கிறவர்கள்கூட இருக்கத்தான் செய்கிறார்கள். உம்முடைய அபிப்பிராயத்தில் 1946-ம் வருஷம் எப்

படி ? மொத்தத்தில் எப்படி என்றுதான் கேட்கிறேன். சில்லறையில் கேட்கவில்லை !" என்றார் புது மனிதர்.

இதைக் கேட்டதும் ம-ா-ா-ஸ்ரீ. இந்தியப் பொதுஜனம் அவர்களுக்குச் சென்ற 1946-ம் வருஷத்தில் நடந்த முக்கிய சம்பவங்கள் எல்லாம் ஞாபகம் வந்தன. மேற்படி வருஷத்தில் நம்முடைய நிலைமை எப்படி இருந்தது என்பதையும் ஞாபகப்படுத்திக் கொண்டார்.

உணவுக்கும் துணிக்கும் இன்னும் மற்ற சாமான்களுக்கும் தாம் பட்டபாடெல்லாம் அவருக்கு ஞாபகம் வந்தது. பதினாறு அவுன்ஸ் அரிசி எட்டு அவுன்ஸாகக் குறைந்தது நினைவுக்கு வந்தது. ரயிலிலும் பஸ்ஸிலும் டிராமிலும் பட்ட நெருக்கடிக் கஷ்டமெல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. கள்ள மார்க்கெட்டில் நடந்த கொள்ளைகளெல்லாம் நினைவுக்கு வந்தன. இதையெல்லாம் நினைக்க நினைக்கக் கோபமாய் வந்தது. ஆயினும் ஏதோ இந்த மட்டும் உயிரை வைத்துக் கொண்டு உடம்பை மூடிக்கொண்டு மானமாக வாழ்ந்து சென்ற வருஷத்தை ஒப்பேற்றினோமே என்பதை நினைத்து ஒருவாறு மனச் சாந்தி அடைந்தார்.

"இதெல்லாம் கிடக்கட்டும். உணவுக் கஷ்டம், உடைக் கஷ்டம், பிரயாணக் கஷ்டம், பணக் கஷ்டம்—இதையெல்லாம் எப்படியாவது சமாளித்துக்கொள்ளலாம். இன்றில்லாவிட்டால் நாளைக்குச் சரிபடுத்திக் கொள்ளலாம். ஆனால் அரசியல் நிலைமையின் விஷயம் என்ன? இந்தியாவின் சுதந்திர இலட்சியம் எந்தவகையில் நிறைவேறியிருக்கிறது? அன்னிய அதிகார வர்க்கத்தின் ஆட்சியிலிருந்து எந்த வரையில் மீட்சி கிடைத்திருக்கிறது? அன்னை பாரததேவியின் விலங்குகள் எவ்வளவு வரையில் தகர்ந்து முறிந்திருக்கின்றன?" என்று ஸ்ரீமான் பொதுஜனம் யோசனை செய்தார்.

அப்போது 1946-ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நடந்திருக்கும் முக்கியமான அரசியல் சம்பவங்கள் எல்லாம் அவருக்கு ஞாபகம் வந்தன.

இந்தியாவின் அரசியல் பிரச்னையைத் தீர்த்துவைத்து, இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவதற்காகச் சென்ற வருஷத்தின் ஆரம்பத்தில் பிரிட்டிஷ் மந்திரிகள் மூன்று பேர் இந்தியாவுக்கு வந்தார்கள். "ஆஹா! இது என்ன அற்புதம்! இந்த பிரிட்டிஷாரின் தாராள நோக்கந்தான் என்ன?" என்று சிலர் அதிசயித்தார்கள். "பிரிட்டிஷாராவது? மனதார இந்தியாவுக்கு விடுதலை அளிப்பதாவது? ஒருநாளும் இல்லை. இதில் ஏதாவது சூழ்ச்சி இருக்கும்!" என்று சிலர் சந்தேகித்தார்கள். ஆயினும் பிரிட்டிஷ் மந்திரிகளின் நல்ல நோக்கத்தில் நம்பிக்கை வைத்தவர்களின் கட்சிதான் ஜயித்தது.

காங்கிரஸ் தலைவர்களுக்கும் முஸ்லிம் தலைவர்களுக்கும் சமரசம் ஏற்படாமற் போனபோது, அதைக் காரணமாக வைத்துக்கொண்டு பிரிட்டிஷ் மந்திரிகள் நடையைக் கட்டியிருக்கலாம். அப்படி அவர்கள் செய்யவில்லை. அவர்களே ஒரு மத்தியஸ்தத் திட்டத்தைத் தீர்ப்பாக அளித்தார்கள்.

அந்தத் திட்டத்தில் ஒரே ஒரு அம்சத்தில் மட்டும் வியாக்கியான சுதந்திரத்தை வைத்துக்கொண்டு காங்கிரஸ் அதை முழுமையும் ஒப்புக்கொண்டது.

முதலில் திட்டத்தை ஒப்புக்கொண்ட முஸ்லிம் லீக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டதும் அதை நிராகரித்தது.

இதன் விளைவாக இடைக்கால தேசீய சர்க்காரைக் காங்கிரஸ் தலைவர்கள் தனிப்பொறுப்பில் அமைக்கும்படியாயிற்று.

பண்டித ஜவாஹர்லால்ஜி, சர்தார் வல்லபாய் பட்டேல், பாபு ராஜேந்திர பிரசாத், ராஜாஜி ஆகியவர்களைக்கொண்ட தேசீய சர்க்கார் ஜாம் ஜாம் என்று நடப்பதைக் கண்ட ஜனாப் ஜின்னா தாம் செய்த தவறை உணர்ந்தார். வைஸ்ராய் வேவலின் காதைக் கடித்து, இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீக்கினர் ஐந்துபேரை நுழைத்துவிட்டார். "காங்கிரஸ் முஸ்லிம் உள்ள தேசீய சர்க்காரில் லீக்கினர் சேர முடி

யாது !" என்று வெகுகாலமாகக் கூறிவந்த வீம்பை ஜனுப் ஜின்னு கைவிட நேர்ந்தது.

இதற்கிடையில், அதாவது இடைக்கால சர்க்காரில் முஸ்லிம் லீக்கினர் சேர்வதற்கு முன்னுல், தனிப்பட்ட காங்கிரஸ் சர்க்கார் நடப்பதை லீக்தலைவர்களால் பொறுக்க முடியவில்லை. இது காரணமாக அவர்கள் 'நேரடி நடவடிக்கை'த் தீர்மானம் செய்தனர். அந்தத் தீர்மானத்தின் விளைவாகக் கல்கத்தாவிலும் நவகாளியிலும் மிகப்பயங்கரமான ராட்சதச் செயல்கள் நடந்தன. அந்தச் செயல்களின் எதிரொலியைப்போல் பீஹாரிலும் மக்கள் பழிக்குப்பழி வாங்கத் தலைபட்டு மிகக் கொடுமையான காரியங்களைச் செய்தார்கள்.

பீஹாரில் மாகாண காங்கிரஸ் சர்க்கார் மிகவும் தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டபடியால் ஓரேவாரத்தில் கொடுஞ்செயல்கள் நின்று குழப்பம் அடங்கியது. அவ்வளவு பெரிய விஸ்தாரமான குழப்பம் இவ்வளவு சொற்பமான காலத்தில் அடங்கியதாக இதுவரையில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை என்று உலகமே வியந்தது.

ஆனுல் கீழ் வங்காளத்தில் அவ்வளவு விரைவாகக் கொடுமைச் செயல்கள் அடங்கவில்லை.

சேற்றிலே செந்தாமரை முளைத்ததுபோல் அந்தப் பயங்கரமான கொடுஞ்செயல்களிலிருந்து ஓர் அற்புதம் உண்டாயிற்று.

காந்தி மகாத்மா அந்தப் பயங்கரப் பிரதேசத்துக்குப் போய்ச் சேர்ந்தார். அசுரச் செயல்கள் நடந்த இடங்களில் அன்பையும் அஹிம்சையையும் உபதேசித்தார்.

அந்த ராட்சஸ பூமிக்குப் போக வேண்டாம் என்று பலர் மகாத்மாவைத் தடுத்தார்கள். அதையெல்லாம் காந்தி மகான் பொருட்படுத்தவில்லை. முன் வைத்த காலைப் பின் வைக்கவில்லை.

முதலில் அவ்விடம் போனபோது மகாத்மா, "என்னைச் சுற்றிலும் இருள் சூழ்ந்திருக்கிறது. ஒளியையே காண வில்லை!" என்ருர்.

ஆனல் சிலநாளைக்குப் பிறகு, அதாவது 1946-ம் வருஷக் கடைசியில், "இருள் சிறிது விலகியிருக்கிறது. சில ஒளிக் கிரணங்களைக் காண்கிறேன்!" என்று கூறினர்.

அதாவது, நவகாளிக்கு அவர் போனபோது அங்கே குடிகொண்டிருந்த நிலைமையைப் பார்த்தபோது அன்பும் அஹிம்சையும் வெற்றிபெறுமா என்பது பற்றி மகாத்மா வுக்கே சந்தேகமாய்ப் போய்விட்டது.

ஆனல் சில நாள் அங்கே தங்கிய பிறகு, அந்த ராட்சதச் செயல்கள் நடந்த பிரதேசத்திலே கூட அன்பும் அஹிம்சை யும் பலன் கொடுக்கும் என்ற நம்பிக்கை மகாத்மாவுக்கு ஓரளவு ஏற்பட்டிருக்கிறது.

கௌதம புத்தருக்கும் ஏசு கிறிஸ்துவுக்கும் பிறகு இந்தப் பூவுலகிலே அன்பு மதத்தையும் அஹிம்சாதர்மத்தை யும் போதிக்க அவதரித்த பிரபு கீழ் வங்காளத்திலே தமது அற்புதமான அஹிம்சா சோதனையை ஆரம்பித்து நடத்தி வருகிருர்.

1946-ம் வருஷத்தில் உலகத்திலேயே மிகமுக்கியமான சம்பவம் இது என்று சொல்ல வேண்டும்.

* * *

இந்தியாவின் அரசியல் வாழ்வில் மிகமுக்கியமான சம்பவம் டிசம்பர் 9உ புது டில்லியில் நிகழ்ந்தது. இந்தியா வின் நிரந்தர சுதந்திர அரசியல் திட்டத்தை நிர்ணயிப்பதற் காக அன்றைய தினம் அரசியல் நிர்ணய சபை ஆரம்ப மாயிற்று. சில பூர்வாங்கமான காரியங்களைச் செய்த பிறகு சபை ஜனவரிமீ 20உக்கு ஒத்திப்போடப்பட் டிருக்கிறது.

அரசியல் நிர்ணய சபையின் மேற்படி ஆரம்பக் கூட் டத்துக்கு முஸ்லிம் லீக்கினர் வந்திருக்கவில்லை. அதற்குக் காரணமாக அவர்கள் சொன்ன விஷயத்தைத் தீர்த்து

வைப்பதற்கு பிரிட்டிஷ் மந்திரிகள் ஜனுப் ஜின்னுவையும் பண்டித நேருவையும் லண்டனுக்கு அழைத்தார்கள். இந்தப் பிரயாணம் பயன் அளிக்கவில்லை. தகராறு தீரவில்லை.

தகராறுக்குக் காரணமாயிருந்த விஷயத்தில் பிரிட்டிஷ் மந்திரிகள் முஸ்லிம் லீக்குக்குச் சாதகமாக அறிக்கை விட்டார்கள்.

அதாவது பி. சி. தொகுதிகளில் அஸ்ஸாம் மாகாணமும் எல்லைப்புற மாகாணமும் கட்டாயம் உட்கார்ந்தே தீர வேண்டும் என்ருர்கள்.

இதன்பேரில் மேற்படி பிரச்னையை பெடரல் கோர்ட்டுக்குக் கொண்டுபோகும் யோசனையைக் காங்கிரஸ் தலைவர்கள் கைவிட்டார்கள். மேலே என்ன செய்வதென்று தீர்மானிக்க ஜனவரிமீ 5உ அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியைக் கூட்டத் தீர்மானித்தார்கள்.

* * *

மேற்படி சம்பவங்களையெல்லாம் ஞாபகப்படுத்திப் பார்த்துக்கொண்ட ஸ்ரீமான் பொதுஜனம், "மொத்தத்தில் 1946-ம் வருஷம் நல்ல வருஷந்தான். அதாவது இந்தியா தேசத்துக்குச் சொல்கிறேன். புதிதாக வந்திருக்கும் உம்முடைய சமாசாரம் எப்படியிருக்குமோ, தெரியவில்லை. நீர் என்ன செய்யப்போகிறீரோ, என்னமோ?" என்ருர்.

"என்னைப்பற்றி என்ன சந்தேகம்? நான் வருகிற போதே நல்ல செய்தி கொண்டுவந்திருக்கிறேனே?" என்ருர் புது மனிதர்.

"அப்படியா? அது என்ன நல்ல செய்தி?" என்று ஆவலுடன் கேட்டார் ஸ்ரீமான் பொதுஜனம்.

புதிய மனிதர் கையிலிருந்த அன்று காலைப்பத்திரிகையை நீட்டிஞர். அதில் "பிரிட்டிஷ் சர்க்கார் இனிமேல் இந்தியர்களுக்குக் கௌரவப்பட்டங்கள் கொடுக்கப் போவதில்லை." என்ற செய்தி கொட்டை எழுத்துத் தலைப்புடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

"சபாஷ்! ஐயா! சபாஷ்! இந்த வருஷம் இந்தியாவுக்கு மிகவும் நல்ல வருஷமாகத்தான் இருக்க வேண்டும். பூரண சுதந்திரமே இந்தியா அடைந்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எப்போது பிரிட்டிஷார் இந்திய அதிகாரவர்க்க தாஸர்களுக்குப் பட்டங்கள் கொடுப்பதில்லை என்று தீர்மானித்து விட்டார்களோ, அப்போது இந்தியாவைக் 'குவிட்' பண்ணவும் அவர்கள் முடிவு செய்திருக்க வேண்டும்!" என்று ஸ்ரீபொதுஜனம் உற்சாகத்துடன் கூறினார்.

"இங்கிலீஷ்காரர்கள் இந்தியாவை விட்டுப்போனாலும் இங்கிலீஷை நீர் விடமாட்டீர் போலிருக்கிறதே!" என்றார் வந்த மனிதர்.

"வெகுநாள் பழக்கமல்லவா? அதையும் இந்த வருஷத்தில் தொலைத்து விட்டால் போகிறது. தமிழுக்குக்கூட அல்லவா இப்போது யோகம் பிறந்திருக்கிறது?" என்றார் பொதுஜனம்.

இந்தச் சமயத்தில் ம-ா-ா-ஸ்ரீ பொதுஜனம் அவர்களுக்கு ஒரு முக்கியமான விஷயம் நினைவுக்கு வந்தது.

அது மிக மிக முக்கியமான விஷயந்தான். அதாவது தமது திருவயிற்றைப் பசி கிள்ளுகிறது என்பதுதான்.

உடனே ஸ்ரீபொதுஜனம் தமது வயிற்றைப் பார்த்து "அப்பா! யார் வந்தாலும் யார் போனாலும் நீ மட்டும் சும்மாயிருக்க மாட்டாய் போலிருக்கிறது. ஆனால் இந்தியா இன்னும் பூரண சுதந்திரம் அடைந்துவிடவில்லை. உணவுப் பஞ்சமும் இன்னும் தீர்ந்துவிடவில்லை. ஆகையால் இரண்டு இட்லி, ஒரு தம்ளர் காப்பி—இதற்குமேல் கேட்காதே! தெரியுமா? ஞாபகம் இருக்கட்டும்!" என்று எச்சரிக்கை செய்தார்.

பின்னர் பொதுஜனமும் புதுவருஷமுமாகச் சேர்ந்து "ஜயமுண்டு பயமில்லை மனமே!" என்று கோஷ்டி கானம் செய்துகொண்டு போனார்கள்.

# சாது மிரண்டால்...!

"இது தருமமா? இது தருமமா? இது நியாயந்தானா?

"மோசம் போனோம். 'பொறுத்தவர் பூமியாள்வார்' என்ற ஆன்றோர் வாக்கியத்தை நம்பி மோசம் போனோம்.

"பொறுமையாக இருப்போருக்கு இது காலமல்ல இவ்வளவு காலமாகப் பொறுமையைக் கட்டி அழுதுகொண்டிருந்ததின் விபரீத பலனை இன்று நாங்கள் அனுபவிக்கிறோம்.

"அன்றும் இன்றும் என்றும் அரைப்பட்டினியால் அவஸ்தைப்பட்டு வருவதுதான் நாங்கள் கண்ட பலன் இன்னும் பாருங்கள்.

"பொறுமை இழந்து பொங்கி எழுந்தோரெல்லாம் பூரண பலனை அனுபவித்து வருகிறார்கள். பொறுமையும் பொறுப்பு உணர்ச்சியும் எங்களைப் பாதாளத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டன.

"போதாக் குறைக்கு ஆசைவார்த்தைகளும் சொல்லி எங்களை ஏமாற்றிவிட்டார்கள்.

"மகத்தான கௌரவம் பொருந்தியதொரு தொழிலைச் சேர்ந்த எங்களுக்குக் கௌரவ ஏணியின் அடிப்படையில் கூட இடம் கிடைக்காமல் செய்துவிட்டார்கள்.

"ஜனப் பிரதிநிதிகள் அரசாங்கத்தை நடத்த ஆரம்பித்து விட்டார்கள். எங்கள் கலி தீர்ந்துவிடும் என்று நம்பிக் கொண்டிருந்தோம். ஆனால், அரசாங்கம் எங்கள் தலையில் ஒரு பெரிய கல்லைத் தூக்கிப் போட்டு விட்டது.

"இருந்தாலும் எங்களை நசுக்கிவிட முடியாது. எங்கள் கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுவதை இனி நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம்.

"நாங்கள் இதுவரை சாதுக்களாக இருந்தோம். ஆனல் சாது மிரண்டால் என்ன ஆகும் என்பதை இப்போது சர்க்காருக்குப் பிரத்தியட்சமாகக் காட்டப்போகிறோம்"

இவ்வாருக, பள்ளிக்கூட ஆசிரியர்கள் சென்னை சர்க்கார் கல்வி மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார்கள்.

இதைத் தவிர, பல விடங்களிலும் ஆசிரியர்கள் கூட்டங்கள் கூடிச் சென்னை சர்க்காரின் விசித்திரமான சம்பளத் திட்டத்தைக் கண்டித்துத் தீர்மானங்களும் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அரைப்பட்டினிகிடந்து நடைப்பிணங்களாக இருந்து வருவதைக் காட்டிலும், முழுப்பட்டினி கிடந்து மோட்சம் அடைவதே சாலச் சிறந்தது என்றும் சில ஆசிரியர்கள் முடிவு செய்து உண்ணு விரதமும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

* * *

இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகக் கொடுங்கோலாட்சியைச் சகித்து வந்த இந்தியாவுக்குக்கூட கதி மோட்சம் ஏற்படும் காலம் வந்திருக்கிறது.

எனினும் ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் மாத்திரம் அன்றிருந்த மேனிக்கு அழிவின்றி ஆருத்துயரத்துக்கு ஆளாகியே வருகிறார்கள்.

அவர்களைப் பொறுமைக் கடல் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களுடைய பொறுமைக்குக் கங்குகரை கிடையாது.

ஆம். விலைவாசிகள் ஆகாய சஞ்சாரம் செய்துவரும் இக் காலத்தில்கூட ஆசிரியர்கள் மாதம் முப்பது ரூபாய் சம்பளத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்களெனில் அவர்களுடைய பொறுமையைப் பார்த்து பூமாதேவியும் பேராச்சரியம் அடைவாளென்பதில் சந்தேகம் இருக்க முடியுமா?

ஆனால், எத்தனையோ வருஷங்களாகப் பொறுமையுடன் இருந்துவந்திருக்கும் அவர்களைக்கூட, சென்னை சர்க்காரின் செய்கை, மேற்கூறியவாறு திடுக்கிட்டுத் துள்ளிக் குதிக்கும்படி செய்திருக்கிறது.

சிற்சில விஷயங்களில் சென்னை சர்க்காரின் போக்கு விசித்திரமாக இருக்கிறதல்லவா? அது போலவே, இவ் விஷயத்திலும் அவர்கள் தங்களுடைய விசித்திர வேலையைக் காட்டிவிட்டார்கள்.

அதாவது, குறைந்த சம்பளம் பெற்று வரும் சர்க்கார் சிப்பந்திகள், உபாத்தியாயர்கள் முதலியோரின் சம்பள விகிதங்களை தற்கால நிலைமையை அனுசரித்து மாற்றும் விஷயமாக ஆலோசித்துச் சென்னை மந்திரிகள் கமிட்டி சமீபத்தில் தன் சிபார்சுகளை வெளியிட்டது நேயர்கள் அறிந்ததே!

மேற்படி கமிட்டி செய்துள்ள சிபார்சுகளில் எத்தனையோ குறைகள் இருக்கின்றன.

உதாரணமாக, சிப்பந்திகளில் ஒரு பிரிவினருக்கு 135% சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்றொரு பிரிவினருக்கு $7\frac{1}{2}$%தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. அநீதியும் ஆட்சேபகரமுமான இந்த வித்தியாசம் ஏன்?

மற்றும் பள்ளிக்கூட ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அக்கமிட்டி செய்துள்ள சிபார்சுகள், புண்ணில் கோலிட்டதற் கொப்ப, ஆசிரியர்களுக்கு மிகுந்த மனக் கொதிப்பை உண்டுபண்ணியிருக்கின்றன.

*　　　*　　　*

தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பளவிஷயம் மிகவும் கஷ்டமான ஒரு பிரச்னை என்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது. அது கஷ்டமான பிரச்னை என்று கூறுவதுடன் சர்க்காரின் கடமை முடிந்துவிடாதென்பதை நாமும் கூற விரும்புகிறோம்.

பள்ளிக்கூடங்களை நடத்தும் தனி நபர்கள் மிக மிக ஏழைகளாக இருக்கிறார்களாம். எனவே, அவர்களால் ஆசிரியர்களுக்குப் போதிய சம்பளம் கொடுக்க முடியாதாம். பிரகாசம் சர்க்காரின் இந்தக்கூற்று வெகு வேடிக்கையாக இருக்கிறது.

பரம ஏழைகளாக இருப்போர் பள்ளிக்கூடங்களை நடத்த சர்க்கார் ஏன் அனுமதிக்க வேண்டும்? அவர்களும் பரம ஏழைகளாக இருந்துகொண்டு ஆசிரியர்களையும் படு மோசமான ஏழைகளாக வைத்துக்கொண்டிருப்பதால் யாருக்கு என்ன லாபம்?

ஒன்று சர்க்கார் அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு அதிக உதவித் தொகையளித்து நிலைமையைச் சீர்படுத்த உடனே முயற்சிக்க வேண்டும். இன்றேல், அப்பள்ளிக் கூடங்களைச் சர்க்காரே தங்களுடைய நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டுவிட வேண்டும்.

* * *

ஆசிரியர்கள் விஷயத்தில் சென்னை சர்க்கார் அலட்சியமாக இருந்திருந்தால்கூட, அவர்களுக்கு இவ்வளவு ஆத்திரம் ஏற்பட்டிராது. ஆனால், மேற்படி கமிட்டியின் சிபார்சுகள் மேற்கொண்டு அவர்களை அவமதித்து அவர்களுக்கு அநீதியும் இழைப்பதாய் இருக்கின்றன.

அதாவது எஸ். எஸ். எல். ஸி. படிப்புள்ள சாதாரண குமாஸ்தாவின் சம்பளம் 45 ரூபாய் என்று சர்க்கார் நிர்ணயித்திருக்கிறார்கள். தற்கால விலைவாசிகளைக் கவனிக்கும் போது இது மிகக் குறைந்த சம்பளம் என்பதில் சந்தேகம் இருக்க இடமில்லை.

ஆனால், அதே படிப்பைப் பூர்த்தி செய்து விட்டு, மேற்கொண்டு இரண்டுவருடகாலம் போதனை முறைப் பயிற்சியும் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு அதைக்காட்டிலும் குறைந்த சம்பளம் நிர்ணயித்திருக்கிறார்கள்.

அதாவது, சர்க்காரின் புதிய திட்டப்படி ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியருக்கு மிகவும் தாராளமாக மாதம் 35 ரூபாய் அதிகபட்ச சம்பளம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது!

எந்தத் தர்ம சாஸ்திரத்தை அல்லது பொருளாதார சாஸ்திரத்தை, ஆதாரமாகக் கொண்டு சர்க்கார் இவ்வாறு நிர்ணயித்தனரோ, கடவுளுக்குத்தான் தெரியும்!

எத்தனையோ ஆண்டுகளாக ஆசிரியர்கள் பட்டுவரும் அவஸ்தை தெரிந்திருந்தும்கூட, இவர்கள் ஏன் மேற்கொண்டு அனுவசியமாகப் பயிற்சி பெற்று ஆசிரியர் திருக் கூட்டத்தில் சேர்ந்தார்கள் என்ற ஆத்திரத்தினால் சென்னை சர்க்கார் அவ்வாறு ஆசிரியர்களின் தலையில் கை வைத்தார்களா?

அல்லது மற்றச் சகலரும் நேர் நடவடிக்கையில் இறங்கி சர்க்காரைச் சஞ்சலத்திற்குள்ளாக்கிச் சந்தியில் இழுத்துவிடுகிறார்கள். ஆனால் ஊருக்கு இளைத்தவர்களும், பொறுமையைத் தவிர வேறெந்த பூஷணத்தையும் அறியாதவர்களுமான பள்ளிக்கூட ஆசிரியர்கள் அவ்வாறு எதுவும் செய்துவிட மாட்டார்கள் என்ற துணிச்சலுடன் சர்க்கார் கூச்சமின்றி வெட்கக்கேடான மேற்படி சம்பள விகிதத்தை நிர்ணயித்தார்களா?

புதிய திட்டத்தின் மூலம் ஆசிரியர்களுக்கு மற்றொரு விதத்திலும் அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது.

அதாவது படிப்பிலும் பயிற்சியிலும் ஒரே வித யோக்கியதாம்சங்களுள்ள ஆசிரியர்களிடையே பாரபட்சம் காட்டப்பட்டிருப்பதுதான்.

லோயர் அல்லது ஹையர் அல்லது ஸெகண்டரி கிரேடைச் சேர்ந்த உபாத்தியாயர்களுக்கு சர்க்கார் பள்ளிக்கூடங்களில் அதைவிடக் குறைவாகவும் தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் எல்லாவற்றையும்விடக் கேவலமாகவும் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

ஹிந்து மதத்திற்கே களங்கமாக இருந்து வந்த தீண்டாமை இன்று தவிடுபொடியாகி வருகையில், ஆசிரியர்களிடையே சர்க்கார் ஒரு புது தினுசு தீண்டாமையைப் புகுத்தியிருப்பது கேலிக்கூத்தாகும்.

அதாவது எய்டெட் பள்ளிக்கூட ஆசிரியர்களைத் தீண்டாதவர்கள் போன்று சர்க்கார் ஏதுக்குத் தள்ளிவிட்டனர்!

*　　*　　*

குதிரை கீழேதள்ளியதுமின்றிக் குழியும் பறித்ததாம். ஏற்கெனவே ஆசிரியர்களுக்குச் சம்பளம் மிகக் குறைவு. இந்த லட்சணத்தில் அவர்கள் விபரீதமான பாரபட்ச முறைக்கும் ஆளாவதெனில், அதை யார்தான் சகித்துக் கொண்டிருக்க முடியும்?

அதனால்தான் பொறுமையே உருவெடுத்தவர்களான ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள்கூட இப்போது ஆர்ப்பரித்து எழுந்திருக்கிறார்கள்.

அன்னியர்களும், அன்னியர்களின் தாஸர்களும் அரசாங்க நிர்வாகத்தை நடத்திவந்த காலத்தில் ஆசிரியர்கள் பட்ட அவதியும் அவமதிப்பும் போதாதா?

நாடெங்கும் கட்டாயக் கல்வி முறையை அமுலுக்குக் கொண்டு வந்து அறியாமை அந்தகாரத்தை அடியோடு அகற்ற முற்பட வேண்டிய ஜனப்பிரதிநிதி சர்க்கார், ஈவிரக்கமின்றி ஆசிரியர்களுடைய வயிற்றில் அடித்திருப்பதன் மூலம் கல்வியின் அஸ்திவாரத்துக்கே அடி கொடுத்திருக்கிறார்கள் என்று கூறுவது மிகையாகாது.

ஆகையால், இந்த அநீதிக்கு உடனே பரிகாரம் தேட வேண்டியது சென்னை சர்க்காரின் அவசரமான கடமையாகும்.

தற்போதுள்ள சென்னை அரசாங்கம் உண்மையான ஜனநாயக அரசாங்கமாக இருக்குமாயின் அது கீழ்க்கண்ட முறைகளையாவது உடனே கைக்கொள்ள வேண்டும்.

1. அரைப்பட்டினி கிடந்து வரும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு வேளையாவது முழு ஆகாரம் கிடைக்கக்கூடிய வாறு சம்பளத்தை உயர்த்த வேண்டும்.

2. ஒரேவித யோக்கியதையுள்ள ஆசிரியர்களிடையே புகுத்தப்பட்டிருக்கும் தீண்டாமைக் கொடுமையைத் தொலைத் தொழிக்க வேண்டும்.

3. மற்ற சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது போன்று ஆசிரியர்களுக்கும் இடைக்கால உதவி அளிக்க வேண்டும்.

மிகவும் அவசரமான, முற்றிலும் நியாயமான இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் சர்க்காருக்குத் தயக்கமோ அல்லது தடுமாற்றமோ இருக்கக் காரணம் எதுவுமில்லை.

இதற்கு முன் அதிகாரத்திலிருந்த ஏகாதிபத்தியவாதிகள் ராணுவத்துக்கும் இதர அதர்ம காரியங்களுக்கும் எல்லையின்றிக் கனகாபிஷேகம் செய்வார்கள். ஆனால் அவர்களுக்கு இந்தியர்களின் கல்வி அல்லது ஆரோக்கிய அபிவிருத்தி விஷயத்தில் மாத்திரம் "பணக் கஷ்டம்" வந்து குறுக்கிட்டுவிடும்.

பணக்கஷ்டம் என்பதற்காக எதிர்காலத் திட்டங்களைத் தள்ளி வைக்கலாம். ஆனால் பட்டினிப் பிரச்னையைத் தள்ளி வைக்க முடியாது.

சர்க்காரின் பணக்கஷ்டம் தீரும் வரையில் ஆசிரியர்கள் பட்டினி கிடந்து பரிதவிக்க முடியாது. ஆகையால் 'பணக்கஷ்டம்' என்று கூறிச் சென்னை சர்க்கார் அப்பிரச்னையைக் கைகழுவ முற்படுவது தகாது. தருமமாகாது. நியாயமுமாகாது.

சமூக வளர்ச்சிக்கே அஸ்திவாரமான பள்ளிக்கூட ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்ந்தால்தான் அரசாங்கத்தின் அந்தஸ்தும் உயரும்.

# குமரியும் குன்றமும்

ஓர் ஊரில் குறி தவருமல் அம்பு எய்வதில் மகா நிபுணனுன ஒருவன் இருந்தான். ஒருவருடைய உச்சந் தலையில் ஓர் எலுமிச்சம் பழத்தை வைத்து, அவன் வெகு தூரத்திலிருந்து அம்பு எய்தாஞயின் எலுமிச்சம் பழம் இரண்டாகத் துணிக்கப்பட்டு அப்பால் போய் விழும். அதை உச்சந்தலையில் வைத்துக்கொண்டிருந்தவருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது.

அவன், இதுபோல் மயிர்க்கூச்சு எடுக்கும் மற்றும் பல அற்புத சாகஸங்களையும் ஒருமுறை கூடத் தவருமல் வெற்றிகரமாகச் செய்வதில் கைதேர்ந்தவன்.

ஒருநாள் ராஜ சபையில் அவன் தனது சாகஸ வேலைகளைக் காட்டிக்கொண்டு வந்தபோது எலுமிச்சம் பழத்தைத் துணிக்கும் கட்டம் வந்தது.

சபையிலிருந்த பிரமுகர்களில் ஒருவர், அங்கிருந்த அந்த நிபுணனின் மகனையே அழைத்து வந்து அவன் தலையில் எலுமிச்சம் பழத்தை வைத்து அதைத் துணிக்கும்படி நிபுணனிடம் கூறினுர்.

நிபுணன் அப்படியே சிறிது நேரம் பிரமித்து நின்றுவிட்டான்.

அவனுக்கு அதுவரை அத்தகைய அனுபவம் ஏற்பட்டதில்லை.

யாராவது முகம் தெரியாத ஒருவர் தலையில் பழத்தை வைத்தே அவன் துணிப்பது வழக்கம். எனவே, அதற்கு மாருக, அவன் தன் சொந்த மகனின் தலைமீதுள்ள பழத்தைத் துணிக்க வேண்டுமென்று கட்டளையிடப்பட்டதும் தயங்கித் தடுமாறிவிட்டான்.

மகன் மீதுள்ள பாசமானது அவனுடைய தைரியத்தை யும் நிலைகுலைத்து விட்டது. அவனது கைகள் நடுங்கின. குறியும் தவறியது.

மகன் பிழைத்து வீடுவந்ததே பிரம்மப் பிரயத்தனமாகி விட்டது!

குறிப்பிட்ட நபர், அல்லது வஸ்துவின் மீதுள்ள பாச மானது, மனிதனை அவ்வாறு நிலைகுலைந்து நிதான புத்தியை இழக்கும்படி செய்து விடுகிறது.

இப்போது நமது ஆந்திர சகோதரர்களில் சில பிர முகர்களைப் பாருங்கள்.

ஆந்திரப் பிரதேசத்தைத் தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

அது ரொம்ப சரி.

அவ்வாறு பிரிப்பது ஆந்திரர்களுக்கு நல்லதுதான். அவ்விதம் பிரிப்பதால் தமிழர்களுக்கு இரண்டு மடங்கு அதிக நன்மையாதலால், ஆந்திரா பிரிவினையை எதிர்க்கும் தமிழர் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆனால் ஆந்திர மாகாணத்திலுள்ள பாசமானது, சில ஆந்திரப் பிரமுகர்களை நிதான புத்தியை இழக்கும்படி செய்யும்போதுதான், தகராறுகளுக்கும் ஆட்சேபனைகளுக் கும் இடமேற்படுகிறது.

சமீபத்தில் நடந்த ஆந்திர மகாசபையின் விசேஷ மகாநாட்டில், ஆந்திரா பிரிவினை விஷயமாக வெகு காரசாரமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக் கிறார்கள்.

பாஷா வாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டும் என்பது ஏற்கெனவே காங்கிரஸால் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும்.

எனவே, அதை யாரோ எதிர்ப்பதுபோல் ஆந்திரர்கள் ஆவேசங்கொண்டு பேசவேண்டிய அவசியமே யில்லை.

ஆந்திரா பிரிவினை சிறிது காலதாமதமானாலும் இடைக்கால ஏற்பாடாகத் தனி மந்திரி சபையும் பட்ஜெட்டும் வேண்டுமென்று சில ஆந்திரப் பிரமுகர்கள் துடிக்கின்றார்கள்.

இதையும் தமிழர் வரவேற்பார்களே யன்றி, ஆட்சேபிக்க மாட்டார்கள். ஏனெனில், அவ்வாறு ஏற்படுவதால் தமிழ் நாட்டுக்கு லாபமே ஒழிய நஷ்டம் எதுவுமில்லை.

தன் அபிவிருத்திக்காக ஆந்திரர்களிடமிருந்து வருமானத்தை எதிர் பார்க்கக்கூடிய துர்பாக்கிய நிலைமையில் தமிழ்நாடு இல்லை என்பதை, நிதான புத்தியை இழக்காத ஆந்திரர்கள் அங்கீகரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

எதிர் காலத்தில் ஏற்படவிருக்கும் தங்கள் மாகாணத்தின் மீதுள்ள பாசத்தினால் ஆந்திரப் பிரமுகர்கள் தங்கள் மாகாண எல்லையைக் குறித்தும் விசித்திரமான யோசனைகளைக் கிளப்பும்போதுதான், அவர்களுடைய கூற்றைத் தமிழ் நாட்டார் கண்டிக்காமலிருக்க முடியவில்லை.

இவ் விஷயத்தில் பிரகாசம்காரு போன்றவர்கள் கூட விநோதமான முறையிலேயே பேசுகின்றனர்.

பழைய சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்பவர்கள் சென்னை மாநகர் ஆந்திரர்களின் பிதுரார்ஜித சொத்து என்பதை அறிந்து கொள்வார்கள் என்றும், ஆந்திர தேசத்தைச் சேர்ந்த ஒரு பெரிய ராஜா சென்னையை பிரிட்டிஷாருக்குத் தானம் செய்தார் என்றும் ஆந்திர கேசரி பிரகாசம்காரு கூறுகிறார்.

சென்னை நகரமும், மற்றும் சில பாகங்களும் தமிழ் நாட்டிலிருந்து பிரிக்கப்படவேண்டுமென சர். பி. என். ராவ் ஒரு அரிய பெரிய அபூர்வ 'திட்டம்' போட்டிருக்கிறாராம்.

மேற்படி அர்த்தமற்ற ஆதாரமற்ற கூற்றுக்களையெல்லாம் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி கண்டித்திருப்பதைக் குறித்து சந்தோஷ மடைகிறோம்.

வடக்கே திருவேங்கடம், தெற்கே கன்னியா குமரி.

இதுதான் தமிழ் நாட்டின் எல்லை.

சரித்திர ரீதியாகவும், சம்பிரதாய ரீதியாகவும், கர்ண பரம்பரை ரீதியாகவும், இதற்கு எத்தனையோ ஆதாரங்கள் எடுத்துக் காட்டமுடியும்.

அப்படியிருக்க, தமிழருக்குச் சொந்தமான சென்னையை ஆந்திர கேசரிகள் பாக்கிஸ்தான் செய்ய முயற்சிப்பதைத் தமிழ் மகா ஜனங்கள் எக்காலத்தும் அனுமதிக்க மாட்டார்கள்.

இவ்விஷயமாக ஆந்திரப் பிரமுகர்கள் புதிய பிரச்னை எதையும் கிளப்பி அதிகக் குழப்பத்தை உண்டுபண்ணமல் இருப்பதே புத்திசாலித்தனமாகும்.

அதையொட்டி ஸ்ரீ காளா வெங்கடராவ் கூறியுள்ள யோசனை மிகவும் போற்றத்தக்கது.

அதாவது ஆந்திரம், கேரளம் கர்நாடகம் முதலிய பாஷாவாரி மாகாணங்களுக்கு எல்லைகள் வகுக்கும் விஷயத்தை அரசியல் நிர்ணய மகாசபையால் நியமிக்கப்படும் எல்லை நிர்ணய கமிஷனின் முடிவுக்கு விட்டுவிடுவதே சிறந்ததென்று அவர் கூறுவதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை.

அவ்வாறு செய்வதால் அனுவசியமான மனக் கொதிப்புக்கும், வாதப் பிரதிவாதங்களுக்கும், தகராறுகளுக்கும் இடமிராது.

சென்னையைப் பிளக்க வேண்டும் என்று கூறுவது நியாயமல்லவென்று சில மாதங்களுக்குமுன் விஜய நகரம் சர்விஜயா ஆந்திரர்களுக்குக் கூறியுள்ள புத்திமதியையும் இச்சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்டுகிறோம்.

எது எப்படியாயினும் கன்னியாகுமரியும் வேங்கடகிரியும் தமிழ் நாட்டின் இயற்கையான எல்லைகள் என்பதை இனிப் பிரம்ம தேவனாலும் அசைக்க முடியாது.

# சுவர்க்கப் பிறவிகள்

தமிழ் நாட்டில் ஆயிரக்கால் மண்டபம் என்று கேள்விப் படாதவர்கள் இருக்க முடியாது.

பலர் அந்த மண்டபங்களை நேரிலும் பார்த்திருப்பார்கள்.

முன்னொரு காலத்தில் ஆயிரம் தூண்களுடன் விளங்கிய மேற்படி அழகிய மண்டபங்கள் இன்று பெரும்பாலும் இடிந்து வெறுந் தூண்களாக மட்டுமே காட்சி அளிக்கின்றன.

அவை புராதனச் சிறப்பின் சின்னங்கள்.

அது போலவே, இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மாளிகைக்கும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தூண்கள் உண்டு.

அவை கல் தூண்களல்ல, கருங்கல் தூண்களும் அல்ல. "இரும்புத் தூண்கள்" என்று பிரசித்தி பெற்றவை.

அந்தத் தூண்கள் எவ்வளவு காலமாயினும் துருப் பிடிக்காதவை. யாராலும் அசைக்க முடியாதவை என்றெல்லாம் கருதப்பட்டு வந்தன.

ஆனால், இரக்கமற்ற அந்தப் பாழும் காலச் சக்கரத்திலிருந்து யார் தப்ப முடியும்?

இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மாளிகையைத் தகர்த்த காலச் சக்கரமானது, மேற்படி இரும்புத் தூண்களையும் அசைக்க ஆரம்பித்துவிட்டது.

அந்தத் தூண்களும் ஆட ஆரம்பித்து விட்டன.

மேற்படி தூண்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய கொடுமையின் சின்னங்கள்.

இந்தியாவில் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் உயிர் நாடி, ஐ. ஸி. எஸ்., ஐ. பி. எஸ். போன்ற கோஷ்டியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களே.

அவர்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் தாங்கும் "இரும்புத் தூண்கள்" என்று கூறுவது வெகு காலமாக வழக்கத்தில் இருந்து வருகிறது.

அவர்கள் லண்டனிலுள்ள இந்தியா மந்திரியால் நேரடியாக நியமிக்கப்படும் விசேஷ கௌரவம் படைத்தவர்கள். எனவே லண்டன் தேவஸபையிடமிருந்து நேரடியாக வரம்பெற்று வந்துள்ள அவர்களை மாகாண மந்திரிகளோ, இந்திய சர்க்கார் மந்திரிகளோ அசைக்க முடியாது.

பட்டவர்த்தனமாகச் சொல்லப்போனால் இந்தியாவிலுள்ள மந்திரிகளையும், கவர்னர்களையும், ஏன் வைஸ்ராயையும், கூட ஆட்டி வைப்பவர்கள் ஐ. ஸி. எஸ். காரர்களே என்று கூறுவது மிகையாகாது.

அவர்களுக்குச் சம்பளமும், சலுகைகளும் அதிகமானவை. எனவே, அவர்களை "சுவர்க்கப் பிறவிகள்" என்றும் கூறுவதுண்டு.

அவர்கள் இந்தியக் கஜானாவிலிருந்து ஊதியம் பெறுவோராயினும், இந்திய ஜனங்களின் எஜமானர்களேயன்றி ஊழியர்கள் அல்ல.

அதாவது பிரிட்டிஷாரின் நலனுக்காக இந்தியர்களுக்கு அநீதியும் இழைக்கத் தயங்காத ஒரு திருக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான் மேற்படி கோஷ்டியார் என்று கூசாமல் கூறிவிடலாம்.

பிரிட்டிஷாரின் ஏகபோக பாத்தியமான கோட்டையாக இருந்து வந்த ஐ. ஸி. எஸ். வர்க்கத்தில் நீண்டகாலக் கிளர்ச்சிக்குப் பின்னர்தான் இந்தியர்களுக்கு இடம் கிடைக்கத் துவங்கியது.

இந்தியாவில் பிரிட்டிஷாரால் இழைக்கப்பட்ட எண்ணிக்கையற்ற அநீதிகள் பலவற்றிற்கும் ஐ. ஸி. எஸ். காரர்களான ஆங்கிலேயர்கள்தான் முக்கிய காரணஸ்தர்களாக இருந்து வந்திருக்கிறார்கள்.

ஆட்சி முறையில் உலகிலேயே ஒரு நாட்டிலும் இராத விசித்திரங்கள் இந்தியாவில்தான் உண்டு.

பொது ஜனங்களின் அபிமானத்தை இழந்ததுமன்றி, அவர்களுடைய ஏகோபித்த எதிர்ப்பையும் சம்பாதித்துக் கொள்ளும் அதிகாரி, அவர் பிரதம மந்திரியாயினும் அல்லது பதவி ஏணியின் கீழ்ப்படியில் இருப்பவராயினும், உண்மையான ஜனநாயக அரசாங்கத்தின்கீழ் அதிக காலம் நீடிக்க முடியாது.

ஆனல், இந்தியாவிலோவெனில் ஓர் அதிகாரி எவ்வளவுக் கெவ்வளவு பொது ஜனங்களிடை செல்வாக்கை இழக்கின்ருரோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அவர் பிரிட்டிஷ் சர்க்காரின் கருணு கடாட்சத்துக்குப் பாத்திரராவர்.

ஒருவருக்கு பொதுஜனங்களின் அபிமானம் 0 என்ருல், அவர் பிரிட்டிஷ் சர்க்காரின் 100% அபிமானத்துக்குப் பாத்திரராவது சர்வ நிச்சயம்!

இவ்வாறு பிரிட்டிஷ் சர்க்காரின் செல்லப்பிள்ளைகளான எத்தனையோ இந்தியப் பிரமுகர்களும் இருக்கிருர்கள்.

அத்தகையோருக்கு ஒரு பதவி போனுல் அதைக் காட்டிலும் பெரிய மற்ருெரு பதவி காத்துக்கொண்டிருக்கும்.

இதை விளக்க எத்தனையோ உதாரணங்கள் கூறலாம்.

கோடிக்கணக்கான ஜனங்களின் பரம அபிமானத்துக்குப் பாத்திரர்களான பாரதத் தவப் புதல்வர்கள் சிறைகளில் உழன்றதையும், பொதுஜன அபிமானம் என்பதைக் கனவிலும் கண்டு அறியாத 'பாக்கியசாலிகள்' பதவி ஏணியின் உச்சியில் பரமானந்தத்துடன் வீற்றிருந்ததையும் காட்டிலும் அதற்கு வேறென்ன உதாரணம் வேண்டும்?

பரத கண்டத்திலுள்ள சகலரும் 'படு கொலைகள் செய்த படுபாவி' என்று வெறுத்த ஓர் அதிகாரிக்கு பிரிட்டிஷார் பவுன் பட்டாக்கத்தி பரிசளித்துப் புகழ்மாலை சூட்டியதைக் காட்டிலும் வேறென்ன உதாரணம் வேண்டும்?

இந்த ஆங்கில ஐ. ஸி. எஸ். காரர்கள் இருக்கிறார்களே, இவர்கள் பெரிய மேதாவிகளும்கூட!

வேறெவருடைய கண்களுக்கும் புலப்படாத சில இரகசியங்கள் இவர்களுக்கு மாத்திரம் தென்படுவது உண்டு.

எத்தனையோ இளம் தேசபக்தர்களின் உதிரத்தை உறிஞ்சிய, எத்தனையோ இந்திய இளைஞர்களைப் பலி கொண்ட அந்தமான் தீவை 'பூலோக சுவர்க்கம்' என்று வாய் கூசாமல் வர்ணித்தவர் ஓர் ஐ. ஸி. எஸ். காரர்தான்.

அரசியல் வழக்குகளில் எல்லையின்றி அநீதி வழங்கிய 'பெருமை'யும் ஐ. ஸி. எஸ். காரர்களான மாஜிஸ்டிரேட்டுகளையே சார்ந்ததாகும்.

* * *

பழைய சம்பவங்களை மறந்துவிட்டு இன்று நடப்பதைத்தான் பாருங்களேன்.

இந்தியாவில் இந்தியர்களின் ஆட்சி ஏற்பட்டுவிட்டது. பிரிட்டிஷார் தாங்கள் வெளியேறும் நாளையும் நிச்சயித்துவிட்டார்கள்.

ராஜாவைக் காட்டிலும் அதிக ராஜ விசுவாசமுள்ள இந்த ஐ. ஸி. எஸ். காரர்களும், ஐ. பி. எஸ். காரர்களும் இன்னும் கூடத் தங்களுடைய விஷமத்தனத்தை விட்டபாடில்லை.

வைஸ்ராய் வேவலுக்குத் துர்ப்போதனை செய்து, அவரது பதவிக்கே பாக்கு வைத்தவர்கள் இந்த ஐ. ஸி. எஸ். காரர்களே.

பாஞ்சால, வங்காள, எல்லைப்புறக் கவர்னர்களுக்குச் சகுனிகளாக இருந்துகொண்டு, அம்மாகாணங்களில் நடைபெறும் படுகொலைகளையும், தூண்டிவிடுவோர் மேற்படி கோஷ்டியினர்தான் என்றும் கூறப்படுகிறது.

எனவே, இவ்வளவு தூரம் எல்லை கடந்த விசுவாசமுள்ள உத்தியோகஸ்தர்களை பிரிட்டிஷ் சர்க்கார் கைவிடுவார்களா?

அவர்களில் ஒவ்வொருவக்கும் ஒரு "நோபல் பரிசு" கொடுக்க பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்!

முழு நிர்வாகப் பொறுப்பையும் இந்தியர்களிடம் மாற்றிய பின் 'சுவர்க்கப் பிறவிகளா'ன ஐ. ஸி. எஸ். கோஷ்டியின் நிலைமையும் குறிப்பிட்ட இதர சிவில் இராணுவ அதிகாரிகளின் நிலைமையும் என்ன என்ற பிரச்னை எழுந்தது.

இவ் விஷயமாக பிரிட்டிஷ் சர்க்காருக்கும் இடைக்கால தேசீய சர்க்காருக்கும் நடந்த சமரசப் பேச்சின் பலனாக சில முடிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

எதிர் காலத்தில் அவர்கள் உத்தியோகத்தில் இருந்தாலும் சரி, அல்லது உத்தியோகத்தை விட்டுவிட்டு ஊருக்குப் போய்விட்டாலும் சரி, அவர்களின் சுக ஜீவனத்துக்கு அணுவளவு பாதகமும் ஏற்படக் கூடாதென்பதில் பிரிட்டிஷ் சர்க்கார் மிகுந்த சிரத்தை கொண்டுள்ளனர் என்பதையே, மேற்படி உத்தியோகஸ்தர்களுக்கு காட்டப்பட்டுள்ள எல்லை மீறிய சலுகைகள் நிரூபிக்கின்றன.

இந்தியர்களின் கைக்கு முழு நிர்வாகப் பொறுப்பும் வந்தபின் இந்திய மந்திரிகளின் கீழ் உத்தியோகத்தில் இருக்க விரும்புவோருக்கு முன்போலவே சம்பளம், ரஜா உரிமை, பென்ஷன், பாதுகாப்புகள் எல்லாம் உண்டு என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே, எதிர்காலத்தில் இந்தியாவின் பொருளாதார நிலைமை எப்படியிருந்தாலும், ஐ. ஸி. எஸ். வர்க்கத்தின் அதிர்ஷ்ட சக்கரம் மாத்திரம் எப்போதும் போலவே ஓடிக்கொண்டிருக்கும் என்று ஏற்படுகிறது.

இதுதான் இப்படியென்றால், இனி இந்தியாவில் உத்தியோகம் வகிக்க விருப்பமிராதவர்களுக்கு இன்னும் அதிக அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது.

அதாவது, அவர்கள் தங்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பென்ஷன் தொகையுடன் ஈடுப்பணம் என்று ஒரு பெருந்தொகைக்கும் உரியவர்கள் ஆகின்றார்கள்.

இந்தியாவில் பதினாறு வருஷ காலம் உத்தியோகம் வகித்த ஐ. ஸி. எஸ். காரர்களுக்கு 8000 பவுன், அதாவது ஒரு நோபல் பரிசுக்கு உரிய தொகை ஈடாகக் கிடைத்து விடுகிறது.

அதற்குக் குறைந்த காலமோ, அல்லது அதிக காலமோ உத்தியோகம் வகித்தவர்கள் மேற்படி தொகைக்குக் குறைவாக பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்டுள்ள ஓர் அட்டவணையில் கண்டுள்ள விதம் பல்வேறு ஈடுத்தொகை பெறுவார்கள்.

மேற்படி ஈடு தொகை, யார் கொடுப்பதென்பது பின்னர் நிர்ணயிக்கப்பட வேண்டிய விஷயம் என்று இந்தியா மந்திரியின் அறிக்கை கூறுகிறது. இதிலிருந்தே அநீதியாக அந்த ஈடுத் தொகை கொடுக்கும் விஷயமாகத் தகராறு ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

இந்தியர்களின் க்ஷேமத்துக்கு எப்போதும் இடையூறாக இருந்து வந்துள்ள ஐ. ஸி. எஸ். வர்க்க உத்தியோகஸ்தர்கள் பழைய உரிமைகளுடன் தொடர்ந்து பதவிகளில் இருக்க இந்திய சர்க்கார் இசைந்ததே பெரிய காரியமாகும். அவ்வாறு இசைந்ததன் மூலம் இந்திய தேசிய சர்க்கார் பகைவர்களும் புகழுமாறு பெருந்தன்மையாக நடந்து கொண்டிருப்பதுடன், தாங்கள் வெறுப்பது பிரிட்டிஷ் ஆட்சி முறையையேயன்றி பிரிட்டிஷாரை அல்லவென்பதையும் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள்.

அப்படியிருந்தும், அவ்விதம் தொடர்ந்து உத்தியோகம் வகிக்க விரும்பாதவர்கள் பென்ஷன் வாங்கிக்கொண்டு பேசாமல் ஊருக்குப் போய்விடுவதுதான் நியாயம். அவ்வாறு பென்ஷன் கொடுத்து அனுப்ப இந்திய சர்க்காரும் தயாராக இருக்கிறார்கள்.

அத்தகையோருக்கு பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுடைய நிதியிலிருந்து எண்ணாயிரம் பவுன் அல்ல எண்பதினாயிரம் பவுன் வேண்டுமானாலும் வெகுமதி கொடுக்கட்டும்.

ஆனால் பளுவை இந்தியர்களின் தலையில் சுமத்த சூழ்ச்சி செய்வது பெரும் அக்கிரமம் ஆகும்.

இந்தியர்களான ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அதிக சிக்கல்கள் எதுவும் எழ இடமில்லை. இவர்களிலும் குறிப்பிட்ட சிலர் பிரிட்டிஷ் அறிக்கையின்படி ஈடு தொகைக்கு உரியவர்கள். எனினும் அவர்கள் அன்னிய ஆட்சியின் கீழ் உத்தியோகம் வகிப்பதைக் காட்டிலும், தேசீய சர்க்காரின்கீழ் உத்தியோகம் வகிப்பது எவ்வளவோ பெருமை என்பதை உணர்ந்து தங்களுடைய அறிவையும் உழைப்பையும் தேச நலனுக்காக அர்ப்பணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

# இறுதிப் படலம்

அகஸ்திய முனிவர் சமுத்திரத்தையே ஆசமனீயம் செய்துவிட்டாராம்; வாதாபி என்ற அசுரனைக் கபளீகரம் செய்து ஜீரணித்தும் விட்டாராம்.

மந்திரவாதியின் ஒரு சிறு புட்டியில் பிரம்மாண்டமான பூதம் அடங்கிக் கிடந்ததாகக் கதை உண்டு.

இவை யெல்லாம் உண்மையாயினும் பொய்யாயினும், இன்றுள்ள தந்திரவாதிகள் மேற்படியார்களைக் காட்டிலும் சூரர்களாகவும் அதிக அகட விகட சாமர்த்தியசாலிகளாகவும் இருப்பதை நேரில் பார்க்கிறோம்.

ஒரு சிறு வெடிகுண்டு சில விநாடி நேரத்துக்குள் லட்சக் கணக்கான மக்களையும் மனைகளையும் மண்ணோடு மண்ணாக்கிவிட வில்லையா?

ஆறு கோடி ஜனங்கள் நூறு கோடி ஜனங்களை எத்தனையோ நூற்றாண்டுகளாக அல்லோல கல்லோலப் படுத்தி வரவில்லையா?

மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியது!

சமீபத்தில் ஒரு சிறு கைப்பெட்டி வானத்திலிருந்து கீழே இறங்கியது.

அது ஆறாயிரம் மைல்கள் தூரம் யாத்திரை செய்து வந்ததென்ற இரகசியத்தையும் வாசக நேயர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறோம்.

மந்திரவாதியின் புட்டியிலிருந்த பூதத்தைக் காட்டிலும் பிரம்மாண்டமான வஸ்து, தந்திரவாதி கொண்டுவந்த மேற்படி சிறு கைப்பெட்டியில் இருந்தது.

அதுதான் தலைவிதி! நாற்பது கோடி மக்களின் தலைவிதி!!

சென்ற திங்கட்கிழமையன்று ராகுகாலம் முடிந்த பின் சிறிதும் தாமதியாமல் வைஸ்ராய் லார்டு மவுண்ட் பாட்டன் மேற்படி தலைவிதியை, அதாவது புதிய இந்திய அரசியல் திட்டத்தைத் தலைவர்களின் முன்னிலையில் எடுத்து வைத்தார்.

அதன்படி, இந்தியாவைப் பிளப்பது என்பது நிச்சய மாகி விட்டது.

ஒரு சமயம் அமெரிக்காவையும் இவ்வாறே பிரிக்க சூழ்ச்சி நடந்தது. ஆனால், அமெரிக்க தேச பக்தர்கள் ஒரே உறுதியுடன் நின்று, அந்த சூழ்ச்சியைத் தகர்த் தெறிந்து விட்டனர்.

ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எவ்வளவு வேற் றுமை இருப்பதாகக் கூறப்படுகிறதோ, அதைக்காட்டிலும் அதிக வேற்றுமையுள்ள சமூகங்கள் ருஷியாவில் இருக் கின்றன. அவ்விதமிருந்தும் ருஷியாவில் பிரிவினை ஏற் பட்டு விடவில்லை.

அப்படி யிருக்க, குமரி முதல் இமயம் வரையிலும் ஸிந்து முதல் பிரம்மபுத்ரா வரையிலும் பல பல நூற் றுண்டுகளாய் ஒரே தேசமாக இருந்துவந்த இந்தியா பிரிக் கப்படப் போகின்றது.

* * *

பிரிட்டிஷ் மந்திரிகள் இந்தியாவுக்கு வந்து பல வாரங் கள் வரை நிலைமையை நன்கு ஆராய்ந்து, பல தலைவர்க ளுடனும் கலந்து ஆலோசித்து, இந்தியா ஐக்கிய இந்தியா வாகவே இருக்கவேண்டும் என்று கூறிய பிரசித்தி பெற்ற 1946 மே 16உ திட்டம் புதையுண்டு விட்டது.

எனவே, ஒரே நாட்டில் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத இரண்டு சர்க்கார்கள் சிருஷ்டியாகும் விசித்திரத் தைக் கூடிய சீக்கிரம் காணலாம்.

புதிய திட்டத்தை யொட்டி வைஸ்ராய் மவுண்ட் பாட்டன்; பண்டித ஜவாஹர்லால் நேரு, ஜனாப் ஜின்னா,

சர்தார் பலதேவ் சிங் முதலியோர் வானொலி மூலம் பேசியிருக்கிறார்கள்.

"இந்தியாவைப் பிரிக்க வேண்டும் என்று முஸ்லிம் லீக் கூறுவதை ஒப்புக்கொள்வதாயின், சில மாகாணங்களின் பிரிவினையையும் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். எனவே, இன்னும் சில மாதங்களுக்குள் இந்தியாவில் ஏற்படப்போகும் ஒன்று அல்லது இரண்டு டொமினியன் சர்க்கார்களிடம் அதிகாரத்தை மாற்றுவதென பிரிட்டிஷ் சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள்" என்று வைஸ்ராய் அறிவித்திருக்கிறார்.

பண்டித ஜவாஹர்லால் நேரு சொல்லுகிறார் :

"இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜனங்களைக் கேட்டுக்கொள்ளுவதில் எனக்குச் சந்தோஷம் எதுவுமில்லை. எனினும் இதை ஏற்றுக்கொள்ளுவதுதான் சரியான வழி.

"சுதந்திர ஐக்கிய இந்தியாவுக்காகவே நாம் பல தலைமுறைகளாகப் போராடினோம். அப்படியிருக்க, இந்தியாவின் சில பாகங்கள் நம்மைவிட்டுப் பிரிந்து செல்லுவது நமக்கு வேதனையையே கொடுக்கிறது.

"எனினும், ஐக்கிய இந்தியாவுடன் சேர்ந்திருக்கும்படி யாரையும் வற்புறுத்துவது நமது நோக்கமல்ல. அவ்வாறு வற்புறுத்தாமல் இருப்பதன்மூலம் ஒருவேளை எதிர்காலத்தில் நமது இலட்சியமான, அதிக உறுதிகொண்ட அஸ்திவாரத்துடன் கூடிய ஐக்கிய இந்தியாவைச் சீக்கிரம் அடைந்தாலும் அடையலாம்."

மேற்கூறிய விதம் ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டிருக்கிறார்.

* * *

ஆனால் ஜனாப் ஜின்னாவோவென்றால், மேற்படி திட்டத்தைத் துருவி ஆராய்ச்சி செய்யப் போகிறாராம். அத்திட்டம் அவ்வளவு திருப்திகரமாக இல்லையாம். அவ்விஷய

மாக அடுத்த வாரம் முஸ்லிம் லீக் ஒரு முடிவுக்கு வரும் என்று அவர் கூறியிருக்கிறார்.

மற்றும் ஜனுப் ஜின்னு தமது பிரசங்கத்தில், எல்லைப் புற மாகாணத்தில் நடந்துவரும் அமைதியான சட்ட மறுப்பு இயக்கத்தை வாபஸ் செய்துகொள்ளும்படியும் தமது சீடர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

அமைதியான சட்ட மறுப்பு இயக்கமாம்!

அதோ கூரைமீதேறிக் கொள்ளிக் கட்டையைச் சுழற்றுகின்றுனே, அவன்தான் நமது பையன்களுள் மிகவும் சாதுவானவன் என்றுராம் ஒரு தகப்பனுர்!

ஜெயிலைக் கொளுத்துவதும், நிரபராதிகளான பெண்களையும், சிசுக்களையும்கூடப் படுகொலை செய்வதும், ஏழை ஜனங்களின் வீடு வாசல்களைத் துவம்சம் செய்வதும், பிரயாணிகள் செல்லும் ரயில் வண்டிகளைக் கவிழ்ப்பதும் அமைதியான சட்ட மறுப்பு இயக்கமாயின், பலாத்கார சட்ட மறுப்பு இயக்கம் என்பது எப்படி யிருக்குமோ?

ஆனுல், இனி பலாத்கார நடவடிக்கைகளைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்று வைஸ்ராயும், ஜவாஹர் லால்ஜியும், இராணுவ மந்திரியான சர்தார் பலதேவ் சிங்கும் ஏகோபித்து கண்டிப்பாகக் கூறி யிருக்கின்றனர்.

"நம் தேசத்தின் பல பாகங்களிலும் வெட்கக்கேடான, மிருகத்தனமான, வெறுக்கத்தக்க பலாத்காரச் செயல்கள் நடைபெற்று வருகின்றன. அவை நின்று தீரவேண்டும். அவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்க நாங்கள் உறுதி கொண்டுள்ளோம். இன்றோ அல்லது எதிர்காலத்திலோ, பலாத்கார முறைகளால் அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டுவிட முடியாது என்பதை நாம் தெளிவாக்கிவிட வேண்டும்" என்று ஜவாஹர்லால்ஜி முழக்கம் செய்திருக்கிறார்.

எனவே, நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இன்னும்கூட நிகழ்ந்து வரும் படுகொலைகளும் பாதகச் செயல்

களும் இனியாவது தொடர்ந்து நடைபெற வழி இராமற் போகும் என்று நம்புகிறோம்.

பாஞ்சாலத்தில் லீகர்கள் பலாத்காரத்தில் இறங்கிய தால்தான் பாஞ்சாலப் பிரிவினைப் பிரச்னை விசுவரூபம் எடுத்தது.

பின்னர் வங்காளப் பிரிவினையையும் லீகர்களால் தடுக்க முடியவில்லை.

எனவே லீகர்கள் தங்களுடைய பலாத்காரம் காரண மாகப் பிரமாத லாபம் எதுவும் அடைந்ததாகத் தெரிய வில்லை.

இனியாவது அவர்கள் பலாத்கார முறைகளை விட்டொழித்து, ஹிந்து முஸ்லிம்களின் க்ஷேமத்துக்காக நாட்டில் அமைதியை நிலைநாட்ட முற்படுவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

* * *

பிரிட்டிஷார் பிரித்தாளும் தந்திரத்தையே தங்களுடைய முக்கிய ஆயுதமாகக்கொண்டு இந்தியாவுக்குள் பிரவேசித்தார்கள்.

அதே ஆயுதத்தாலேதான் இந்தியாவை ஜயித்தார்கள்.

எனவே, அவர்கள் இந்தியாவை விட்டுச் செல்லும் போதும் இந்தியாவை நிரந்தரமாகப் பிரித்துவிட்டுச் செல்வது முற்றிலும் பொருத்தமேயாகும்!

பிரிட்டிஷார் காலடி வைத்த அயர்லாந்து, எகிப்து, பாலஸ்தீனம் முதலிய நாடுகளின் கதியைக் கவனிக்கும் போது, இந்தியாவும் அதே கதிக்கு ஆளாவதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்தியாவை ஐக்கிய இந்தியாவாக விட்டுவிட்டு அவர்கள் சென்றால்தான் அது மகத்தான ஆச்சரியமாகும்.

ஐக்கிய இந்தியாதான் சிறந்தது என்று இன்னும்கூட பிரிட்டிஷார் சொல்லிக்கொண்டுதான் வருகிறார்கள்.

ஆனால், இந்தியர்கள் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லையென்று கூறி இந்தியர்கள் தலையில் பாரத்தைப் போட்டுவிட்டு, பிரிவினையை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

மற்றும் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி இருந்ததென்பதற்குப் பிரிவினையைக் காட்டிலும் தகுதியான ஞாபகச் சின்னம் வேறெதுவும் இருக்க முடியாது!

எது எப்படியாயினும், இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் இறுதிப்படலம் சில மாதங்களில் முடியப் போவது மாத்திரம் நிச்சயம்.

# அந்தகாரம் ஒழிந்தது

ராமாயணத்தில் ஒரு சம்பவம் :

இந்திரஜித்து ஏவிய நாக பாசத்தினால் ஆஞ்சநேய மூர்த்தி கட்டுண்டார்.

போர்முனைக்கு வந்திருந்த ராக்ஷஸ கணங்களுக்கெல்லாம் அதைக் கண்டதும் ஒரே குதூகலமாய்விட்டது. அவர்கள் எல்லோரும் கொக்கரித்துக் கொண்டு நாக பாசத்துக்கு உதவி புரிவதற்காக, அதாவது நாகபாசம் நழுவி விடாமல் பாதுகாப்பதற்காக ஓடோடியும் வந்தார்கள் !

சணல் கயிறு, சப்பாணிக்கயிறு, கத்தாழை நார், கந்தல் துணி முதலியவைகளை யெல்லாம் போட்டு நாக பாசத்தின் மேல் கட்டினார்கள்.

நாகபாசத்தின் வேலையை மேற்படி கயிறுகள் எல்லாம் ஏற்றுக்கொண்டுவிட்டதால், தன் அலுவல் முடிந்துவிட்டது என்று நாக பாசம் நழுவி விழுந்துவிட்டது !

பிறகு, வெறும் கயிறுகளையெல்லாம் சுக்கு நூறாக அறுப்பதுதானா ஆஞ்சநேயருக்கு ஒரு பிரமாதமான காரியம் ?

*　　　　*　　　　*

அன்னையின் அடிமை விலங்கு நொறுங்கி பல மாதங்களாகிவிட்டன.

எனினும், சணல் கயிறு, சப்பாணிக் கயிறு போன்ற பல தளைகள் பாரத நாட்டைச் சுற்றிக் கொண்டு தொல்லை விளைவித்துக் கொண்டிருந்தன.

அந்தத் தளைகளும் இப்போது அறுபட்டு விட்டன.

எனவே, இந்திய அரசியல் நிர்ணய சபையைப் பரி பூரண அதிகாரமுள்ள ஒரு மகாசபை அல்லவென்று இனி யாரும் ஆட்சேபிக்க முடியாது.

அது பரிபூரண பிரதி நிதித்துவம் வாய்ந்த ஒரு மகா சபை என்பதையும் இனி யாரும் மறுக்க முடியாது.

அச் சபையைக் கலைத்து விட வேண்டும் என்று இனி யாரும் ஆர்ப்பாட்டம் செய்வதும் முடியாத காரியம்.

ஏனெனில் அதைக் கலைத்துவிடவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்த முஸ்லிம் லீகர்கள் கூட இப்போது அச்சபைக்கு வந்து விட்டார்களல்லவா?

எனவே, எவ்வித இடையூறும் முட்டுக்கட்டையு மின்றி இந்தியாவின் அரசியலை நிர்மாணிக்கப் போவதும் சுதந்திர இந்தியாவின் பார்லிமெண்டாக விளங்கப்போவ தும் இந்திய அரசியல் நிர்ணய மகாசபைதான் என்பது இப்போது நிச்சயமாகிவிட்டது.

சர்ச்சில், ஜின்னா கோஷ்டியினர் கூட இதை ஒப்புக் கொண்டு விட்டார்கள்!

இந்திய அரசியல் நிர்ணய சபைக்கு எவ்வளவு அதி காரம் இருக்க வேண்டும் என்று நமது மாபெரும் தலைவர் கள் கோரினார்களோ, அவ்வளவு அதிகாரமும் இப்போது அதற்குக் கிடைத்துவிட்டது.

இனி எந்தச் சக்தியும் அதை அசைக்க முடியாது

* * *

நாகரிக தேசங்கள் என்று கூறப்படும் மேனாடுகளில் எல்லாம் பண்டைய காலத்தில் குற்றவாளிகளைத் தண்டிக்க விதவிதமான கொடிய அநாகரிகமான முறைகளை அனுஷ் டித்து வந்தார்கள்.

புராதன ரோமியர் சட்டப்படி கொடிய குற்றம் செய்தவருக்கு விசித்திரமான ஒரு தண்டனை விதிக்கப் பட்டு வந்தது.

அதாவது, அந்தக் குற்றவாளியை ஒரு பையில் போட்டு அவருக்குத் 'துணை'யாகப் பைக்குள் ஒரு குரங்கையும் ஒரு பாம்பையும் ஒரு சேவலையும் விட்டுவிடுவது! பின்னர் அந்தப் பையை வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் ஆற்றில் எறிந்து விடுவது! இதுதான் தண்டனை!!

அவனுக்கு இதைக் காட்டிலும் நரக வேதனை வேறென்ன வேண்டும்?

கற்பனைக்கும் எட்டமுடியாத மேற்படி வேதனையை அனுபவிக்கும் அவனைப் பையிலிருந்து யாராவது விடுவித்தால், அப்போது அவனுடைய குதூகலத்தை வர்ணிக்க முடியுமா!

அதுபோலவே, பிரிட்டிஷார் தயாரித்த 1946 மே 16ந் தேதி திட்டம் இந்தியாவை, சுதந்திரம் கோரிய குற்றத்துக்காக, அத்தகைய நரக வேதனைக்கு உட்படுத்தி விட்டது என்றும், ஆனால் சென்ற ஜூன் 3ந் தேதி திட்டமானது, அத்தகைய வேதனையிலிருந்து இந்தியாவை மீட்டிருக்கிறது என்றும் ஸ்ரீ. கே. எம். முன்ஷி, சென்ற திங்கட்கிழமை ஆரம்பமான அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் வர்ணித்தார்.

முஸ்லிம் லீக்கர்களும் பிரசன்னமாகியிருந்த அக் கூட்டத்தில் ஸ்ரீ. முன்ஷி அவ்வாறு கூறியது உசிதமா, அல்லவா என்ற விஷயத்தில் அபிப்பிராய பேதம் ஏற்படலாம்.

என்றாலும், மேற்படி வர்ணனை முற்றிலும் பொருத்தமானது என்பதில் மாத்திரம் அபிப்பிராய பேதம் எதுவும் ஏற்படுவதற்கில்லை.

* * *

அரசியல் நிர்ணய மகாசபையின் அலுவல்களுக்கு இனி எவ்வித தடங்கலும் உண்டாக இடமில்லை.

இது வரை வெளியாகியுள்ள மேற்படி சபைக்கமிட்டிகளின் அறிக்கைகளிலிருந்து சிறு பான்மையோரின் உரிமை

களுக்கு எவ்வித பாதகமும் ஏற்படாது என்பது தெரி கிறது.

மற்றும் சர்வஜன வோட்டுரிமையை ஆதாரமாகக் கொண்டே சர்க்கார் நிர்வாகம் நடைபெறும் என்றும் நிர்ணயமாகி யிருக்கிறது.

அதாவது, இந்தியாவில் ஏற்படப்போகும் சுதந்திர சர்க்காரில் ஜாதி மத வகுப்பு வேற்றுமையின்றி எல்லோ ருக்கும் பங்கு இருக்கும்.

வோட்டுரிமை பெறும் விஷயத்தில் பணக்காரன் — ஏழை, படித்தவன் — பாமரன், முதலாளி — தொழிலாளி என்ற வேற்றுமைக்கும் இடமிராது.

முன்பு இருந்து வந்தது போன்று ஆறுயிரம் மைல் களுக்கு அப்பாலிருந்து முகம் தெரியாத ஒருவர் கவர்னர் என்று திடீரென்று வந்து குதித்து விட முடியாது.

ஒவ்வொரு மாகாணத்திலும் கோடிக்கணக்கான மக்க ளின் அன்புக்குப் பாத்திரரான தலைவர் திலகம்தான் கவர்ன ராக வரமுடியும்.

வயது வந்த சகலருக்கும் வோட்டுரிமை அளிப்பது என்ற நியதியே ஜனநாயகத்தின் உயிர் நாடி எனலாம். அந்த நியதி சுதந்திர இந்திய அரசியலில் இடம் பெறப் போவது மிகமிக முக்கிய விஷயமாகும்.

எனவே, சுதந்திர இந்தியாவின் எதிர்கால அரசியலில் கலப்பற்ற ஜனநாயக மணம் கமழும் என்பதில் அணுவள வும் சந்தேக மில்லை

சென்ற ஜுன் மாதம் 3 - ந் தேதி திட்டம் வெளியான திலிருந்து இங்கிலாந்திலும் இந்தியாவிலும் அதி துரித மாகக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

சர்ச்சில் கோஷ்டியாரின் முட்டுக் கட்டைகளும், இந்திய அரசியல் நிர்ணய சபையைப் பிணைத்திருந்த கட்டுப் பாடுகளும் மறைந்து விட்டதே மேற்படி நிலைமைக்குக் காரணமாகும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்திய சுதந்திர மசோதா நிறைவேறிச் சட்டமாகி விட்டது.

இந்திய அரசியல் நிர்ணய சபையையே அங்கீகரிக்க முடியாது என்று கூறி வந்த சர்ச்சில் கோஷ்டியினர்கூட பார்லிமெண்டில் சுமுகமாகப் பேசியிருக்கிறார்கள்; இந்திய சுதந்திர மசோதாவை ஆதரித்தும் இருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல; இந்தியத் தலைவர்களுக்கு வாழ்த்துக் கூடக் கூறியிருக்கிறார்கள்!

இந்தியாவின் சுதந்திரத்துக்குக் கன்சர்வேடிவ் கட்சியினர் வாழ்த்துக் கூறுவார்கள் என்று இரண்டு மாதங்களுக்கு முன் யாராவது கனவிலும் நினைத்திருப்பார்களா?

* * *

பார்லிமெண்டு விவாதத்தில் இரண்டொரு முக்கிய அம்சங்களைக் குறிப்பிட வேண்டியது அவசியமாகும்.

"ஜனங்களுக்குச் சுதந்திரம் கூடாது. எங்களுக்குத் தான் சுதந்திரம் வேண்டும்!" என்று கூத்தடித்து வரும் இந்திய மண்டலாதிபதிகளுக்குப் பிரதம மந்திரி ஆட்லி புத்திமதி கூறியிருக்கிறார். "இந்திய சமஸ்தானங்கள் இந்தியா அல்லது பாக்கிஸ்தான் ஏதாவது ஒன்றில் சேர்ந்து தான் ஆகவேண்டும். வேறு விதமாக அவர்கள் முடிவு செய்யக் கூடாது. வேறு விதமாக அவர்கள் முடிவு செய்ய நினைத்தால் 'அவசரப்படாதீர்கள். பொறுத்துச் செய்யுங்கள்' என்றுதான் நான் சொல்லுவேன்!" என்று ஆட்லி இந்திய மன்னர்களை எச்சரித்திருக்கிறார்.

"இந்தியாவின் ஒற்றுமை சிதறியதற்குக் காரணம் தனித் தொகுதி சாபக்கேடுதான். எனவே, இனிமேலாவது இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் தனித் தொகுதி ஒழிந்து கூட்டுத் தொகுதி ஏற்படும் என்று நம்புகிறேன்" என கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த ஸர். வால்டர் ஸ்மைல்ஸ் ஒப்புக்கொண்டிருப்பது பாராட்டத்தக்கதாகும்.

"இந்தியா விஷயத்தில் நாம் பல தவறுகள் செய்திருக்கிறோம். படுமோசமான தவறுகள் செய்திருக்கிறோம்" என்றும் சில பிரமுகர்கள் பச்சாத்தாபப்பட்டு, அதற்கெல்லாம் இந்திய சுதந்திர மசோதா ஒரு பிராயச்சித்தமாகும் என்ற முறையில் பேசியிருக்கிறார்கள்.

சகல கட்சியினரும் ஏகோபித்துக் கரகோஷம் செய்ய ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் உணர்ச்சிப் பெருக்குடன் பேசியிருப்பதை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடாமல் இருப்பதற்கில்லை.

"ஆகஸ்ட் மாதம் 15-ந் தேதி இந்தியாவின் சுதந்திர யாத்திரை ஆரம்பமாகின்றது. அது இந்தியாவுக்குச் சரித்திரப் பிரசித்தமான ஒரு தினமாக இருக்கும்.

"இந்தியர்கள் வெகு துரிதமாக முன்னேறிச் செல்லுவார்களாக !

"அவர்களுக்குக் கஷ்டம் ஏதாவது நேர்ந்தால் கை கொடுத்து உதவிபுரிய நாங்கள் எப்போதும் தயாராக இருப்போம்.

"இந்தியத் தலைவர்கள் பலவருஷங்களாகப் போராடியிருக்கிறார்கள். பல கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள்.

"உலக அமைதிக்கும் முன்னேற்றத்துக்கும் நம்முடன் உழைக்கும் சகபாடிகள் என்ற ஹோதாவில் அந்தத்தலைவர்களை இப்போது நாங்கள் வணங்குகிறோம்.

"இந்தியாவில் அந்தகாரம் அகன்று இப்போது சுதந்திரமும் சுபிட்சமும் உதயமாகி யிருக்கின்றன. அந்த சுதந்திர, சுபிட்ச சூரியன் அத்தேசத்தில் எந்தக்காலத்திலும் அஸ்தமிக்காமல் பிரகாசித்து வருமாக !"

முன்னர் இந்தியா முழுதும் யாத்திரை செய்த பிரிட்டிஷ் மந்திரி கோஷ்டியில் ஒருவரும், தற்போது பிரிட்டிஷ் வர்த்தக மந்திரியுமான ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் மேற்கூறிய விதம் பேசியிருப்பதன் மூலம் பிரிட்டனுக்கு ஓரளவு நற்பெயரைத் தேடிக்கொண்டிருக்கிறார்.

இந்தியாவில் அந்தகாரம் அறவே அகன்று சுதந்திர சூரியன் பிரகாசிக்கின்ருன்.

தியாகம், கஷ்டம் என்பதையே அறியாத முஸ்லிம் லீகர்கள் பாக்கிஸ்தான் பெற்றிருக்கிருர்கள்.

பிரிட்டிஷ் ஏஜண்டுகளிடம் சலாம் போட்டுக்கொண்டிருந்த சமஸ்தானங்கள் 'சுதந்திர 'கோஷம் செய்கின்றன.

"நாங்கள் ஜனநாயக ஆஷாடபூதிகளல்ல, உண்மையான ஜனநாயக வாதிகள்தான் என்பதை இனியாவது உலகம் அறிந்து கொள்ளட்டும்!" என்று பிரிட்டிஷார் பெருமையடித்துக் கொள்ளுகிருர்கள்.

இதற்கெல்லாம் காரண புருஷர்கள் யார்?

மகாத்மா காந்திதான்; பண்டித நேரு, சர்தார் பட்டேல், ராஜாஜி, ராஜேந்திர பிரசாத், மௌலாஞ ஆஸாத், முதலிய மாபெரும் தலைவர்களும் மற்றும் தேசத்துக்காகத் தியாக அக்னியில் மூழ்கிய லக்ஷோப லக்ஷம் தொண்டர்களும்தான்.

எனவே, அத்தகைய மகிமை வாய்ந்த தலைவர்களுக்கு ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் பிரிட்டிஷ் பார்லிமெண்டு மகாசபையில் வணக்கம் செலுத்தியிருப்பது எவருக்கும் மயிர் சிலிர்க்கும் ஒரு சம்பவமாகும்.

நமது தலைவர்கள் இணையற்ற தியாகங்கள் செய்திராவிடில் இன்றைய நிகழ்ச்சிகளுக்கே இடமிராமற் போயிருக்கும்.

பகீரதன் எவ்வளவோ கஷ்டப்பட்டு, எவ்வளவு காலமோ தவம் கிடந்து கங்கையைக் கொண்டுவந்தான், நமது மகிமை வாய்ந்த தலைவர்களோ வென்ருல், எத்தனையோ தியாகங்கள் செய்து, எத்தனையோ வருஷங்கள் தவம் புரிந்து சுதந்திர சூரியனையே கொண்டுவந்து விட்டார்கள்.

இனி அந்தகாரம் ஒழிந்தது.

# வாழ்க சுதந்திரம்! வாழ்க நிரந்தரம்!

பேரிகை கொட்டுங்கள்! முரசம் முழங்குங்கள்! சங்கம் ஊதுங்கள்! கொடி உயர்த்துங்கள்! விழா நடத்துங்கள்! "வந்தே மாதரம்" என்று வணங்குங்கள்! "வாழ்க பாரதம்!" என்று வாழ்த்துங்கள். "ஜே ஹிந்த்!" என்று கோஷமிடுங்கள்!

கனவு அல்ல; பிரமை அல்ல; கற்பனையும் அல்ல;— நம்முடைய வாழ்நாளில், நம்முடைய கண் முன்னே, இதோ பாரத புண்ணிய பூமி பூரண சுதந்திரம் அடைந்தது! இரு நூறு வருஷத்து அன்னிய ஆட்சி முடிவடைந்தது! பரத கண்டத்துப் பெரியோர்கள் செய்த தவம் சித்தி அடைந்தது! ஆயிரமாயிரம் தேச பக்தர்கள் கண்ட கனவு நனவாயிற்று! லட்சோப லட்சம் தேசத்தொண்டர்கள் செய்த தியாகம் பலன் தந்தது. பகவத் கீதையில் பகவான் அருளிய திருவாக்குப் பலித்தது! சத்தியம் ஜயித்தது!

அதோ, இந்தியாவின் சுதந்திரக் கொடி நாடெங்கும் பறப்பதைப்பாருங்கள்! நேற்று வரையில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடி பறந்து கொண்டிருந்த கவர்ன்மெண்ட் மாளிகைகளிலும், இராணுவக் கோட்டைகளிலும் சர்க்கார் காரியாலயங்களிலும் இன்று தாயின் மணிக்கொடி வானளாவப் பறப்பதைப் பாருங்கள்! அதில் நீல வர்ணத்தில் பொறித்திருக்கும் அசோக சக்கரத்தையும் பாருங்கள்! இந்தியாவின் ஒருமையையும் பழம் பெருமையையும் ஒருங்கே காட்டி, இமயமலை முதல் குமரிமுனை வரையில் இந்தியா ஒரே சாம்ராஜ்யமாயிருந்த காலத்தை நினைவூட்டும் அந்த தர்ம சக்கரத்தை நன்ருய்ப் பாருங்கள்!

புதுடில்லியில் நடக்கும் அதிசய நிகழ்ச்சியையும் கவனியுங்கள்! இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை பிரிட்டிஷ் சர்க்காரின் பிரதிநிதியிடமிருந்து இந்தியப் பொதுமக்கள் தேர்ந்தெடுத்த தலைவர்கள் ஏற்றுக்கொள்வதைப் பாருங்கள்!

பிரிட்டிஷ் சர்க்கார் நியமித்த மாகாண கவர்னர்கள், தேசீய சர்க்கார் நியமித்த புதிய சுதந்திர கவர்னர்களிடம் மாகாண ஆட்சியை ஒப்புவிக்கும் அற்புதத்தைப் பாருங்கள்.

இந்தியாவின் கவர்னர் ஜெனரலும், கவர்னர்களும், மந்திரிமார்களும் இத்தனை காலமும் பிரிட்டிஷ் மன்னருக்கு விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்து வந்ததற்குப் பதிலாக, இன்றைக்கு இந்திய மக்களுக்கு விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ளும் விந்தையைப் பாருங்கள்!

* * *

இப்படியெல்லாம் நம்முடைய வாழ்நாளில் நடக்கும் என்றும், நம் கண்ணுலே பார்ப்போமென்றும் நம்மில் யாராவது நம்பியிருந்தோமா? அதிலும் இவ்வளவு சீக்கிரத்தில், இந்த 1947-ம் வருஷம் ஆகஸ்டு மீ 15உ இத்தகைய அற்புதம் நடக்கும் என்று எதிர்பார்த்தோமா?

ஆம்; யாரும் எதிர்பாராத அதிசயந்தான் நடைபெற்றிருக்கிறது. நடக்க முடியாது என்று பலரும் நினைத்த காரியந்தான் நிறைவேறி யிருக்கிறது.

இந்த அற்புதம் நடப்பதற்கு மூலகாரணமாயிருந்து நடத்தி வைத்த மகா மந்திரவாதி யார்? சொல்லவும் வேண்டுமா? கையில் ஆயுதம் எடுக்காமல் பாரத யுத்தத்தை நடத்தி வைத்த மாயக் கண்ணனைப்போல் இன்று அஹிம்சா தர்மத்தையே ஆயுதமாகக் கொண்டு வீர சுதந்திரப்போரை நடத்தி மகத்தான வெற்றியும் அளித்தவர் மகாத்மா காந்தியேதான்! அத்தகைய மாய மந்திரவாதியான மகாத்மா

வுக்கு வணக்கம் செலுத்துகிறோம். அவருடைய ஆத்ம சக்திக்குப் போற்றி கூறுகிறோம்.

* * *

பாரத நாடு பூரண சுதந்திரம் பெற்ற இந்தப்புனிதத் திருநாளில் தாயின் சுதந்திரத்துக்காக வாழ்நாளெல்லாம் பாடுபட்டு வானுலகம் எய்திய பெரியோர்களை நினைப்போமாக!

தாதாபாய் நௌரோஜி என்ன, லோகமானிய திலகர் என்ன, லாலா லஜபதிராய் என்ன, கோபாலகிருஷ்ண கோகலே என்ன, சுரேந்திரநாத் பானர்ஜி என்ன, விபின் சந்திர பாலர் என்ன, வ. உ. சிதம்பரம் பிள்ளை என்ன,— இத்தகைய பெரியோர்களுடைய புனித ஞாபகத்தைப் போற்றுவோம்.

மோதிலால் நேருவையும், தேச பந்து தாஸையும், அஜ்மல்கானையும், டாக்டர் அன்ஸாரியையும், அன்னை கஸ்தூரி பாய் தெய்வத்தையும், நமது சத்தியமூர்த்தியையும், நேதாஜி சுபாஷ் போஸையும் வணங்கி வாழ்த்துவோம்.

பெரியோர்களே! அனைவரும் வாருங்கள்! ஆவி வடிவிலே ஆகாயத்திலே வந்து நின்று பாருங்கள்! உங்களுடைய வாழ்நாள் மனோரதம் நிறைவேறிப் பாரதநாடு பூரண சுதந்திரம் அடைந்திருக்கும் அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தப்படுங்கள்! ஆசி கூறுங்கள்!

பிரசித்தி பெற்ற தலைவர்களை நினைந்து போற்றிய நாம் பெயரும் புகழும் இல்லாமல் ஜன்ம தேசத்துக்குத் தொண்டு செய்து உயிரையும் அர்ப்பணம் செய்த தேசபக்த வீர திலகங்களையும் நினைப்போம். அவர்களுடைய தொண்டையும் தியாகத்தையும் வாழ்த்திப் போற்றுவோம்!

சுயநலமென்னும் நினைவே இல்லாமல், பட்டம் பதவி மோகமில்லாது தாயின் விலங்கை முறித்தெறிய அரும்பாடுபட்ட தேசபக்தர் திருக்கூட்டத்துக்கு வணக்கம் செலுத்துவோம்.

தொண்டர்களே! தேசபக்தர்களே! தியாகமூர்த்திகளே! அனைவரும் வாருங்கள்! ஆகாச வெளியில் நின்று உங்கள் கனவு நிறைவேறும் காட்சியைக் கண்டு மகிழுங்கள்! பாரதத்தாயின் ஆசியைப் பெற்றுக்கொள்ளுங்கள்!

* * *

காலஞ்சென்ற தேச பக்தர்களையும் தலைவர்களையும், தொண்டர்களையும், வாழ்த்தி வணங்கிய பிறகு உயிரோடிருக்கும் தேசத்தலைவர்களையும் நினைவோம். அவர்களை வாழ்த்துவோம். வணங்குவோம். அவர்களுக்கு நமது இருமடங்கு நன்றியைச் செலுத்துவோம்.

தாதாபாய் நௌரோஜி முதல் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் வரையில் தியாகமூர்த்திகளான தேசத்தலைவர்கள் அநேகர் தாய்நாட்டுக்கு அரும் பெரும் தொண்டு செய்திருக்கிறார்கள். உண்மை; சந்தேகமில்லை.

ஆனால் அவர்கள் எல்லாரையும் காட்டிலும் இன்று உயிரோடிருக்கும் தேசத்தலைவர்கள் நமது நன்றிக்கு அதிக பாத்திரமாகிறார்கள். அவர்கள் உயிரோடிருப்பதே ஒரு பெரும் தொண்டு; பாரதத் தாய் செய்த பாக்கியம்; பாரத மக்களின் தவப்பயன்.

உலக சரித்திரத்தில் என்றும் இல்லாத விதமாக அன்னிய ஆட்சியிலிருந்து நம்மை இத்தனை எளிதில் விடுதலை செய்து பாரத நாட்டில் சுதந்திரத்தை ஸ்தாபித்த அருமைத் தலைவர்களைப் பிடிவாதமாகப் பின்பற்றுவது என்று உறுதி கொள்வோம். நமது சொந்த சுயநலங்களை மறந்து, நாட்டின் பொதுநலமே பெரிதென அறிந்து, தலைவர்களின் கஷ்டங்களை உணர்ந்து கட்டுப்பாட்டுடன் நடப்பதென்று பிரதிக்ஞை செய்வோம்.

சுதந்திரம் நிரந்தரமாவதற்கு அது ஒன்றே மார்க்கம். தேச நன்மைக்கும் மக்களின் முன்னேற்றத்துக்கும் அது ஒன்றே சாதனம். வேறு வழி கிடையாது.

வாழ்க சுதந்திரம்! வாழ்க நிரந்தரம்!

# கண்ணிலும் இனியது

மனிதன் தன் வாழ்க்கையில் எல்லாவற்றையும் விடப் பெரும்பேருகக் கருதுவது கண்பார்வை. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பதிலிருந்தே கண்ணின் மதிப்பை நன்கு அறியலாம். அத்தியந்த அன்புக்குரியவர்களைக் "கண்ணே!" என்றும் "கண்ணின் மணியே!" என்றும் அருமையாக அழைக்கிருேம். "கண்ணே! கண்ணிற் கருமணியே!" என்று பக்தர்கள் இறைவனையே அழைக்கிருர்கள். "உலகத்தின் செல்வங்கள் எல்லாம் வேண்டுமா? கண் பார்வை வேண்டுமா?" என்று கேட்டால், "கண் பார்வைதான் வேண்டும்!" என்று யாரும் சொல்வார்கள். கண்ணில்லாமல் பிறந்துவிட்டாலும் ஒரு மாதிரி; கண் பெற்றவர்கள் அதை இழந்துவிடுவதைக் காட்டிலும் கொடிய துன்பம் வேறில்லை. "கண்ணிலான் பெற்றிழந்தான்" என்று கூறிய கவி, அதைவிடப் பெருந்துயரம் இவ்வுலகில் வேறில்லையென்றே குறிப்பிடுகிருர்.

அத்தகைய விலை மதிப்பில்லாத பாக்கியமான கண்ணைக் காட்டிலும் சிறந்த பாக்கியம், இனியதானபேறு, வேறு ஒன்று உண்டா?

"உண்டு" என்று சொல்கிருர் நம் தேசீய மகாகவி பாரதியார்.

> "விண்ணி லிரவிதனை விற்றுவிட்டெவரும் போய்
> மின்மினி கொள்வாரோ ?
> கண்ணிலும் இனிய சுதந்திரம் போனபின்
> கைகட்டிப் பிழைப்பாரோ ?"

என்று பாரதியார் ஐயமறக் கூறியிருக்கிருர்.

அது மட்டுமா?

உலகத்திலுள்ள மற்ற இன்பங்கள் அனைத்தையும் அநுபவிப்பதற்குச் சாதனமா யிருப்பது சுதந்திரந்தான் என்றும் மகாகவி கூறியிருக்கிறார்.

ஓர் அழகிய சித்திரத்தைப் பார்க்கிறோம். மெய் மறக்கிறோம். அதை அடிக்கடி பார்த்துக்கொண்டிருக்க வேண்டும், பார்த்து அநுபவிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. சித்திரத்துக்கு என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்கலாம். சொத்து முழுவதையும் சித்திரத்துக்காகக் கொடுக்கலாம். ஆனால் கண்ணைக் கொடுக்கலாமா? கண்ணைக் கொடுத்துவிட்டுச் சித்திரம் வாங்குவதனால் என்ன பயன்? அதைக்காட்டிலும் மடமை வேறு உண்டா?

"கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற்
கைகொட்டிச் சிரியாரோ"

என்று சொல்லிப் பசுமரத்தில் ஆணி அடித்தாற் போல் சுதந்திரத்தின் பெருமையைத்தெளிவாக்குகிறார் பாரதியார்.

இன்னும் சுதந்திர தேவிக்குப் பாரதியார் பாடியுள்ள பிரசித்திபெற்ற அஞ்சலியில் சுதந்திரப் பேற்றுக்காக என்ன கஷ்டம் வேண்டுமானாலும் படலாம், என்ன நஷ்டம் நேர்ந்தாலும் அநுபவிக்கலாம் என்று கூறுகிறார்.

"சுதந்திரத்துக்காக வீடு வாசலைத் துறந்து சென்று சிறையில் அவதிப்படலாம். பதவியை விடலாம்; பணத்தைத் துறக்கலாம்; கோடி கோடி இன்னல்கள் வாழ்க்கையைத் துன்பமயமாக்கினாலும் பொறுத்திருக்கலாம். சுதந்திரம் மனிதனுக்கு அவ்வளவு தலை சிறந்த பாக்கியம்" என்று பாரதியார் வற்புறுத்துகிறார்.

"தேவி நின்னொளி பெறாத
தேயமோர் தேய மாமோ?
பாவியர் அன்றோ நின்றன்
பாலனம் படைத்திலாதார்?"

என்பதாகச் சுதந்திரம் பெருத மனிதர்களைப் பாவிகள் என்றே சபிக்கிருர்.

மகாகவி பாரதியாரைப் போலவே உலகத்தில் அவதரித்த எத்தனையோ பெரியார்கள் சுதந்திரத்தின் பெருமையை அறிவுறுத்தியிருக்கிருர்கள்.

நாட்டின் சுதந்திரத்துக்காகச் சகல தியாகங்களையும் செய்து, முடிவாக உயிர்த்தியாகமும் செய்த மகா புருஷர்கள் உலகச் சரித்திரத்தில் எத்தனையோ பேர் உண்டு.

அத்தகைய பெறுதற்கரிய பேருகிய சுதந்திரத்தை ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியா தேசம் பெற்றிருக்கிறது.

* * *

இந்தியா அடைந்த சுதந்திரத்தைப் பற்றி அவ்வப்போது சில அபஸ்வரப் பல்லவிகள் பாடப்படுவதைக் கேட்கிருேம். அர்த்தமில்லாத வார்த்தைகளும் மௌடீகமான பேச்சுக்களும், பேசப்படுவதைக் கேட்கிருேம்.

"சுதந்திரம் வந்து என்ன பயன்? அரிசி ரேஷன் அதிகமாகவில்லையே!" என்று சிலர் சொல்கிருர்கள்.

"சுதந்திரம் வந்து என்னபயன் ? கடலைப் பிண்ணுக்கு விலைகுறையவில்லையே?" என்று சிலர் புகார் கூறுகிருர்கள்.

"சுதந்திரம் வந்து விட்டதனுல் என்ன ஆயிற்று? வீட்டு வாடகை குறைந்ததா ? குமாஸ்தா சம்பளம் உயர்ந்ததா? தொழிலாளருக்கு வேலை செய்யாமல் கூலி கிடைக்கிறதா?" என்று சிலர் சம்பந்தமில்லாத கேள்விகளைப் போடுகிருர்கள்.

"அரசியல் சுதந்திரம் வந்து விட்டால் போதுமா? பொருளாதார சுதந்திரம் இல்லையே? சாகச் சுதந்திரம் இல்லையே? கள்ளுக் குடிக்கக்கூடச் சுதந்திரம் இல்லையே?" என்று சில சாம்பிராணிகள் 'சுதந்திரம்' என்னும் வார்த்தைக்கே பொருள் தெரியாமல் பேசுகிருர்கள்.

நம்முடைய திடமான கொள்கை,—அசைக்க முடியாத நம்பிக்கை இந்த விஷயத்தில் என்னவென்ருல் :—

ஒரு நாட்டுக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் அரசியல் சுதந்திரம் மற்ற எந்த நன்மையைக் காட்டிலும் மேலானது.

வறுமையும் பஞ்சமும் நாட்டில் தாண்டவமாடினுலும் சுதந்திர ஆட்சிதான் மேலானது.

அன்னியர்களின் ஆட்சியில் குபேர சீமானு யிருப்பதை விடச் சுதந்திர ஆட்சியில் பரம தரித்திரனுக வாழ்வதே விரும்பத் தக்கது.

அன்னிய ஆட்சியின்கீழ் தினம் நாலு வேளை வயிருர உண்பதைக் காட்டிலும், நம்முடைய சொந்த சுதந்திர ஆட்சியில், நாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் ஆட்சியில் பஞ்சத்தினுல் செத்துப்போவதே மேலானது.

சுதந்திரத்துக்காக இந்த நாட்டிலுள்ள பள்ளிக் கூடங்களை யெல்லாம் மூடிவிட வேண்டும் என்று சொன்னுல் அதற்கு நாம் தயாராயிருக்க வேண்டும்.

சுதந்திரத்துக்காகத் தேசத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளை யெல்லாம் மூடிவி...லாம் என்ருல் அதற்கும் நாம் தயாராயிருக்க வேண்டும்.

சுதந்திரத்துக்காக இந்த நாட்டிலுள்ள வீடுகளை யெல்லாம் இடித்துப்போட வேண்டும், மக்கள் அனைவரும் திறந்த வெளியிலோ, மலைக் குகையிலோ வசிக்க வேண்டும் என்ருல் அதற்கும் தயாராயிருக்க வேண்டும்.

வீட்டுக்கு ஒரு பிள்ளையை நாட்டுக்காகப்பலி கொடுக்க வேண்டுமென்ருல் மக்கள் அவ்விதம் செய்யப் போட்டியிட்டுக் கொண்டு முன்வர வேண்டும்.

இப்படி யெல்லாம் சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்யத் தயாராயிருக்கும் மக்கள்தான் சுதந்திரத்துக்கு லாயக்கானவர்கள். அவர்கள்தான் சுதந்திரமாய் வாழ முடியும். இவ்விதமெல்லாம் தியாகம் செய்யத் தயாராயிருந்ததினுலேயேதான், இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா,

ருஷியா, சீனு முதலிய நாடுகள் இன்று சுதந்திர தேசங்களாயிருக்கின்றன. இல்லாவிடில் அந்த நாடுகள் எல்லாம் இந்த நேரத்தில் ஜெர்மனிக்கும் ஜப்பானுக்கும் அடிமை பூண்டு வாழ வேண்டி நேர்ந்திருக்கும்.

* * *

"சுதந்திரம்" என்று சொல்லும்போது ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்தைத்தான் நாம் முதன்மையாகக் குறிப்பிடுகிறோம்.

அரசியல் சுதந்திரந்தான் மிக முக்கியமானது. மற்றப் பொருளாதார சுதந்திரம், வியாபார சுதந்திரம், தொழில் சுதந்திரம், படிக்கும் சுதந்திரம், படியாமலிருக்கும் சுதந்திரம், அம்மை குத்திக் கொள்ளுகிற சுதந்திரம், குத்திக் கொள்ளாமலிருக்கும் சுதந்திரம், கண்டதைப் பேசி எழுதும் சுதந்திரம்—இவையெல்லாம் இரண்டாம் பட்சமானவை தான். இந்தச் சுதந்திரங்கள் எல்லாம் இல்லை என்பதற்காக அரசியல் சுதந்திரத்தைப் பற்றி அலட்சியமாகப் பேசுவது மடமையிலும் மடமை. அரசியல் சுதந்திரம் ஒன்று இருந்தால் மற்றச் சுதந்திரங்களெல்லாம் நாளடைவில் கட்டாயம் பின்தொடர்ந்து வரும். அரசியல் சுதந்திரம் இல்லாவிட்டால் வேறு எந்தச் சுதந்திரமும் ஒருநாளும் கிட்டாது. ஆகையால் ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்துக்கு கேடு சூழும் காரியத்தை அந்த நாட்டுப் பிரஜை எவனும் செய்யக்கூடாது. செய்கிறவன் தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகியாவான்.

* * *

தாய் நாட்டின் சுதந்திரத்துக்காக மற்றத் தேச மக்கள் செய்திருக்கும் தியாகங்களை நோக்கும்போது இந்திய மக்கள் செய்த தியாகங்கள் ஒன்றுமேயில்லை என்று சொல்ல வேண்டும்.

பாரதத் தாய் செய்த பாக்கியத்தினுல் நமது முன்னோர் செய்த தவத்தினுல், லோகமான்ய திலகர், தாதாபாய்

நவுரோஜி, லாலா லஜபதிராய், தேசபந்துதாஸ், வ. உ. சிதம்பரம் பிள்ளை, மோதிலால் நேரு, சத்தியமூர்த்தி, அஜ்மல்கான், அன்ஸாரி முதலிய தேசபக்தர்கள் தோன்றினார்கள். அவர்களுடைய மகா தியாகங்களினாலும் காந்தி மகாத்மாவின் ஆத்ம சக்தியினாலுமே இந்தியா இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு குறைவான கஷ்டங்களுடன் பரிபூரண அரசியல் சுதந்திரம் அடைந்திருக்கிறது.

அப்படி நாம் பெற்ற சுதந்திரச் செல்வத்தைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்க வேண்டும். அலட்சியமாயிருப்பதும், அசட்டையாய்ப் பேசுவதும் தற்கொலைக்கொப்பான காரியங்கள்.

* * *

நமது முன்னோர்கள் செய்த பூஜாபலத்தினால் இன்று புது டில்லியில் வீற்றிருந்து இந்தியாவை ஆளுகிறவர்கள் மகாபுருஷர்களாயிருக்கிறார்கள். ஜவாஹர்லால், ராஜாஜி, சர்தார் வல்லபாய், ராஜேந்திர பிரஸாத் போன்றவர்கள் தியாக வாழ்க்கைக்கும் தாய் தாய்நாட்டின் தொண்டுக்கும் தங்களையே அர்ப்பணம் செய்தவர்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் ஒவ்வொருவரும் பெரிய வருமானங்களையும், சுகபோகங்களையும் அத்தனை காலம் செய்த தொழிலையும் உதறித் தள்ளிவிட்டுச் சுதந்திரப் போரில் இறங்கியவர்கள். ஒரு காலத்தில் இந்திய சர்க்கார் மந்திரிகளாய் விளங்கி இந்தியாவை ஆளப்போகிறோம் என்று இவர்கள் கனவிலும் கருதியிருக்க மாட்டார்கள். தாய் நாட்டின் தொண்டில் உயிரை அர்ப்பணம் செய்யவும் சித்தமாக முன் வந்தார்கள்.

நம்முடைய பாக்கியம், பாரதத்தாய் செய்த தவம், ஜவாஹர் முதலியவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள்.

இவர்களைப் போல் நாட்டை ஆளுவதற்குரிய சகல குணங்களும் பொருந்தியவர்களைப் பெறுவது எளிதல்ல.

தற்சமயம் உலகத்தில் எந்த நாடும் இத்தகைய மாபெருந் தலைவர்களைப் பெற்றிருக்கவில்லை.

* * *

ஆயிரம் ஆண்டு அடிமைப்பட்டுக் கிடந்தபிறகு, நூற்றைம்பது வருஷம் அன்னியராகிய பிரிட்டிஷாரின் ஆட்சியின்கீழ் இருந்த பிறகு சென்ற 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ந் தேதி இந்தியா பூரண அரசியல் சுதந்திரம் அடைந்து.

பாரதத் தாயை வாழ்த்துகிறோம். பாரதத்தாயின் உத்தமப் புதல்வர்களை வணங்குகிறோம். பாரத தேசத்தின் சுதந்திரத்தைப் போற்றுகிறோம்.

சத்தியத்தினாலும் அஹிம்சையினாலும் ஆத்ம தபோ பலத்தினாலும் இந்தியா அடைந்த சுதந்திரம் ஊழி ஊழி காலம் நிலைபெற்று விளங்குமென்று நம்புகிறோம். விரும்புகிறோம். பராசக்தியைப் பிரார்த்திக்கிறோம்.

தூண்டு மின்ப வாடைவீசு துய்ய தேன்கடல்
சூழ நின்ற தீவிலங்கு ஜோதி வானவர்
ஈண்டு நமது தோழராகி
எம்மோ டமுதம் உண்டு குலவ
நீண்ட மகிழ்ச்சி முண்டு குலவ
நினைத்திடும் இன்பம் அனைத்தும் உதவ
வேண்டு மடி எப்போதும் விடுதலை—அம்மா

# ஆரியர்—திராவிடர் என்னும் அறிவீனம் !

நீண்ட காலத்துக்குப்பிறகு இவ்வாண்டில் தமிழ்நாடு தனி அரசியல் பகுதியாகியிருக்கிறது. இதனால் ஊக்கம் கொண்டு தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று பட்டு முன்னேற்றப் பாதையில் செல்லப் பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டும். இச்சமயத்தில் பிரிவினைகளையும், வேற்றுமைகளையும் கற்பனை செய்து வளர்த்து வருவோர் தமிழர்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள் ; ஆதலின் தமிழ் நாட்டுக்கே பெருந்துரோகம் செய்கிறார்கள்.

தமிழகத்தின் முன்னேற்றத்துக்குத் தற்சமயம் முட்டுக்கட்டைகளில் ஒன்றாக இருப்பது ஆரியர்—திராவிடர் என்று பிரிக்கும் அறிவீனமாகும். சரித்திர ஆதாரங்களுக்கும் பிரத்யட்சப் பிரமாணங்களுக்கும் சிறிதும் ஒவ்வாத இந்த வேற்றுமையை இந்நாட்டில் சில குறுகிய உள்ளம் படைத்த சுய நலக் கும்பல்கள் வற்புறுத்திப் பிரசாரம் செய்து வருகின்றன. இந்தப் பிரசாரம் எவ்வளவு அபத்தமானது என்பது பற்றிச் சென்ற வாரத்தில் ராஜாஜியும், ஸ்ரீ சிவஞான கிராமணியும், ஸ்ரீ சி. பி. ராமஸ்வாமி ஐயரும், ஸ்ரீ ரா. பி. சேதுப்பிள்ளையும், ஸ்ரீ ஜீவானந்தமும் வெவ்வேறு இடங்களிலும், வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள்.

ஆரியர்களும் சரி, திராவிடர்களும் சரி பாரத நாட்டுக்கு வெளியிலுள்ள நாடுகளிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டுக்கு வந்தவர்கள் என்று மேனாட்டுச் சரித்திர ஆராய்ச்சியாளர் சிலர் கூறினார்கள். அதை

இந்நாட்டு ஆங்கிலப்படிப்பாளர் சிலரும் ஆராயாமலே ஒப்புக் கொண்டார்கள்.

ஆரியரும் திராவிடரும் தனித்தனி இனத்தினர் என்றும், இந்தியாவுக்கு வெளியிலிருந்து இங்கே போந்தவர்கள் என்று வைத்துக் கொண்டாலும், அப்படி அவர்கள் இந்நாட்டுக்கு வந்தது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் என்று அதே ஆராச்சியாளர் கூறுகின்றனர். குறைந்த பட்சம் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள் வந்திருக்க வேண்டும். வந்தவர்கள் இமயமலையிலிருந்து குமரிமுனை வரையில் பரவியிருக்கிறார்கள். இரு இனத்தார்களும் ஒருவரோடொருவர் பிரிக்க முடியாதபடி கலந்துபோயிருக்கிறார்கள். இரு இனங்களின் சமயக் கோட்பாடுகளும், சமூக வழக்க பழக்கங்களும், கலைகளும், பண்பாடுகளும் பிரித்துக் காட்ட முடியாதபடி கலந்து போயிருக்கின்றன.

இமயத்திலுள்ள நேப்பாள நாட்டிலிருந்து தெற்கே ஈழ நாட்டிலுள்ள திரிகோணமலை வரையில் சைவ சமயமும், சிவலிங்க வழிபாடும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து நிலை பெற்றிருக்கின்றன. சைவ சமயிகள் அணியும் புறச்சின்னங்களில் ஒன்றான ருத்திராட்ச மணிகள் பல்லாயிரம் ஆண்டுகளாக நேப்பாளத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்துகொண் டிருக்கின்றன.

வேத முறைப்படி யாகங்கள் நடந்து கொண்டிருந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நாட்களிலும் வட நாடும் தென்னாடும் ஆசாரத்திலும் பண்பாட்டிலும் ஒன்று பட்டிருந்தன. அதன் பின்னர் வட நாட்டில் தோன்றிய புத்தமும் சமணமும் தென்னாட்டில் பரவி ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பெரும் செல்வாக்கு அடைந்தன.

இவற்றுக் கெல்லாம் பழந்தமிழ் நூல்களிலும் கல் வட்டுக்களிலும் செப்பேடுகளிலும் ஒன்றல்ல,

இரண்டல்ல—ஆயிரக் கணக்கான சான்றுகள் இருக்கின்றன.

ஆராய்ச்சி அறிவீனத்தின் சிகரமான ஒரு கொள்கையை, இந் நாளில் ஆரியர்—திராவிடர் பிரிவினையை வற்புறுத்தும் கூட்டத்தார் பரப்பி வருகிறார்கள். வட நாட்டார் ஆரியர் என்றும், தென்னாட்டார் திராவிடர் என்றும், தென்னாட்டில் உள்ள பிராமணர்கள் மட்டும் ஆரியர்கள் என்றும் இவர்கள் கூறி வருகின்றனர், இதை எவ்வித ஆதாரமும் அற்ற, அறிவுக்கு முற்றும் புறம்பான பிதற்றல் என்றுதான் கூறவேண்டும்.

வட மொழியாகிய சமஸ்கிருதமும், வட மொழியிலுள்ள நாலு வேதங்களும், வேதங்களைப்பயின்ற பிராமணர்களும், அவர்கள் நடத்திய யாகங்களும் ஆரியர்களுக்குரியனவென்று பிரிவினை வாதிகள் கூறுகிறார்கள்.

ஆனால் தமிழ் நாட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து வேதங்கள் ஓதி, யாகங்கள் நடத்தி வந்திருக்கிறார்கள். அவர்களைத் தமிழ் நாட்டு மன்னர்களும் மற்ற குடிமக்களும் ஆதரித்து வந்திருக்கிறார்கள். வேதங்களையோ, யாகங்களையோ, அயல் நாட்டுக்குரியன வென்றும், பிராமணர்களை வேற்று நாட்டார் என்றும் அந் நாளில் தமிழர்கள் கருதவில்லை.

தெய்வத் தமிழ் மொழியில் உள்ள நூல்களில் மிகப் பழமையானது ஒன்று, புறநானூறு என்னும் தொகுப்பு நூல்.

'பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே நம் தமிழகத்தில் விளங்கிய புலவர் பெருமக்கள் அவ்வப்போது பாடிய பழைய பாடல்களின் தொகுப்பு இத்தொகை நூல்!' என்று தமிழாராய்ச்சியாளர் சிலர் கருதுகிறார்கள். புறநானூற்றிலுள்ள பாடல்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கடைச்சங்க காலத்தவை என்று ஆராய்ச்சிக்காரர் அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

அத்தகைய பழம் பெரும் நூலிலேயே ஆரியச் சமயக் கொள்கைகளும் பண்பாடுகளும் தமிழர் வாழ்க்கையோடு ஒன்றுபட்டிருந்தன என்பதற்கு எத்தனையோ சான்றுகள் இருக்கின்றன.

புறநானூற்றுப் பாடல்கள் பலவற்றில் புகழ்ந்து பாடப்பெற்றிருக்கும் பாண்டிய மன்னன் ஒருவனுக்குப் "பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி" என்று பெயர். இவனைப் புலவர் "பஃறுளியாற்று மணலினும் பல யாண்டு வாழ்க!" என்று வாழ்த்தியிருக்கிறார். ஆதலின் இப்பாண்டியன், குமரிக் கோடும் பஃறுளி ஆறும் கடல் கொள்ளப்படுவதற்கு முன்பு தமிழகத்தில் இருந்தவன் என்று அநுமானிக்கின்றனர்.

எப்படியிருப்பினும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலிருந்த இப்பாண்டிய மன்னன், பற்பல யாகங்கள் செய்து அதையே தன் பெயருக்குப் புகழ் தரும் அடைமொழியாகப் பெற்றிருக்கிறான். அவனைப் பற்றிப் பாடிய பாடலில்

"பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர் வலஞ் செயற்கே;
இறைஞ்சுக பெரும! நின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே!"

"சிவ பெருமானின் கோயிலை வலம் செய்து வரும்போது உன் வெண் கொற்றக் குடை தாழட்டும்; நான்மறை முனிவர் உன்னை ஆசீர்வதிக்கக் கையைத் தூக்கும்போது உன் சென்னி தாழட்டும்!" என்று புலவர் வாழ்த்தியிருக்கிறார்.

இன்னொரு பாடலில்,

"நாற்பனுவல் நால் வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங் கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்!"

என்று அப்பாண்டியன் செய்த யாகங்களையும், யாகங்களில் ஆவுதி பொங்கியதையும், யாகங்களை முடித்தபின் நட்ட யூபங்களையும் பற்றிப் புலவர் வியந்து பாடியிருக்கிறார்.

சங்கப் புலவர் பாடிய சோழ மன்னர்களில் ஒருவனுக்குச் "சோழன் இராஜ சூயம் வேட்ட பெருநற்கிள்ளி" என்று பெயர்.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன் என்பவனைப் பற்றிய பாடலில்,

"நான்மறை முதல்வர் சுற்றமாக
மன்னரேவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வேள் வேந்தே!"

என்று புலவர் பெருமான் பாடியிருக்கிறார்.

சேரமான் பெருஞ் சோற்றுதியஞ் சேரலாதன் என்பவனைப் பற்றிய பாடலில்,

"பால் புளிப்பினும் பகலிருளினும்
நால்வேதம் நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு"

விளங்குவோன் அம்மன்னன் என்று கூறி

"அந்தி அந்தணர் அருங் கடனிருக்கும்
முத்தீ விளக்கிற்றுஞ்சும
பெற்கோட்டிமயமும் பொதியமும் போன்றே!"

அச் சேர மன்னன் நிலைத்து வாழவேண்டும் என்று வாழ்த்தியிருக்கிறார்.

இமய மலையிலும் பொதிகை மலையிலும் அந்தணர்கள் முத்தீ வளர்த்து அருங் கடன் ஆற்றுவதைச் சேர்த்துப் பாடியிருக்கிறார் புலவர்.

அந்த நாளைத் தமிழர்கள் இமயமலை முதல் குமரிமுனை வரையில் ஒரே நாடாகக் கருதியிருக்கிறார்கள் என்பது,

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தேஅது உருகெழு குமரியின் தெற்கும்"

என்னும் வரிகளிலிருந்தும் தெளிவாகிறது.

ஆரியரும் திராவிடரும் ஒரே இனமாகி, இரு இனங்களுக்கும் உரிய சமயக் கோட்பாடுகளும் வழக்க பழக்கங்களும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே கலந்து போய் விட்டன என்பதைத் திட்டமாக நிரூபிக்கும் இத்தகைய நூறு நூறு சான்றுகளை மிகப் பழமையான தமிழ் நூல்களிலிருந்து எடுத்துக் காட்டலாம்.

இன்னும் சிறிது பிற்காலத்துக்கு வந்தோமானல் கேட்கவே வேண்டியதில்லை.

வட நாட்டிலிருந்து வந்த பௌத்த சமயமும், சமண மதமும் தமிழர் வாழ்விலும் பண்பாட்டிலும் எவ்விதம் கலந்துவிட்டன என்பதை எவரும் எளிதில் அறியலாம்.

காஞ்சியில் பல நூற்றாண்டு காலம் சிறப்புடன் வாழ்ந்து பெரிய சாம்ராஜ்யம் நிலை நாட்டியிருந்த பல்லவ மன்னர்கள் மகேந்திரன் முதல் அபராஜிதன் வரையில் ஆரியர் தமிழர் என்ற வேற்றுமையையே அறியாதவர்களாயிருந்தார்கள் என்பது அவர்களுடைய பெயர்களைப் பார்த்தவுடனேயே தெரிய வரும்.

விஜயாலய சோழன் முதல் மூன்றாவது இராஜேந்திர சோழன் வரையில் முந்நூறு ஆண்டு காலம் சோழ சாம்ராஜ்யம் சிறப்புற்று விளங்கிய காலத்தில் தமிழகத்தில் ஆரியர்—திராவிடர் என்ற வேற்றுமையை மக்கள் கனவிலும் கருதியதில்லை என்று அக்காலத்திய கல்வெட்டுக்கள்-செப்புப் பட்டயங்கள் அனைத்திலிருந்தும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு குலோத்துங்கனின் கலிங்கப் போரைப்பற்றிச் செயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப் பரணியில்

"மறையவர் வேள்விகுன்றி மனுநெறி
அனைத்து மாறித்,
துறைகளோராறு மாறிச் சுருதியும்
முழக்கம் ஓய்ந்தே"

என்பவை போன்ற எத்தனையோ வரிகள் இருக்கின்றன. இவற்றிலிருந்து அக்காலத்திலும் ஆரியர்—திராவிட என்ற வேற்றுமையை யாரும் அறிந்திருக்கவில்லை என்று அறியலாம்.

இப்படி ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆரியர் - திராவிடர் என்னும் இனவேற்றுமை உணர்ச்சியின்றித் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த நாட்டில் இப்போது சிலர் வெள்ளைக்காரச் சரித்திர ஆராய்ச்சியாளரின் கற்பனைகளை ஆதாரமாகக் கொண்டு இல்லாத வேற்றுமைகளைப் புதிதாக உண்டாக்கி வளர்க்கவும் பார்க்கிறார்கள்.

பொய்மையை அடிப்படையாகக்கொண்ட இந்த வேற்றுமைக் கிளர்ச்சி தமிழகத்தில் ஒருநாளும் வெற்றி பெறப் போவதில்லை.

புறநானூற்றில் உள்ள மற்றொரு அற்புதமான பாடலில் முதல் வரி பின்வருமாறு :

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்". எல்லா ஊரும் நம் ஊர்தான். எல்லா மக்களும் நம் உறவினர்தான். (கேளிர் = உறவினர்)

பழந்தமிழ் மக்கள் பண்பாட்டின் ஜீவநாடி இந்த வரியில் அடங்கியிருக்கிறது. இதற்குப் புறம்பாக வேற்றுமைகளைக் கற்பித்துப் பகைமையை வளர்ப்பவர்கள் தமிழர்கள் ஆகமாட்டார்கள். "அவர்களை விரட்டிவிடுவோம், இவர்களை ஓட்டிவிடுவோம்" என்று பிதற்றிக்கொண்டு வெறிபிடித்து அலைகிறவர்களுக்குத் தமிழ் மக்கள் ஒருகாலும் செவி சாய்க்கமாட்டார்கள். தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் மாறான கொள்கைகளை ஏதோ சுயநல காரணங்கொண்டு பரப்புகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வார்கள்.

# யாரை யார் விரட்டுவது?

தமிழ் நாட்டிலிருந்து 'ஆரியரை விரட்டிவிடுவோம் என்றும், வட இந்தியரைத் துரத்திவிடுவோம்' என்றும் கூச்சல் போடுகிறவர்கள், "பொதிகை மலையைத் தூக்கிச் சிந்து நதியில் போட்டு விடுவோம், திருவண்ணுமலையைத் தூக்கி இலங்கைக்கு அனுப்பி விடுவோம்" என்பவை போன்று கவைக்குதவாத பேச்சுக்களைப் பேசுகிறுர்கள்.

சுதந்திர பாரத தேசத்தில் வாழும் யாரையும் எவரும் விரட்டிவிட முடியாது.

இந்த நாட்டில் இமயம் முதல் குமரி வரையில் யாரும் எங்கேயும் போகலாம், வசிக்கலாம், தொழில் செய்து பிழைக்கலாம் என்று இந்திய சுதந்திர சாஸனம் உரிமை அளித்திருக்கிறது.

தமிழகத்தில் இன்று வாழ்வோர் சிலர், ஆரியர் - வட நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று விவாதத்துக்காக வைத்துக்கொண்டாலும், அவர்களை யார் விரட்ட முடியும்? எதற்காக எப்படித் துரத்திவிட முடியும்?

நேற்று வந்து தமிழ் நாட்டில் குடியேறிய மார்வாரிகளேயும், குஜராத்திகளையும், பஞ்சாபிகளையும் போகச் சொல்ல முடியாது.

சில நூறு வருஷங்களுக்கு முன்னுல் தமிழ் நாட்டிற்கு வந்து குடியேறிய ரெட்டியார்களையும், நாயுடுமார்களையும் நாயக்கர்களையும், ராஜாக்களையும் போகச் சொல்ல முடியாது.

பல்லாயிரம் வருஷங்களாக இந்தத் தமிழ் நாட்டில் வாழ்ந்து வளப்படுத்தித் தமிழைத் தாய் மொழியாகக்

கொண்டு தமிழில் ஒப்பற்ற நூல்களை இயற்றித் தந்திருப்பவர்களை விரட்டி விடுகிறதென்பது வெறும் பேச்சுக்காரர்கள் காணும் பகற் கனவேயாகும். அவ்விதம் சொல்லுகிறவர்களுக்கே அதில் நம்பிக்கை இருக்க முடியாது, மக்களை ஏமாற்றித் தங்கள் காரியம் எதையோ சாதித்துக்கொள்வதற்காகவே அவ்விதம் அவர்கள் பேசுகிருர்கள். அறிவாளிகளான தமிழ் மக்கள் இந்தப் பேச்சுக்களை விரும்பவும் மாட்டார்கள்; ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். நெறி தவறிப் போகிறவர்களைத் திரும்பவும் நேர் வழிக்குக் கொண்டு வந்து காப்பாற்றுவார்கள்.

இலங்கைத் தீவில் சென்ற நூற்றைம்பது வருஷங்களுக்குள் சென்று குடியேறிய தமிழர்களுக்கு இலங்கை சர்க்கார் பூரண பிரஜா உரிமை தரவேண்டும் என்று நாம் கோருகிறோம்; வற்புறுத்துகிறோம், போராடுகிறோம்.

இலங்கை சர்க்காரும் அத்தகைய தமிழர்களை விரட்டி விடப்போகிறோம் என்று சொல்லவில்லை. "இங்கேயே நிரந்தரமாகக் குடியேறியவர்களுக்கு மட்டும் பூரண பிரஜா உரிமை தருவோம். தற்காலிகமாக வந்து பொருள் திரட்டிக்கொண்டு போகிறவர்களுக்குப் பிரஜா உரிமை தரமாட்டோம்" என்றுதான் கூறுகிருர்கள்.

தென்னுப்பிரிக்காவில் காட்டுமிராண்டி ஆட்சி நடத்தி உலகத்தின் அதிருப்தியையே சம்பாதித்துக்கொண்டு வரும் டாக்டர் மலான் சர்க்கார்கூட "இந்தியர்களையெல்லாம் விரட்டி விடப்போகிறோம்" என்று சொல்லவில்லை.

அப்படியிருக்கும்போது பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் வாழ்ந்து வருகிறவர்களை விரட்டிவிடுவோம் என்ற கூச்சலைக் கிளப்புவதில் என்ன பொருள் இருக்கிறது? நேருஜி போன்றவர்கள் இந்தத் தெய்வத் தமிழ் நாட்டில் "காட்டுமிராண்டிகள் சிலரும் இருக்கிருர்கள் போலும்!" என்று கருதுவதற்கே அத்தகைய கூச்சல்கள் காரணமாகின்றன.

திராவிடர் என்றும் ஆரியர் என்றும் ஆதார மற்ற பிரிவினையைச் செய்து கொண்டு, திராவிடருக்கு ஆரியர்கள் விரோதிகள் என்றும், திராவிடர்கள் ஆரியர்களிடமிருந்து தனித்துவிடவேண்டும் என்றும் கூறுவதில் லாப நஷ்டம் என்ன என்பதையும் பார்க்க வேண்டும்.

இப்பிரிவினைக் கிளர்ச்சியினால் 'திராவிடர்கள்' என்று சொல்லிக்கொள்கிறவர்களுக்கு அளவில்லாத நஷ்டம் என்பதைத் தவிர, லாபம் என்பது அணுவளவும் இல்லை.

குமரி முதல் இமயம் வரையில் பரந்து விரிந்த பாரத தேசத்தின் மீது சம உரிமையைக் கைவிட்டு விட்டுப் பத்து ஜில்லாக்கள் கொண்ட பிரதேசத்தில் முடங்கிக்கிடக்க வேண்டியவர்களாகிறார்கள்.

இராமர், கிருஷ்ணர், புத்தர், மகாவீரர், அசோகர், ஹர்ஷ வர்த்தனர், சிவாஜி, சைதன்யர், துகாராம், தயானந்தர், பரம ஹம்ஸர், விவேகானந்தர், ரவீந்திரநாதர், லோக மான்யர், காந்தி மகாத்மா, சுபாஷ்போஸ் போன்ற மகா புருஷர்கள் அனைவரும் தங்களுக்கு உரியவர்கள் அல்ல வென்று தாங்களே கைவிடுகிறார்கள்.

இன்னும் குறுகிய திராவிட நோக்கங் கொண்டவர்கள், அகத்தியர், தொல்காப்பியர், நக்கீரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், பெரியாழ்வார், ஆண்டாள், சங்கரர், இராமானுஜர், பாரதியார், மகா மகோபாத்தியாய சாமி நாதய்யர், ஸி. வி. ராமன் ஆகியோர்களை யெல்லாம் தங்களுக்குச் சம்பந்தமில்லாதவர்கள் என்று கைவிட வேண்டியவர்களாகிறார்கள்.

இதுபோல இலக்கிய உலகில் எண்ணற்ற, உவமை சொல்ல இயலாத அற்புதச் செல்வங்களை அவர்கள் தத்தம் செய்ய வேண்டியவர்களாகிறார்கள்.

எந்தவிதத்திலும் நிரூபிக்க முடியாத பிரிவினையை—சரித்திர ஆதாரமோ பிரத்யட்ச பிரமாணமோ இல்லாத பிரிவினையை—நாமாகக் கற்பனை செய்து கொண்டு எல்

லாத் துறைகளிலும் நஷ்டத்தை ஏன் தேடிக்கொள்ள வேண்டும்?

*   *   *

ஆரிய—திராவிட இனப்பிரிவினையை வளர்த்துத் துவேஷத்தை உண்டாக்குவது வேறு, சாதி வேற்றுமைப் பிரச்னை வேறு என்பதை அறிவாளிகளான தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

சாதி வேற்றுமை என்பது முற்காலத்திலும் இருந்தது; இக்காலத்திலும் இருக்கிறது.

வடநாட்டிலும் சாதி வேற்றுமை உண்டு. தென்னாட்டிலும் உண்டு.

முற்காலத்திலும் மகான்கள் பலர் சாதி வேற்றுமையைப் பழித்திருக்கிறார்கள்.

இக்காலத்திலும் விவேகானந்தர், காந்தி மகான், தாகூர், பாரதியார் முதலிய பெரியோர்கள் சாதி வேற்றுமைகளை ஒழிக்கப் பாடுபட்டிருக்கிறார்கள்.

ஆதிகாலத்தில் சாதிப்பிரிவினை எந்த நோக்கத்துடன், எந்தச் சூழ்நிலையில் ஏற்பட்டதாயிருந்தாலும், இக்காலத்துக்கு அது பொருந்தாது என்பதை அறிவாளிகள் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்கிறார்கள்.

நம்மிடையே வாழ்ந்து வரும் பெரியோர்களில் சாதி வேற்றுமையை ஒழிக்கப் பாடுபடுகிறவர்களில் நேருஜியையும், ராஜாஜியையும் மிஞ்சியவர்கள் யாரும் இல்லை.

சாதி வேற்றுமை ஒழிந்துகொண்டு வருகிறது; அடியோடு ஒழிந்துவிடத்தான் போகிறது.

நிச்சயமாக நடக்கப்போகிற ஒரு காரியத்தை முன்னிட்டு ஆரியர்—திராவிடர் என்னும் இனப் பகைமையையோ, வடநாட்டார்—தென்னாட்டார் என்னும் பிரிவினை உணர்ச்சியையோ வளர்ப்பது அவசியமில்லை; தீமை பயப்பதுமாகும்.

" எப்பதம் வாய்த்திடுமேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்தநிலை பொதுவாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் "

என்பதே சுதந்திர பாரத நாட்டின் தாரக மந்திரமாயிருக்க வேண்டும். அதுவே தெய்வத் தமிழ் நாட்டின் மறை மொழியாகவும் விளங்கவேண்டும்.

# சாதி வேற்றுமை ஒழிய அன்பு வழியே வழி

"ஆரியர்—திராவிடர் என்னும் பிரிவினை அபத்த மானது; சரித்திர ஆதாரம் அற்றது; தற்கால நிலைமைக் குப் பொருந்தாதது" என்று முன் கட்டுரையில் எழுதி யிருந்தோம்.

அரசியல் காரணங்களுக்காகவோ, சுயநலக் காரணங் களுக்காகவோ ஆரியர்—திராவிடர் பிரிவினையைப் பயன் படுத்தி இனத்துவேஷத்தை வளர்த்து வரும் கூட்டத்தார் நம் கருத்தை ஒப்புக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அவர்கள் பத்திரிகைகளிலே நீண்ட மறுப்புகள் எழுதியிருக்கிறார்கள். அவற்றில் மேலும் துவேஷத்தையும் வசை மொழிகளையும் கையாண்டிருக்கிறார்களே தவிர, அறிவுக்குகந்த வாதம் எதுவும் இல்லை.

ஆரியர்—திராவிடர் என்னும் பிரிவினை முற்றும் பொய்மையை அடிப்படையாகக் கொண்டது என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றை இப்போது விவரிக்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால், ஆரியர்—திராவிடர் பிரிவினையைப் போன்ற தல்ல சாதி வேற்றுமை பல்லாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டில் சாதி வேற்றுமைகள் இருந்து வருகின்றன.

சரித்திரத்தின் ஆரம்ப காலந்தொட்டு வடநாட்டிலும் ஜாதி வேற்றுமை இருந்திருக்கிறது; தென்னாட்டிலும் இருந்திருக்கிறது.

தொழில்கள் காரணமாக ஆதியில் சாதிகள் உண்டாயின. தொழில்கள் நூற்றுக்கணக்கில் ஏற்பட்டன. ஆனால் இத்தகைய பிரிவினை நல்லதல்ல என்று நம் முன்னோர்கள் உணர்ந்தார்கள். சாதி வேற்றுமையைக் குறைப்பதற்காகவே நாலு சாதிகள் என்று வகுத்தார்கள் என்று ஊகிக்க இடமுண்டு.

வடமொழியிலிருந்த, பல நூறு சமய தத்துவ நூல்களை வேத வியாசர் நாலுவேதங்களாக வகுத்தார் என்று சொல்லப்படுகிறதல்லவா?

அதுபோலவே, பல நூறு சாதிகளைக் குறைப்பதற்காக நாலு சாதிகள் என்று வகுத்தார்கள் போலும்! ஆயினும், அந்த நாலு சாதிகளுள் நானூறு சாதிப் பிரிவினைகள் கிளைத்துத் தழைத்து வளர்ந்தன.

பிறகு இந்தச் சாதிகளுக்குள் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற ஏற்றத் தாழ்வான எண்ணங்கள் தோன்றி, வளர்ந்தன.

இத்தகைய வேற்றுமையால் சமூகத்துக்கு விளையக் கூடிய கேடுகளையும் நம் முன்னோர்களில் அறிவாளிகள் உணர்ந்தார்கள். ஆகையால் சாதிப் பிரிவினையையும், சாதிகளில் உயர்வு—தாழ்வு கற்பிப்பதையும் ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே தீர்க்க திருஷ்டியுள்ள நம் முன்னோர்களில் பலர் கண்டித்து வந்திருக்கிறார்கள்.

*  *  *

தென்னாட்டில் சாதி வேற்றுமையே இல்லாமலிருந்ததென்றும், வட நாட்டு ஆரியர்களாகிய பிராமணர்கள் கொண்டுவந்து புகுத்தி விட்டார்கள் என்றும் கூறுகிறார்கள். இதைப் போன்ற அபத்தமான கொள்கைவேறு எதுவும் இருக்க முடியாது.

வடநாட்டு ஆரியர்கள் தென்னாட்டிலே கொண்டுவந்து சாதி வேற்றுமையைப் புகுத்தினார்கள் என்றால் "அப்

போது தென்னாட்டுத் திராவிடர்களின் புத்தி எங்கே போயிருந்தது?" என்ற கேள்வி எழுகிறது.

இந்தக் காலத்திலேதான் நம் தமிழ் நாட்டிலுள்ள அபூர்வமான தமிழர்கள் சிலர் "எங்களுக்கு அறிவு வேண்டாம்" என்று சொல்கிறார்கள்.

பழந்தமிழ் நாட்டில் நம் முன்னோர்கள் சிறந்த அறிவாளிகளா யிருந்தார்கள்; உலகம் வியக்கும் அறிவைப் பெற்றிருந்தார்கள்.

"அறிவுடையார் எல்லாமுடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் சிலர்"

என்றார் திருவள்ளுவர் பெருமான்.

அறிவைப் போற்றி அறிவாளிகளாகத் திகழ்ந்த பழந் தமிழ் நாட்டினரை வடநாட்டு ஆரியர் ஏமாற்றி, இல்லாத சாதி வேற்றுமையைப் புதிதாகக் கொண்டு வந்து புகுத்தி விட்டார்கள் என்பது அறிவீனத்திலும் அறிவீனத்திலும் அறிவீனமான பேச்சு.

நாடார்களையும், மறவர்களையும் வன்னிய குலத்தாரையும், முதலியார்களையும் பிள்ளைகளையும், செட்டிமார்களையும், ரெட்டிமார்களையும், நாயுடுக்களையும், நாயக்கர்களையும், ஹரிஜனங்களுக்குள் பல்வேறு பிரிவினரையும் வடநாட்டு ஆரியர்களா தமிழ் நாட்டில் வந்து உண்டாக்கினார்கள்? இத்தகைய சாதிப்பிரிவினைகளைத் தமிழ் நாட்டில் பிறரால் புகுத்தி யிருக்கமுடியுமா?

சாதி வேற்றுமை வடநாட்டில் எப்படி மிகப் பழைய காலத்திலிருந்து இருந்து வந்திருக்கிறதோ அப்படியே தென்னாட்டிலும் இருந்திருக்கிறது.

தமிழ் மொழியில் உள்ள மிகப் பழமையான நூல்களிலேயே பிராமணர்கள் இடம் பெற்று வந்திருக்கிறார்கள்.

பழமையான சங்க நூல்களில் பிரசித்திபெற்ற தொன்று, திருமுருகாற்றுப் படை. இந்நூலை இயற்றியவர்

நக்கீரனார். முருகன் கோயில் கொண்டுள்ள பழனிமலையைப் பற்றி இந்நூலில் நக்கீரனார் வர்ணித்திருக்கிறார். "பழனி மலையில் வேதியர்கள் மந்திரங்களை ஜபித்துக்கொண்டு ஓமம் வளர்த்தார்கள்; அந்தப் புகை வான வெளியை யெல்லாம் மூடிவிட்டது" என்று வர்ணித்துக் கூறியிருக் கிறார்.

புறநானூற்றுப் பாடல்களில் பிராமணர்கள், வேதங் கள், யாகங்கள்—ஆகியவை பற்றிப் பல குறிப்புக்கள் இருக்கின்றன. அவை தென்னாட்டுக் குரியனவல்ல என்று எந்தப் புலவரும் மறுத்துச் சொல்லவில்லை.

பிராமணர்கள் அரசியலில் தலையிட்டுக் காரியம் செய்த தற்கும் பல உதாரணங்கள் இருக்கின்றன. புறநானூற் றுப் புலவர் ஒருவர், ஒரு பிராமண வாலிபனின் அதிசயச் செயலைப் பற்றி வியந்து பாராட்டிக் கூறியிருக்கிறார்.

இரண்டு சிற்றரசர்களுக்குள் போர் மூளுவதாக இருந் தது. அவர்களில் ஒரு சிற்றரசன் தன் கோட்டையைப் போருக்கு ஆயத்தமாக்கிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பார்ப்பன வாலிபன் அச் சிற்றரசனிடம் சென்று, போரின் தீமையை எடுத்துக் கூறினான். அந்தச் சிற்றரசன் மனம் மாறி. போர்க்குரிய ஆயத்தங்களைக் கோட்டையி லிருந்து எடுத்துவிட்டான்.

"இந்தப் பிராமணப் பிள்ளை உருவத்தில் சிறியவனா யிருக்கிறான். இவன் கூறிய வார்த்தைகளும் சிலவேயாகும்! ஆயினும் அந்தச் சில வார்த்தைகளினால், இரண்டு சிற்றர சர்களுக்குள்ளே போர் மூளாமல் தடுத்து விட்டானே!" என்று புலவர் வியந்திருக்கிறார்.

திருவள்ளுவர் காலத்தில் பிராமணர்கள் இருந்திருக் கிறார்கள். அவர்கள் வேதம் ஓதுவதை முக்கிய தொழிலா கக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒழுக்கம் கெட்ட வர்களும் இருந்திருக்கிறார்கள். ஆகையால் பிராமணன் வேதம் ஓதுவதைக் காட்டிலும் ஒழுக்கத்தைக் காப்பாற்றிக்

கொள்வதே பரம முக்கியமான கடமை என்பதை மிக அழுத்தமாக வற்புறுத்தி,

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம குன்றக் கெடும்"

என்று வள்ளுவர் பெருமான் கூறியிருக்கிறார்.

கபிலர் என்ற புலவர் பெருமான் சாதிவேற்றுமையைக் கண்டித்துப் பாடியுள்ள பாடல் மிகப் பிரசித்தமானது. கபிலரை வளர்த்த வேதியக் குடும்பத்தார் அவருக்குப் பூணூல் போட விரும்பினார்கள். கபிலர் எந்த சாதிப் பிள்ளை என்பது தெரியாதபடியால், அவருக்குப் பூணூல் போடுவதை மற்றப் பிராமணர்கள் எதிர்த்தார்கள். அப்போது கபிலர் பாடியதாகக் கூறப்படும் பிரசித்திபெற்ற பாடலில்

"வடதிசைப் பார்ப்பான் தென்திசைக்கேகின்
நடையது கோணிப் புலையன் ஆவான்
தென்திசைப் புலையன் வடதிசைக் கேகின்
பழுதற ஓதிப்பார்ப்பான் ஆவான்"

என்று கூறியுள்ளார். இதிலிருந்து கபிலருடைய நாளில் வடதிசையிலும் பார்ப்பனர்கள் இருந்தார்கள் தென் திசையிலும் பார்ப்பனர்கள் இருந்தார்கள் என்று ஏற்படுகிறது. அவர்களிலே கெட்டுப்போனவர்கள் பலர் இருந்தார்கள் என்றும் தெரியவருகிறது.

இப்படிப்பட்ட சாதி வேற்றுமைகள் திடீரென்று ஒரு நாள் ஏற்பட்டிருக்க முடியாது. அன்னியர்கள் கொண்டு வந்து தமிழ் நாட்டில் புகுத்தியிருக்கவும் முடியாது.

வடநாட்டிலும் சரி, தென்னாட்டிலும் சரி, சரித்திர காலந்தொட்டுச் சாதி வேற்றுமைகள் இருந்துவந்திருக்கின்றன.

தமிழர் சமுதாயம் என்று ஏற்பட்டதோ, அது முதல் சாதி வேற்றுமையும் இருந்துவந்திருக்கிறது. சாதி வேற்

றுமை இல்லாத தமிழர் சமுதாயம் இருந்திருந்தால் அது சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

இவ்வாறு சாதி வேற்றுமையானது மிகப் பழமையான ஏற்பாடு என்பதால், அது சரியானது என்று இந்நாளில் அறிவுள்ளவர்கள் யாரும் சொல்ல முன்வரமாட்டார்கள்.

பழைய காலத்திலும் சாதி வேற்றுமையைப் பலர் கண்டித்திருக்கிறார்கள். உதாரணமாக மேலே எடுத்துக்காட்டிய பாடலைப் பாடிய கபிலர்.

> "சிறப்பும் சீலமும் அல்லது
> பிறப்பு நலந்தருமோ பேதையீரே!"

என்று பாடலை முடித்திருக்கிறார். இவ்வாறு கபிலர் போட்ட போட்டைக்கேட்ட பிராமணர்கள் அப்பிள்ளைக்குப் பூணூல் போடுவதற்குச் சம்மதித்து விட்டார்கள் என்பது வரலாறு.

இப்படி அவ்வப்போது பல மகான்கள் சாதி வேற்றுமைகளையும், சாதி காரணமாக ஏற்றத்தாழ்வு கூறுவதையும் கண்டித்துவந்த போதிலும் ஹிந்து சமுதாயத்தை வடநாடு தென்னாடு என்னும் வேற்றுமையின்றி அந்த நோய் விடாமல் பிடித்துவந்திருக்கிறது.

சாதி வேற்றுமைகளை அடியோடு ஒழிப்பதில் யாருமே கணிசமான வெற்றி பெறவில்லை.

நம்முடைய காலத்திலே, காந்தி மகானுடைய ஆத்ம சக்திதான், அந்த அரும்பெரும் காரியத்தைப் பெரிய அளவில் சாதித்திருக்கிறது.

சென்ற முப்பது ஆண்டுகளில் சாதி வேற்றுமையும், ஏற்றத்தாழ்வுகளும் நம் நாட்டில் எவ்வளவோ குறைந்து போய்விட்டன.

பாராமை, நெருங்காமை, தீண்டாமை முதலிய அநாகரிகக் கொடுமைகள் ஒழிந்தே போய்விட்டன என்று சொல்லலாம்.

முப்பது வருஷங்களுக்கு முன்னுல் சமபந்தி போஜனம் மிகவும் அபூர்வமான செயலாயிருந்தது. சமபந்தி போஜனம் செய்தவர்கள் சிலரால் 'வீரர்கள்' என்று போற்றப்பட்டனர். வேறு சிலரால் 'பதிதர்கள்' என்று பகிஷ்காரம் செய்யப்பட்டார்கள்.

அந்த நாளெல்லாம் இப்போது ஒரு கெட்ட கனவைப் போல் மறைந்துவிட்டது. சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடும் விஷயத்தில் இப்போதெல்லாம் யாருமே சாதி வேற்றுமை பாராட்டுவதில்லை. அப்படிப் பாராட்டுகிறவர்கள் பைத்தியக்காரர்கள் என்று இந்நாளில் கருதப்படுவார்கள்.

சாதி வேற்றுமை நம் நாட்டிலிருந்து அடியோடு தொலைந்துவிட்டதாக யாரும் சொல்லமுடியாது. இன்னும் இருக்கத்தான் இருக்கிறது.

கலப்பு மணத்திஞல் மட்டுமே சாதி வேற்றுமை அடியோடு ஒழிய முடியுட் என்று அறிவாளிகள் எல்லோரும் சொல்கிருர்கள்.

இது உண்மைதான். ஆனுல், கலியாணம் என்னும் காரியத்தில், கலியாணம் செய்து கொள்கிறவர்களின் விருப்பம் ஒன்று இருக்கிறது.

மற்ற துறைகளில் சமூக முன்னேற்ற முயற்சிகள் எவ்வளவு அவசியமோ அவ்வாறே கலியாணத் துறையிலும் கலியாணம் செய்துகொள்கிறவர்களுடைய சுதந்திரம் முக்கியமானது என்பதை எவரும் ஒத்துக்கொள்வார்கள்.

சாதி வேற்றுமையை ஒழிப்பதற்காக ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயக் கலியாணம்செய்து வைக்க முடியுமா? முடியாது! அப்படிச் செய்வது முன்னேற்றத்தை நோக்கிப் போவதற்குப் பதிலாகக் காட்டு மிராண்டித் தனத்துக்குப் போவதாக முடியும்.

சமூகத்தில் ஆடவரும் பெண்டிரும் பல துறைகளிலும் சரி நிகர் சமானமாகப் பழகுவது அதிகமாக ஆக, கலப்பு மணங்களும் அதிகமாகும். .

இப்போது கலாசாலைகளிலும், காரியாலயங்களிலும், ஆடவரும், பெண்டிரும் சம சுதந்திரத்துடன் பழகுவது அதிகமாகி வருகிறது. அந்த அளவுக்குக் கலப்பு மணங்களும் நிகழ்ந்து வருகின்றன.

இம்மாதிரியே சமூக பழக்க வழக்கங்களில் மாறுதல் ஏற்பட்டுவந்தால் நாட்டில் கலப்பு மணங்களும் அதிகமாகப் பெருகி விடுவது நிச்சயம்.

திருமணம் செய்து கொள்வதில் யாரும் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது.

ஆனால் கலப்பு மணங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலையை உண்டுபண்ணி உதவலாம்.

அந்தச் சூழ்நிலை சாதி வேற்றுமையைப்பற்றி ஓயாமல் பேசுவதாலும் சாதித் துவேஷத்தை வளர்த்து வருவதாலும் ஏற்பட முடியாது.

கலப்பு மணம் செய்து கொள்கிறவர்களுக்கு உத்தியோகத்தில் சலுகை கொடுப்பதாகச் சொல்வது நகைக்கத்தக்க காரியம். உத்தியோக ஆசை காரணமாகக் கலப்பு மணம் நடந்தால், அந்த மண வாழ்க்கையும் உருப்படாது; உத்தியோகமும் உருப்படாது. தகுதியற்றவர்களே உத்தியோகத்துக்கு வருவார்கள். நிர்வாகம் சீர்கெட்டுக் குட்டிச்சுவராவதுதான் கண்ட பலனாகும்.

சாதி வேற்றுமையை இந்த நாட்டிலிருந்து ஒழிப்பதற்குக் காந்தி மகான் காட்டிய அன்பு வழி ஒன்றுதான் தக்க வழியாகும்.

காந்தி மகான் காட்டிய வழியில் நடந்தபடியால் சென்ற முப்பது ஆண்டுகளில் சாதி வேற்றுமை உணர்ச்சி வெகுவாகக் குறைந்துவிட்டிருக்கிறது. சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளில் சாதிக்காத காரியத்தைக் கடந்த முப்பது வருஷங்களில் சாதித்திருக்கிறோம். அதே அன்பு வழியைப் பின்பற்றினால் இன்னும் முப்பது வருஷத்தில் சாதி

வேற்றுமை நம் நாட்டிலிருந்து அடியோடு மறைந்தே போய் விடும்.

அன்பு வழிக்குப் பதிலாகத் துவேஷ முயற்சிகளில் இறங்குகிறவர்கள் சாதி வேற்றுமையை மேலும் நீடித் திருக்கச் செய்வதற்கே உதவி செய்து வருகிறார்கள்.

தெய்வத் தமிழ் நாட்டிலிருந்து சாதி வேற்றுமை ஒழிய வேண்டும் என்று உண்மையாக விரும்புகிறவர்கள் துவேஷப் பாதையை விடுத்து அன்பு வழியைக் கைக்கொள்வார்களாக!

# புதிய தமிழ் நாட்டிஞய்! வா! வா! வா!

பழந்தமிழ் நாடு பலவகையிலும் சிறப்புற்றிருந்தது. உழவிலும், தொழிலிலும், கலையிலும், கல்வியிலும், பண்பாட்டிலும், இறை வழிபாட்டிலும், இலக்கியச் சிறப்பிலும் ஈகைக் குணத்திலும் பழந்தமிழ்நாடு இணையற்று விளங்கியது.

ஆயிரமாயிரம் ஆண்டுகள் பழந்தமிழ் நாடு இவ்வாறு சிறப்புற்று விளங்கியது. இக்காலத்தில் சிற்சில நேரங்களிலே அரசியலிலும் பெருமை பெற்றிருந்தது. சேர சோழ பாண்டியர்களில் ஒருவர் முதன்மை பெற்று, அவர்களுடன் மற்றக் குறுநில மன்னர்கள் ஒத்துழைத்த காலங்களில் தமிழகம் பேரரசாக விளங்கி, தமிழகத்துக்கு வெளியிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தியது. காஞ்சியில் சோழ குலத்தின் கிளை வம்சத்தவராகிய பல்லவத் தொண்டைமான்கள் பேரரசாகப் பல நூற்ருண்டு ஆட்சி புரிந்தபோது தமிழ் நாடு அரசியல் மேன்மையின் சிகரத்தை அடைந்திருந்தது.

பதிஞலாம் நூற்ருண்டுக்குப் பின்னர் சுமார் ஆறு நூறு ஆண்டுகாலம் தமிழகத்தின் இருள் சூழ்ந்த காலமாகும். இந்த நீண்ட இடைவெளியில் தமிழகம் அரசியலில் போலவே மற்ற எல்லாத் துறைகளிலும் பின்னடைந்து மங்கியிருந்தது. தமிழர்கள் தங்கள் பழம் பெருமைகளை யெல்லாம் மறந்து எடுப்பார் கைப்பிள்ளைகளாக ஏனோதானோ வென்று காலந்தள்ளி வந்தார்கள்.

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் பாரத நாடெங்கும் பரவித் தழைத்துவந்த சுதந்திர ஆவேசக் கனல் தமிழகத்தையும் தொட்டது; தமிழ் நாட்டில் நீண்ட நாளாக

மங்கியிருந்த ஒளியைத் தூண்டிவிட்டது; தமிழகம் புத்துயிர் பெற்றது.

அந்தப் புத்துயிரின் சின்னமாக வ. உ. சிதம்பரனாரும், பாரதியாரும் விளங்கினார்கள். சிதம்பரனார் செயலினாலும் பாரதியார் தமது தெய்வத் தமிழ்ப் பாடல்களினாலும் புத்துயிர் பெற்ற தமிழ் நாட்டைப் பல துறைகளிலும் தழைத்தோங்கச் செய்ய முயன்றார்கள். எல்லா முன்னேற்றங்களுக்கும் அடிப்படையானது நல்ல அரசியல். ஆதலின், முதலில் அரசியல் சுதந்திரம் பெறுவதில் கவலை செலுத்தினார்கள். சுதந்திர பாரத நாட்டில் தமிழ் நாடு பல துறைகளிலும் மேன்மையுறவேண்டு மென்பதே அவர்களுடைய ஆதர்சமாக இருந்தது. அவர்களுடைய செயல்கள், சொற்கள் எல்லாவற்றிலும் இந்தச் சிறந்த இலட்சியம் சுடர் விட்டு ஒளிர்வதைக் காணலாம்.

வ. உ. சிதம்பரனாரும், பாரதியாரும் எந்த இலட்சியத்துக்காகப் பாடுபட்டு உயிர்நீத்தார்களோ, அந்த இலட்சியம் நிறைவேறும் பொருட்டு ஆயிரக்கணக்கிலும் லட்சக்கணக்கிலும் தமிழ்நாட்டு மக்கள் சென்ற ஐம்பது ஆண்டு காலத்தில் முன் வந்தார்கள். பாரத நாடு சுதந்திரம் அடையவும் செந்தமிழ் நாடு மேன்மையுறவும் பாடுபட்டார்கள். எத்தனையோ கஷ்டங்களை அநுபவித்தார்கள், எவ்வளவோ தியாகங்களைச் செய்தார்கள்.

அவர்களுடைய இலட்சியம் பரிபூரணமாக நிறைவேறுவதைக் காணாமலே அவர்களில் பலர் மாண்டு போனார்கள்.

புதிய 1954-ம் ஆண்டின் ஆரம்பத்தில் தமிழ் நாட்டில் வாழக் கொடுத்திருக்கும் நாம் அந்த மகா புருஷர்கள்—வீரத் தியாகிகளின் இலட்சியம் காரியத்தில் நிறைவேறியிருப்பதைக் காணும்பாக்கியம் பெற்றிருக்கிறோம்.

சுதந்திர பாரத நாட்டிற்குள் தமிழ்நாடு தனி இராஜ்யமாக உருவெடுத்திருக்கிறது.

1954-ம் ஆண்டின் ஆரம்பத்தில் புத்துயிர் பெற்ற புதிய தமிழ் நாட்டைக் குதுகலத்துடன் வரவேற்கிறோம்.

தனி அரசு பெற்ற புதிய தமிழ் நாட்டு மக்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

ஒளி படைத்த கண்ணும், உறுதி கொண்ட நெஞ்சும் உள்ளவர்கள். எளிமை கண்டு இரங்குகிறவர்கள், சிறுமை கண்டு பொங்குகிறவர்கள், பழந் தமிழ் நாட்டின் பெருமையை நினைத்தவர்கள், இடைக்காலத்தில் சேர்ந்த இழி தகைமைகளை மறந்தவர்கள், பார்த்தனையும் மாமல்லனையும் நிகர்த்தவர்கள், வள்ளுவரையும் கம்பரையும் போற்றுகிறவர்கள், பாடிய வாய்த்தேனூறும் பாரதி பாடல்களைப் பாடிக்கொண்டு காந்திமகான் வகுத்த பாதையில் நடப்பவர்கள்—இத்தகைய தமிழர்கள் புதிய தமிழ் நாட்டில் மல்கிப் பெருக வேண்டுமென்று விரும்புகிறோம்.

* * *

சென்ற ஐம்பது ஆண்டில் தமிழ் நாட்டின் அரசியல்—சமூக வாழ்க்கையின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் பழந் தமிழர்களிடையே சிறப்புற்றிருந்த மேன்மைக் குணங்கள் பொலிந்து ததும்பி யிருப்பதையும் காணலாம், இடைக் காலத்தில் சேர்ந்த சிறுமைக் குணங்கள் வெளிப் பட்டிருப்பதையும் காணலாம்.

தமிழர் பலர் தாய் நாட்டின் விடுதலைப் போரில் ஈடுபட்டு இணையற்ற தியாகங்களைச் செய்தார்கள்.

அச்சமயம் பார்த்துச் சிலர் தங்கள் சொந்த நலன்களைத் தேடிக் கொண்டார்கள்.

சிலர் தாங்கள் வகித்திருந்த பெரிய உத்தியோகங்களையும், விட்டு வந்தார்கள்.

வேறு சிலர் உத்தியோகங்களையும் பதவிகளையும் பற்றிக் கொள்வதில் ஈடுபட்டிருந்தார்கள்.

நமது சமயக் கோட்பாடுகளிலும், ஆலய வழிபாட்டு முறையிலும் சேர்ந்துவிட்ட குறைபாடுகளைப் போக்கச்

சிலர் நமது பழம் பெரும் சமயங்களையே கேவலப்படுத்தி ஆலயங்களையே இடித்துவிட வேண்டுமென்ற நாஸ்திகப் பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார்கள்.

" சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் "

என்ற பாரதியாரின் அருள் வாக்கினை யொட்டி, சாதி வேற்றுமைகளை ஒழிப்பதற்கும், " எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம் " என்று நிலை நாட்டுவதற்கும் முயன்று வந்தார்கள்.

அதே சமயத்தில் சாதி வேற்றுமைகளைத் தங்கள் சுய நலத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டு சாதித் துவேஷத்தை வளர்க்கவும், இல்லாத இனப் பூசல்களை உண்டாக்கவும் சிலர் பிரயத்தனம் செய்து வந்தார்கள்.

தமிழ் நாட்டையும், தமிழர்களையும் பாதுகாப்பதில் சிரத்தை கொண்ட தெய்வம் ஒன்று இருப்பதாகவே நாம் நம்பவேண்டி யிருந்தது.

அந்தத் தெய்வத்தின் தண்ணருளினால் சிறுமைக் குணங்களைப் பரப்ப விரும்பிய தீய சக்திகள் தமிழ் நாட்டில் மேலோங்க வில்லை.

பழந் தமிழ் மக்கள் உலகத்திலேயே பண்பாட்டில் சிறந்து விளங்கியவர்கள். இடைக் காலத்தில் இருளில் ஆழ்ந்திருந்தாலும் அந்த மேலான பண்பாட்டின் அடிப்படை தகர்ந்து விடவில்லை.

எது உயர்ந்தது, எது கீழானது, எது நல்லது, எது கெட்டது, எது மனிதத் தன்மைக்கு உகந்தது, எது மனிதத் தன்மையிலிருந்து மாறுபட்டது.— என்பவற்றை யெல்லாம் பகுத்தறியும் சக்தியைத் தமிழ் மக்கள் இழந்துவிடவில்லை. தமிழகத்தில் படித்தவர்கள்—பாமரர்கள் எல்லாரிடத்திலும் இந்தப் பண்பாட்டின் அடிப்படை இருந்து வருகிறது.

தீய சக்திகளின் ஆவேசப் பிரசங்கத்தினால் சில சமயம் மங்கியதாகத் தோன்றினாலும், விரைவில் மீண்டும் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

உதாரணமாக, ஒன்றைப் பார்ப்போம். பழந் தமிழர்கள் பெண்மையைப் போற்றினார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. பெண்குலத்துக்குப் பெருமை தந்தவர்களில் பழந் தமிழர்களுக்கு இணையான சாதியார் உலகிலேயே இல்லை.

பழந் தமிழ்ப் பரம்பரையில் தோன்றிய பாரதியார், "பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா!" என்று பாடினார். "தையலை உயர்வு செய்" என்று பணித்தார். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்!" என்று முழங்கினார். இன்னும் பெண் குலத்தின் உயர்வைப் பற்றிய எத்தனையோ பாடல்களைப் பாடியிருக்கிறார்.

பழந் தமிழர் பண்பாட்டின் வடிவமாக நம்மிடையே விளங்கிய திரு. வி. க. அவர்கள் பெண்ணினத்தின் பெருமை பற்றிப் பல புத்தகங்கள் எழுதினார் "பெண் தெய்வம்" என்ற சொற்றொடரை வழக்கத்துக்குக் கொண்டு வந்தார். பெண்களைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என்ற கருத்தை எத்தனையோ சொற்பொழிவுகளில் வெளியிட்டார்.

ஆயினும், இதே தமிழ் நாட்டில் தமிழர்களை முன்னேற்றப் போகிறோம் என்று பறையடித்துக் கொண்டிருப்பவர்கள் சிலர், பெண்ணினத்தைப் பற்றிச் சொல்லத் தகாத வார்த்தைகளை யெல்லாம் சொல்லிப் பெண் குலத்தைப் பெரிதும் இழிவு படுத்தி வருகிறார்கள்.

இத்தகைய கயமை வழியில் செல்லுகிறவர்கள் தமிழர் பண்பாட்டின் பிரதிநிதிகளா, அல்லது பாரதியாரும் திரு. வி. க. வும் அத்தகைய பிரதிநிதிகளா என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள்.

இம் மாதிரியே ஐயப்பாடு தோன்றக் கூடிய எந்தக் காரியத்திலும் "இதைப் பற்றி வள்ளுவர் என்ன வகுத்திருக்கிறார்? ஔவையார் என்ன கூறியிருக்கிறார்? இளங்கோவடிகள் என்ன அருளியிருக்கிறார்? பாரதியார் என்ன பாடியிருக்கிறார்? திரு. வி. க. என்ன சொல்லியிருக்கிறார்?" என்றெல்லாம் தமிழர்கள் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்வார்கள். அவர்கள் ஒரு விஷயத்தைப் பற்றி எதுவும் சொல்லியிராவிட்டால் அவர்கள் இன்று இருந்தால் என்ன சொல்லி யிருப்பார்கள் என்றும் சிந்தித்துத் தமிழர்கள் முடிவு காண்பார்கள்.

தமிழ் நாட்டில் தமிழர்களிடையில், நல்லதும் உயர்ந்ததும் மேன்மையானதுந்தான் நிலைத்து நிற்கும். தீமையும் கயமையும் இழிதகைமையும் ஒவ்வொரு சமயம் புற்றீசல்களைப்போல் வெளிவந்து வான வெளியையே மறைத்து விட்டது போல் காணப்பட்டாலும் அடுத்த நிமிஷமே இருந்தவிடந் தெரியாமல் மறைந்துவிடும்.

* * *

வ. உ. சிதம்பரனாரைப் பார்த்து ஆங்கிலேய வாஞ்சு துரை பின்வரும் கேள்விகளைக் கேட்டதாகப் பாரதியார் பாடினார் :—

"ஜாதிச் சண்டை போச்சோ—உங்கள்
சமயச் சண்டை போச்சோ ?"

"ஒற்றுமை பயின்றீரோ ?—உங்கள்
உடம்பில் வலிமை உண்டோ ?"

"சேர்ந்து வாழ்வீரோ ?—உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ ?"

"சோர்ந்து வீழ்தல் போச்சோ—உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ ?"

இந்த கேள்விகளுக்கெல்லாம் வ. உ. சிதம்பரனாரும் அவருக்குப்பின் வந்த தேசபக்தியிற் சிறந்த தமிழர்களும்

தக்க விடைகள் இறுத்தார்கள். ஆகையினாலேதான் இன்று சுதந்திர பாரத நாட்டில் சம உரிமை பெற்ற தனி இராஜ்ய மாக தமிழகம் திகழ்கிறது.

பரலி. சு. நெல்லையப்பர் அவர்களுக்குப் பாரதியார் எழுதிய கடிதம் ஒன்றில் பின்வரும் அமுத மொழிகளை எழுதினார்:—

"தம்பி! தமிழ் நாடு வாழ்க என்று எழுது. தமிழ் நாட்டிலே ஒரே ஜாதிதான் உண்டு. அதன் பெயர் தமிழ் ஜாதி, அது ஆரிய ஜாதி என்ற குடும்பத்திலே தலைக் குழந்தை என்று எழுது. ஆணும் பெண்ணும் ஒருயிர் இரண்டுடல்கள் என்று எழுது. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டோன் என்று எழுது. தொழில்கள், தொழில்கள், தொழில்கள் என்று கூவு. தப்பாக வேதம் சொல்பவனைக் காட்டிலும் நன்றாகச் சிரைப்பவன் மேற்குலத்தான் என்று எழுது. வியாபாரம் வளர்க, யந்திரங்கள் பெருக, முயற்சிகள் ஓங்குக; சங்கீதம் சிற்பம், யந்திர நூல், பூமி நூல், வான நூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந் திடுக என்று முழங்கு! சக்தி, சக்தி, சக்தி என்று பாடு...!"

வரகவி பாரதியின் இந்த ஜீவ சக்தி ததும்பவும் ஆசி மொழிகள் எல்லாம் தனி அரசு பெற்றிருக்கும் புதிய தமிழ் நாட்டில் நிறைவேற வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.